பிழைக்கும் வழி

நூல் நிலையம்,
சென்னை-600090

PRACTICAL LIFE.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்

G. A. VaidyaRaman, B. A. EDITOR.

புஸ்தகம் 4. Vol. 4. — விரோதிகிருது௵ மாசிமீ. FEBRUARY, 1912. — ஸஞ்சிகை 2. No. 2.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		Foreign. Rs. A. P.
Per annum ...	4 0 0	... ...	6 0 0
Single copy ...	0 6 0	... ...	0 8 0
Sample copy ...	0 2 0	... ...	0 3 0

RATES OF ADVERTISEMENT.

1 Page	... 5 0 0	per month.
½ do	... 2 8 0	do
¼ do	... 1 4 0	do

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompained with advance.

Notice to Contributors:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்நிய நாடு.
வருஷம் 1 க்கு ...	4 0 0	...	6 0 0
தனிப்பிரதி ...	0 6 0	...	0 8 0
மாதிரி காபி ...	0 2 0	...	0 3 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம்	ஒன்றுக்கு	5 0 0
½ பக்கத்திற்கு	,,	,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,,	,,	1 4 0

வியாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். எவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

EDITORIAL NOTES.
பத்திராதிபர் குறிப்புகள்.

Indian Cattle.

இந்தியாவின் மாடுகள்.—இந்தியாவிலுள்ள சில மாடு வர்க்கங்களின் மகிமையை நாம் கொண்டாடாதிருந்தபோதிலும் இதர தேசங்களில் அவைகளைப்பற்றி ரொம்ப மெச்சிக் கொள்ளுகிறார்கள். ஸுமார் 100 வருஷங்களுக்கு முன் ஜமெய்க்கா தீவுக்கு சில மாடுகள் கொண்டுபோகப்பட்டன. முதலில் கோவில் காளைகள் போயின. பிற்பாடு மைஸூர், குஜ்ராத், நெல்லூர், இந்த பிராந்தியங்ளிலிருந்து போயின. இந்த மாடுகளோடு அந்த தீவிலுள்ள மாடுகளைப் பொலியவிட்டதில் நல்ல திடமான மாடுகள் அங்கே உற்பத்தியாயிருக்கின்றனவாம். அங்கேயுள்ள பெரிய தோட்டங்களில் உழுவதற்கும் வண்டி யிழுப்பதற்கும் உபயோகப்படும் மாடுகள் முக்கியமாய் இந்திய மாடுகளுக்கு உண்டானவைகளே. தவிர, அங்குள்ள ஸாதாரண மாடுகளைப்பார்த்தாலும் இந்தியா மாடுகளுக்குப் பிறந்திருக்க வேண்டுமென்று நன்றாய்த் தெரிகிறதாம். இப்படி இருஜாதிக்குப் பிறந்த மாடுகள் வண்டி இழுப்பதற்கு வெகு நன்றாயிருக்கின்றனவாம். மாடுகள் சாவதும் 100-க்கு 34-லிலிருந்து 6-க்கு வந்திருக்கிறதாம். இதே மாதிரியாக, அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் ஒன்றாகிய டெக்ஸாஸுக்கு ஜமெய்க்கா தீவிலுள்ள சில இந்திய மாடுகளை அனுப்பினதில் அங்கே நல்ல பலனுண்டாயிருக்கிறதாகத் தெரிகிறது.

இன்னும் ஜமெய்க்காவிலுள்ள ஒரு விவஸாயப் பள்ளிக்கூடத்தில் பல தேசங்களிலிருந்து 28 பசுக்களை வரவழைத்து பரிசோதித்துப் பார்த்ததில் அவைகளிலடங்கிய 3 நெல்லூர்ப் பசுக்களே நல்ல லாபம் கொடுத்தனவாம். அவைகளால் ஒரு வருஷத்தில் கிடைத்த அயன் லாபம் முறையே 405 ரூ., 360 ரூ., 345 ரூ. ஆகும்.

Investment in Industries.

கைத்தொழில்களில் பணம்போடுவது.—இந்தியாவில், ஜனங்கள் பெரும்பான்மையாக பண மிருந்தால் நிலத்தை வாங்குகிறார்களே யொழிய, அதை கைத்தொழில்களில் போட்டு லாபம் ஸம்பாதிப்பதில்லை யென்று கைத்தொழில் அபிவிர்த்தியில் ஊக்கமுள்ளவர்களில் அநேகர் சொல்லுகிறார்கள். ரொம்பப் பணக்காரனாயிருக்கும் பக்ஷத்தில் அவனுக்கு முதலில் கொஞ்சம் நஷ்டம் வந்தாலும் பாதகமில்லை. ஆயிரக்கணக்காக குழைந்தைகளுக்கு ஆஸ்தி வைக்காமல் நாடோடியாய் ஜீவனஞ் செய்கிறவர்களுக்கு கைத்தொழில்களில் முதலைப்போடுவது அவ்வளவுசிலாக்கியமல்ல. நிலம் போன்ற சாசுவதமான இனங்களில்விட கைத்தொழில்களில் பணம் போடுவதால் முதலுக்கு 1 அல்லது 2 வட்டி கூடக்கட்டினாலும் கைத்தொழில்களில் போட்ட முதலுக்கு ஹானிவராதென்று சொல்ல முடியாது. கைத்தொழில்களில் போட்ட முதலுக்கு பல வகையாய் அழிவுவரக்கூடும். கைத்தொழில்களை மேன் பார்த்து நிர்வகிக்கிறவர்கள் இறந்துபோய்விட்டால், தற்காலத்தில் இந்தியாவில் அவர்களுக்கு ஸமானமான திறமையும் யோக்கியதையும், நாணயமும் உள்ள நிர்வாகிகள் அகப்படாமல் போய் நஷ்டம் வரலாம். வேலைக்காரர்களின் தொந்தரவினாலும் நஷ்டம் வரலாம். உதாரணமாக, இங்கிலாந்தில் ரெயிலில் வேலையாயிருக்கிறவர்களுடைய கட்டுப்பாட்டினாலும், நிலக்கரி வெட்டியெடுக்கும் வேலையாட்களின் கட்டுப்பாட்டினாலும், ரெயில்வே கம்பெனிகளுக்கும் இன்னும் பல வியாபாரக் கம்பெனிகளுக்கும் பெரும் நஷ்டமுண்டாய் விட்டது.

தவிர, கைத்தொழில்களில் அடிக்கடி யந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, ஸாமான்கள் செய்யும் முறையில் மாறுபாடுகள் ஏற்படுகின்

றன. முன்னால் கையால் செய்துவந்த வேலை களை வர வர யந்திரங்களைக் கொண்டு செய்து விடுகிறார்கள். முன்காலத்தில் வண்டிகளை மாடு களையும் குதிரைகளையும் பூட்டி இழுக்க, ரெயில் உண்டான பிறகு அவைகளை எத்தனைபேர்கள் உபயோகிக்கிறார்கள்? இப்போது நீராவி சக்தியால் இழுக்கப்படும் ரெயில்வண்டிகளை சில இடங்களில் மின்ஸார சக்தியைக்கொண்டு இழுக்க ஆரம்பித்துவிட்டார்கள். இன்னும் மின்ஸார சக்தியை யொழித்து விட்டு சூரியனுடைய சக்தியை உபயோகித்து யந்திரங்களை இயக்கிவிடலாமென்று பல இஞ்சினியர்கள் பரிசோதனைகள் செய்து வருகிறார்கள். இந்த மாதிரியாக நாளுக்குநாள் புது யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு முன்னால் வாங்கின யந்திரம் கொஞ்ச காலமானதும் உபயோகப்படாமல் வேறு யந்திரங்கள் முதலியவை வாங்கும்படி ஏற்படுவதால், இதனாலும் கைத்தொழில்களில் போடும் முதலுக்கு நஷ்டம்வர ஹேது உண்டு.

மேற்சொன்னவைகளைக் கொண்டு கைத்தொழில்களில் பணம் போடக்கூடாதென்று சொன்னதாக அர்த்தம் கொள்ளக் கூடாது. அவைகளெல்லாம் பெருத்த முதலாளிகள் செய்யவேண்டிய வேலைகள். சிறு முதலாளிகள் எப்பொழுதும் முதலுக்கு ஹானிவராத அம்சங்களிலேயே முதலை உபயோகிப்பது புத்திசாலித்தனமாகும்.

Bamboo.

மூங்கில்:—கடவுள் கிருபையால் இந்தியாவில் விலையுள்ள பதார்த்தங்கள் எவ்வளவோ அமைந்திருக்கின்றன. அவைகளை யெல்லாம் முதலாளிகள் ஊக்கத்தோடு பார்த்திருந்து எதைக்கொண்டு எவ்வளவு லாபம் ஸம்பாதிக்கலாமோ அவ்வளவையும் ஸம்பாதிக்க கண் விழித்தவர்களாயிருக்கவேண்டும். இப்படிப் பட்ட பொருள்களில் மூங்கில் ஒன்று. இதற்கு இனிமேல் ரொம்ப கிராக்கி ஏற்படும்போல் தோன்றுகிறது. ஜப்பானியர்கள் இதை பல விதமாக உபயோகித்து நல்ல லாபம் ஸம்பாதிக்கிறார்கள். அமெரிக்காவைச் சேர்ந்த பிலிப்பைன் தீவில் மூங்கில்களால் தொப்பிகள் செய்வது அங்குள்ள வீடுகளில் ஒரு கைத்தொழிலாகும். வேலையெல்லாம் கையாலேயே செய்யப்படுகிறது. இந்தத் தொப்பிகள் முக்கியமாக ப்ரான்ஸ் தேசத்திற்குப் போகின்றன. 1909 ஹூ த்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட 142,480 டாலர்கள் (ஒரு டாலர் என்பது ரூ. 3-2-0) பெறுமான 440,842 தொப்பிகளில், 73,327 டாலர்கள் பெறுமான 227,603 தொப்பிகள் ப்ரான்ஸ் தேசத்திற்குப் போயின. இந்தத் தொப்பிகளை அமெரிக்கா ஐக்கிய நாட்டு தேசங்களிலும் வாங்கத் தொடங்கி யிருக்கிறார்கள். 1910 ஹூ த்தில் மொத்தத்தில் 276,309 டாலர்கள் பெறுமான 600,486 தொப்பிகள் வெளிதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தத் தொப்பிகளை யெல்லாரும் பிரியப்பட்டுவாங்குவதாலும், அவைகளின் விலை மலிவாய் இருப்பதாலும், வர வர இந்தத்தொழில் விர்த்தியாகு மென்பதற்கு ஸந்தேகமில்லை. இந்தத் தொப்பிகளை ஓய்வுகாலங்களில் வீடுகளில் ஸ்திரீகளும், குழந்தைகளும் செய்கிறார்கள். அதனால் விவஸாயத்திற்கு ஒரு குந்தகமுமில்லை. இது நம்தேசத்திற்கும் நல்ல கைத்தொழிலாகு மென்று தோன்றுகிறது.

மேற்க, மூங்கிலை காகிதம் செய்வதில் உபயோகப்படுத்தினால் நல்ல லாபம் வருமென்று தோன்றுகிறது. நாகரிகம் விர்த்தியாக ஆக, பேப்பர்ச்செலவு அதிகமாகத்தானாகும். ஆகையால் அதைச்செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள்களில் பணம் போடுவது நல்ல லாபந்தருமென்று தோன்றுகிறது. 1904ம் ஹூத்தில் பர்மா

வில் மூங்கிலிலிருந்து காகிதமும் காகிதத்துக்கு வேண்டிய மசியலும் செய்யக்கூடுமோவென்று அந்தத் தொழில்களில் நிபுணரான ஆர். டப்ளியு வின்டால் என்பவர் சில பரிசோதனைகள் செய்து பார்த்து மூங்கில்களிலிருந்து காகிதம் செய்வதற்கான மசியல் செய்யலாமென்றும், அப்படிச்செய்து இங்கிலாந்துக்கு அனுப்பும் பக்ஷத்தில் நல்ல லாபம் கிடைக்குமென்றும் சொன்னார். இதுவரையில் இந்த மசியலை வெளுப்பாக்குவதில் கொஞ்சம் சிரமம் இருந்தது. அது இப்பொழுது நீங்கி விட்டதாகத் தெரிகிறது. புது முறைப்படி வெளுத்துப்பார்த்ததில் அந்த மசியலிலிருந்து நல்ல காகிதம் செய்யக்கூடியதாயிருக்கிறதாம். அதனால் செய்யும் காகிதம் வேண்டியபடி மடங்கக்கூடியதாயும், எளிதில் கிழியாததாயும், ஒரு பக்கத்தில் அச்சிடுவது மற்றொரு பக்கத்தில் தெரியாததாயும், நிறம் மாறாததாயும், வேறு அதே எடையுள்ள காகிதத்தைவிட பருமனாயும், எழுதுவதற்கும் அச்சிடுவதற்கும் ரொம்ப நேர்த்தியானதாயும், இருக்கிறதாம். இப்படிப்பட்ட குணங்களெல்லாம் கெடாதிருக்க வேண்டுமானால் காகிதத்திற்கு வேண்டிய கூழை மூங்கில் வளரும் இடங்களுக்கு ஸமீபத்திலேயே செய்யவேண்டுமாம். பேப்பர் செய்வதில் நிபுணரான எச். வின்ஸென்ட் என்னும் ஒரு அமெரிக்கர் ஸரியாக மட்டும் வேலையைச் செய்தால் மசியலை வெளுத்து அதன் விலையை டன் ஒன்றுக்கு 90 ரூபாய்க்குள்ளேயே அடக்கி விடலாமென்றார். இதற்கு குறைந்தது 150 ரூ. கிடைக்கும். வெளுக்காத மசியலை லண்டனில் கொண்டுபோய்ச் சேர்க்க டன் 1-க்கு 112½ ரூ. யாகுமென்று வின்டால் மதிப்பிட்டிருக்கிறார். அதற்கும் நல்ல விலை யகப்படுமென்றும் சொல்லியிருக்கிறார். ஆகவே, முதலாளிகள் இந்தத் தொழிலில் லாபம் கிடைக்குமாவென்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

Indian Industries and English Capitalists.

இந்தியத் தொழில்களும் ப்ரிட்டிஷ் முதலாளிகளும்.—ஸமீபத்தில் லண்டன் வியாபாரிகள் கூடிய கூட்டமொன்றில் ஸர் தியடோர் மாரிஸன் இந்தியாவில் தொழில்கள் அபிவிர்த்தியானால் அது ப்ரிட்டிஷ் முதலாளிகளை எப்படிப் பாதிக்கும் என்ற விஷயமாய் ஒரு ப்ரஸங்கம் செய்தார். ஸர் தியடோர் மாரிஸன் இப்போது இந்தியா கௌன்ஸிலில் ஒரு மெம்பராயிருக்கிறவர். அதற்கு முன்னால் அவர் அலிகார் மகமதியக் காலேஜில் ப்ரின்ஸிபலாயிருந்தவர். இந்தியா விஷயங்களில் அவர் நிபுணரென்று பேர்பெற்று லார்ட் மார்லியின் விசேஷ விசுவாஸத்தால் இந்தியா கௌன்ஸிலில் மெம்பராயிருக்கிறார். அவர் செய்த பிரஸங்கத்தின் ஸாரம் பின்வருமாறு. இந்தியா ஒரு தொழிற் புரட்சியின் ஆரம்பத்திலிருக்கிறது; அதன் முதற் பலனாக ப்ரிட்டனிலுள்ள முதலாளிகளுக்கும் வியாபாரிகளுக்கும் ஸாதனங்களுண்டாகும். இந்தியாவில் தொழிற் புரட்சி ஒருமுறை நேரிடுமானால், இந்தியர் அவர்களுக்கு வேண்டிய மூலதனத்தை இங்கிலாந்தில் கடனாக வாங்குவார்கள். ஆனால் இப்படி வாங்கின கடன் தொகையை ப்ரிட்டிஷ் கைத்தொழிற் ஸாமான்களை வாங்குவதில் உபயோகப் படுத்துவார்களாவென்று ஸர் தியடோர் மாரிஸன் கேட்டார். இந்தியர் எத்தேசத்தில் தொழிற் பயிற்சியைப் பெற்றார்களோ அத்தேசங்களிலிருந்தே அந்த ஸாமான்களை வாங்குவார்களென்பது நிச்சயம். ப்ரிட்டிஷ் வர்த்தகர்கள் இந்தியாவில் தொழில்களை ஆரம்பித்து நடத்தும் தலைவர்கள் இங்கிலாந்தில் தொழிற் பயிற்சி பெற வேண்டுமென்று கவலைப் படுகிறதில்லை. அவர்களுடைய தொழிற்சாலைகளில் இந்தியர்களைச் சேர்க்காமல் இந்தியர் வேறு தேசங்களில் அப்ரென்டிஸ் (உமைதிவார்) களாய்ப் போய் விடும்படி செய்கிறார்கள். இது விவேகமல்ல. ஆகையால், லண்டன் சேம்பர் ஆப்காமர்ஸ் இந்திய மாணவர்களைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தாலும், அவர்களை அன்னிய தேசங்களுக்கு விரட்டி விடுவதிலிருக்கும் அபாயத்தை அறிவார்களென்று நம்புவதாதச் சொன்னார்.—சு. மி.

Exemption from Incometax.

இன்கம்டாக்ஸிலிருந்து விலக்கு.—தற்போது விவஸாயமல்லாது வேறு விதமாய் வருஷம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வரும்படியுள்ளவர்களுக்கு கவர்ன்மெண்டில் இன்கம்டாக்ஸ், அதாவது வருமான வரி, போடுகிறார்கள். இப்போது அகவிலை விகிதங்கள் ரொம்பவும் ஏறியிருப்பதால் நடுத்தரக் குடித்தனக்காரர்களுக்கு ரொம்பகஷ்டமாயிருக்கிறதென்றும், ஆதலால் 1500 ரூ. வரும்படி வந்தாலொழிய இன்கம்டாக்ஸ் கொடுக்கவேண்டியதில்லையென்றும், பிரேரித்து நாளது பிப்ரவரி மீ 23உ கூடிய இந்தியா சட்ட ஸபையில் கனம் தாதாபாய் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதனால் இந்தியா முழுவதும் தள்ளுபடியாகக் கூடிய வரி 30 லக்ஷம் ரூபாயாகும். ஆனால் அந்தத் தீர்மானம் அடிபட்டுப்போய்விட்டது. அது அடிப்பட்டுப்போனது ரொம்ப ஸரியென்று தோன்றுகிறது. இந்தியாவிற்கு அபினியிலிருந்து இப்போது கிடைக்கும் பெருத்த வரும்படியானது இன்னும் சில வருஷங்களில் நின்றேபோய்விடும். வர வர, ஜனங்களை படிப்பிப்பதற்காகவும் அவர்களுக்கு வேண்டிய ஸுகாதார வழிகளை ஏற்படுத்துவதற்காகவும், ரொம்பப் பணம் வேண்டியிருக்கும். இப்படியிருக்க, தற்போது இன்கம்டாக்ஸால் கிடைக்கும் 30 லக்ஷ ரூபாயைத்தள்ளிவிடவேண்டுமென்று சொல்வது ஸரியல்ல. நடுத்தரக்குடும்பங்கள் கஷ்டப்படுவது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனால் இவர்களைவிட இன்னும் அதிகக் கஷ்டப்படுகிறவர்கள் விவஸாயிகள். நாம் போன மீத்தில் எழுதியபடி, இவர்கள், கிடைக்கிற வரும்படியில்,பாதிக்குமேல் ஸர்க்காருக்கு வரியாக்க் கொடுக்க வேண்டியிருக்கிறது. மேற்சொன்ன பிரகாரம் இன்கம்டாக்ஸைத் தள்ளி கனம் தாதாபாய் உதவிசெய்ய உத்தேசிக்கும் ஜனங்களோ அப்படிப்பட்டவர்களல்ல. இவர்களெல்லாரும் உத்தியோகங்களிலிருந்து மாஸா மாஸம் சம்பளம் வாங்குகிறவர்களும், லேவாதேவி செய்கிறவர்களும், முதலாளிகளும்,வியாபாரிகளும், வக்கீல்களும், வைத்தியர்களும், ஆகிய இப்படிப்பட்ட தக்க வரும்படியுள்ளவர்கள். இவர்கள் எல்லாரும் இப்போது ஸர்க்கார்ச் செலவிற்காக விதிக்கப்படும் வரிகளுக்கு சொல்பமாகத் தான் கொடுக்கிறார்கள். பொதுச் செலவிற்கு வேண்டிய பணத்தை தனவான்களிடத்திலிருந்து வசூல் செய்வதற்கு தற்போது இந்தியாவில் இன்கம்டாக்ஸ் ஒன்றுதான் இருக்கிறது. இங்கிலாந்திலும் இந்த வரிதான் முக்கியமானவரி. ஆகையால் இந்தியாவில் இன்கம்டாக்ஸை சாசுவதமான வரியாக வைத்துக்கொண்டு ஒரு பொழுதும் குறைக்காமல் ஸமயோஜிதப்படி ஏற்றத்தக்க வரியாக வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்கம்டாக்ஸால் தக்க மனிதர்களுக்கு தொந்தரவு உண்டாகிறதென்பதை நாம் மறுக்கவில்லை. அது, ஸாமான்களின்மேல் போட்டு வஸூலாகும் வரிகளைப் போலல்லாமல், வரிகொடுக்கும் ஒவ்வொருவரையும் நேரில் நிர்ப்பந்தித்து வாங்கும் வரியாதலால் அதனால் உண்டாகும் துன்பம் ஒரு நாளும் நீங்காது. இன்கம்டாக்ஸ் விதிப்பதில் பல அநியாயங்களும் பொய் புரட்டுகளும் நடக்கின்றனவென்று ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். அதற்காக நாம் செய்யக்கூடியதெல்லாம் இப்படி அநியாயங்கள் நடக்கா திருக்கும்படிக்கு தகுந்த வழிகளை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். இந்த இன்கம்டாக்ஸ் விஷயமாக இன்னொரு தடவை எழுதுவோம்.

Boys' Corn Club.

பையன்களின் விவஸாய கிளப்.—விவஸாயமே முக்கிய ஜீவாதாரமாயுள்ள இந்த நாட்டில் ஒரு கதிர் விளையும் இடத்தில் இரண்டு கதிர்களை விளையும்படி செய்பவனே பேருபகாரியாவான். கவர்ன்மெண்டு உள்பட, விவஸாயத்தில் ஊக்கமுள்ள பலபேர்கள் இப்படிச் செய்ய முயன்று வருகிறுர்கள். இந்த உத்தேசத்தை நிறைவேற்ற பல வழிகள் உண்டு. அவைகளில் பையன்களின் விவஸாய சங்கங்கள் ஒன்று.

இந்த சங்கங்களின் மூலமாய் அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களில் விவஸாயம் ரொம்ப முன்னேறி வருவதாகத் தெரியவருகிறது. அங்கே ஸராஸரியில் ஏகர் என்றுக்கு $25\frac{1}{2}$ புஷல் தானியந்தான் விளைகிறது. அதே நிலத்தில் அதே செலவில் 50 புஷலும், 100 புஷலுங்கூட விளைவிக்கலாமாம். ஏனென்றுல் சில நிலங்களில் 100 புஷல்கள் எடுக்கிறுர்களாம். மற்றவர்கள் அப்படி எடுக்காததற்குக் காரணம் என்னவென்றுல் அவர்களுக்குத் தெரியாததே.

பல வருஷங்களாக அந்த மாகாணத்து விவஸாய டிபார்ட்டுமெண்டார் தானியங்களைப் பற்றி பலவித ஆராய்ச்சிகள் செய்திருக்கிறுர்கள். விதை பொறுக்கி எடுத்தல், நாற்றங்காலை சீர்ப்படுத்தல், ஊழல் பயிர் செய்யாமல் செவ்வையாய்ப் பயிர் செய்தல், இப்படியாய் காசுச் செலவில்லாமல் ஜாக்கிரதையையும், புத்தியையும் உபயோகித்து விவஸாயத்தை எப்படி லாபகரமாய்ச் செய்யலாமென்று கண்டு பிடித்திருக்கிறுர்கள். இவ்வைகளை யெல்லாம் துண்டுப் பத்திரங்களில் அச்சிட்டு ஊரூராய் எங்கே பார்த்தாலும் இறைத்திருக்கிறுர்கள். சில இடங்களில் இவைகள் பிரயோஜனப்பட்டிருக்கின்றன. ஆனல் வெகு இடங்களில் அவைகள் பிரயோஜனப்படவில்லை.

சில வருஷங்களுக்கு முன்னல் சில கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களை விவஸாயிகளிடத்தில் அனுப்பி அவர்களுக்கு ஸர்க்கார் முறையைச் சொல்லிக் கொடுத்து அதின்படி அதிகச் செலவில்லாமல் விவஸாயம் செய்து பார்க்கச் சொல்லி முயற்சித்து வந்தார்கள். இப்படிச் செய்துபார்த்தும விவஸாயத்தை சுலபமாய் சீர்ப்படுத்த முடியவில்லை. ஆகவே, ஒரு புது யுக்தியாக பையன்களைச் சேர்த்து விவஸாய சங்கங்கள் ஏற்படுத்தத் தொடங்கினுர்கள். ஏன் பையன்களைப் பிடித்தார்களென்றுல், பெரிய விவஸாயிகளைப் பிடித்து அவர்களுக்கு புது முறை சொல்லிக்கொடுப்பதில் ரொம்ப கஷ்டங்களிருக்கின்றன. அவர்களுக்கு புதிதான விஷயமொன்றைச் சொன்னல் அதற்கு அனுபோக பூர்வமாய் ஏற்பட்டதென்று பல குதர்க்கங்களும் ஆக்ஷேபனைகளும் பேசுவார்கள். பையன்களாயிருந்தால் அவர்கள் சொன்னபடி செய்வார்கள். ஆகையால்தான் ஐக்கிய நாட்டு விவஸாய அதிகாரிகள் பையன்களைச் சேர்த்து விவஸாய சங்கம் ஏற்படுத்தியது.

இந்த அதிகாரிகள் என்ன செய்வார்களென்றுல் விவஸாய சங்கங்களைச் சேர்ந்த பையன்களுக்கு விதை பொறுக்குதல், எருக்களின் குணம், அவைகளை உபயோகிக்கும் முறை, ஸாகுபடி செய்யும் விதம், இப்படி பல விஷயங்கள் அடங்கிய துண்டுப் பத்திரிகைகளை முதலில் அனுப்புவார்கள். இவைகளையெல்லாம் பிள்ளைகள் நன்றுய்ப் படித்துக் கொள்வார்கள். பிறகு ஸாகுபடி காலம் வந்ததும் பையன்கள் விதைகளைப் பொறுக்கி எடுத்து, சில சுலபமான வழிகளால் அவைகளின் முளைக்கும் சக்தியை அறிந்துகொண்டு, தானியத்தின் விருத்தாந்தங்களை ஆதிமுதல் அந்தம் வரைக்கும் பூராவாய்ப் படித்து அறிந்து கொண்டிருப்பார்கள், பிறகு விவஸாய இலா

கா உத்தியோகஸ்தர்கள் உழவு, நடவு, முதலியவைகளை, கூட வந்திருந்து நடப்பிப்பார்கள். பிறகு அங்கங்கேயுள்ள ஸர்க்கார் ஸ்கூல் உபாத்தியாயர்களையும், வியாபாரிகளையும், விவஸாயத்தில் ஸம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களையும் கவர்ன்மெண்டார் வேண்டிக் கொண்டு, அவர்கள் பயிர் வளர்வதை மேன் பார்வை பார்த்து வருவார்கள்.

ஒவ்வொரு பையனுக்கும் ஒரு ஏகர் நிலம் கொடுப்பார்கள். அதற்கு கூலி எவ்வளவு, எரு எவ்வளவு என்று தண்டிதமாகக் கணக்கு வைக்கவேண்டும். பையனே வேலை செய்யும் பக்ஷத்தில் அவனுக்கு மணி ஒன்றுக்கு ஐந்தணா வீதம் சம்பளம் போட்டுக் கணக்கெழுதுவதோடு, குதிரை ஏதாவது வேலை செய்யும் பக்ஷத்தில் அதற்கு $2\frac{1}{2}$ அணா வீதமும் கணக்கெழுதிவிடவேண்டும். ஸாதாரண நிலத்திற்கு ஏகர் ஒன்றுக்கு 15 ரூபா வாடகையும், ஒரு குதிரை தூக்கக்கூடிய ஒரு மூட்டை எருப் போடும் பக்ஷத்தில் அதற்காக 3 ரூபாயும் செலவில் எழுதிவிடவேண்டும்.

கடைசியில் மாசூல் அறுவடையான பிறகு முதல்தரப் பயிருக்கு 100 மார்க்கு என்று வைத்துக்கொண்டு, உயர்ந்த விளைவுக்கு 30 மார்க்கும், 10 வருஷத்துப் பயிரில் முதன்மையானதற்கு 20 மார்க்கும், ஸாகுபடியைப் பற்றிய முதல்தரமான கணக்குக்கு 20 மார்க்கும், போட்ட முதலுக்கு உயர்ந்த லாபம் கொடுக்கும் பயிருக்கு 30 மார்க்கும், ஆக இப்படி 4 இனங்களிலும் அந்தந்தப் பயிருக்குத் தக்கபடி மார்க்குக் கொடுத்து பரீக்ஷை செய்வார்கள். இப்படி ஒரு ஜில்லாவில் ஏற்பட்ட முதல் தரக் கணக்குகளையும், மற்ற ஜில்லாக்களில் ஏற்பட்ட அதே தினுஸான கணக்குகளையும் ஒற்றுப்பார்த்து கவர்ன்மெண்டார் ஒரு கணக்கு ஏற்படுத்தி யிருக்கிறார்களாம்.

அங்கங்கேயுள்ள வர்த்தகர்களையும் பணக்காரர்களையும் கொண்டு மேற்கண்ட முதல் தரப் பயிர்களுக்கு பணமோ, விவஸாயத்துக்கு வேண்டிய ஆயுதங்களோ, அந்தந்தப் பையன்களின் இஷ்டப்படி இனாம் கொடுக்கும்படி செய்வார்கள். 2வருஷத்துக்கு முன்னால் நாலு மாகாண கவர்ன்மெண்டார் ஐக்கிய நாடுகளின் முக்கியப்பட்டணமாகிய வாஷிங்கடன் நகரத்துக்கு போய் வருவதற்குள்ள செலவுத்தொகையை அந்தந்த மாகாணத்தில் முதல் தரப் பயிர் செய்தவர்களுக்கு இனாமாகக் கொடுத்தார்கள். இப்படி இனாம் பெற்ற பையன்களில் நாலு பையன்கள் வாஷிங்டனுக்குப்போய் அங்குள்ள விவஸாய இலாகாத் தலைவரைப்பார்த்து ஸர்ட்டிபிகேட்டுகள் பெற்றார்கள்.

போன வருஷத்தில் மேற்சொன்ன மாதிரியாக 11 மாகாணங்களில் 46,225 பையன்கள் போட்டி போட்டுக்கொண்டு தானியம் விளைவித்தார்களாம். அந்தந்த மாகாணத்தில் முதலினாம் வாங்கினபையனை அந்தந்த மாகாணத்து கவர்னர் போய் பார்த்தாராம்; அவர்கள் செய்த பயிர்களின் விருத்தாந்தங்களை யெல்லாம் அந்தந்த மாகாணத்து கவர்ன்மெண்டு ஆபீஸிலும் ஜில்லா சந்தைகளிலும் எடுத்துச் சொன்னார்களாம். இப்படியாக முதல் இனாம் பெற்ற பையன்கள் வாஷிங்டன் நகரத்துக்குப் போனபோது, அந்தந்த ஊர்களில் பிரமாதமாக ஜனங்கள் கூடி வெகு குதூகலமாக அவர்களை வழியனுப்பினார்களாம். இந்த பதினொரு பேர்களையும் வாஷிங்டனில் விவஸாய இலாகாத் தலைவர் வரவேற்று, அவர்களுடைய வேலைத் திறமையையும், அதனால் பொது ஜனங்களுக்கு உண்டாகும் நன்மைகளையும் பற்றி மெச்சிப்பேசி, அவர்களுக்கு ஸர்ட்டிபிகேட்டுகள் கொடுத்தார். இந்த 11 பேர்களும் ஐக்கிய மாகாணத்தின் கவர்ன்மெண்டுக்குத் தலைவராகிய ப்ரெஸிடெண்டு டாப்டைப் போய்ப் பார்த்தபொழுது அவர் இவர்களை பெரிய விருந்தாளிகளாக எண்ணி மரியாதைகள் செய்தாராம். இப்படி நடக்கும் பந்தயங்களில் ஸராஸரி விளைவைவிட முதல்தர இனாம் பெற்றவர்கள் 4 மடங்கு முதல் 7 மடங்குவரையில் அதிகமாக தானியங்கள் விளைவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

How to Live Happy

BY

V. S. SWAMINADHA DIKSHITAR, B. A., L. T.

சுகமாய் வாழ்வது எப்படி?

"பிழைக்கும் வழி" என்னும் பத்திரிகையைப் படித்து அதிற் சொல்லப்படுபவைகளை அவரவர் தொழிலுக்கேற்ப அனுஸரித்து நடப்பவர்களுக்கு பொருட்செல்வம் சுலபமாய் ஸித்திக்கும் என்பது நன்றாய் விளங்குகிறது. அப்பொருளால் மற்ற அறம் இன்பம் என்னும் புருஷார்த்தங்களும் ஸுலபமாய்க் கிடைக்குமென்பதைத் திருவள்ளுவநாயனார்,

> ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருள்
> ஏனை யிரண்டு மொருங்கு'

என்னுங் குறளில் கூறி இருக்கிறார். ஆகிலும் பொருளுடைமையினாலேயே ஒருவன் ஸுகஜீவியாவானா என்று சற்று விசாரிப்போம்.

எந்த உபாயத்தை அனுஸரித்து எப்படி நடந்தால் ஒருவன் ஸுகஜீவியா யிருக்கலாம் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கோல்வா என்னும் பிராஞ்சு பத்திராதிபருக்கு ஒரு விருப்பமுண்டாகி பிராஞ்சுதேசத்திலுள்ள முக்கியமான கனவான்களைக் கேட்டார். அக்கேள்விக்குப் பலர் பலவிதமான விடை அளித்திருக்கிறார்கள்.

ஸெனேட் என்னும் ஆலோசனை சங்க அங்கத்தினரில் பேர்போன ஒருவர் இகலோக ஸுகவாழ்க்கையின் ரகஸ்யம் கிறிஸ்துமத வினாவிடையில் நன்றாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், அது பக்தி, நம்பிக்கை, தர்மம் என்னும் மூன்றில் அடங்கும் என்றும் சொன்னார்.

ப்ரஸித்திபெற்ற வக்கீலொருவர், ஸுகமாய் வாழ நல்ல குணமும், நல்ல ஜீரணசக்தியும், நல்ல சிநேகிதர்களும் வேண்டும் என்று தெரிவித்தார். கியாதிபெற்ற பத்திராதிபரொருவர், தினந்தோறும் ஸாயங்காலம் நாடகம் பார்க்கப்போவதே ஸுகஜீவனோபாயமென்று அபிப்பிராயப்பட்டார்.

செம் என்னும் சீமானொருவர், பூரண ஸுகத்தோடுவாழ இச்சிப்பவன் அஸ்ரமுடனுயிருக்கவேண்டும், என்று சுருங்கச் சொல்லிவிட்டார்.

நமது உலக வாழ்க்கையை மேன்மைப்படுத்துவது ஸுகத்தைத் தேடுந் தொழிலேயல்லவா? நாம் ஸுகத்தைக்காணாவிட்டாலும் அதைத் தேடுவதே நம்மனதைக் குளிரச் செய்கிறது என்று வேறொருவர் தெரிவித்தார்.

பால்யத்தில் கடவுள் வழிபாடும், கிழவயதில் குந்தியிருக்க ஒரு மூலையும் இருந்தால் அதுவே ஸுகம் என்றும், ஸ்வதர்மத்தை அனுஸரித்து நடப்பதே ஸுகவாழ்க்கைக்கு நல்லவழி யென்றும் சிலர் அபிப்பிராயம்.

நேர்மை, சுத்தம், சாந்தம், நிதானம் என்னும் குணங்கள் நிறைந்து, விஷயங்களை நன்றாய் உணர்ந்தறிந்து, எல்லாரையும் சிநேகித்து அவரால் சிநேகிக்கப்பட்டு, ஒரே மதத்தையும் இரண்டு மூன்று முக்கிய கோட்பாடுகளையும் அனுஸரித்து ஸ்வதர்மம் தவறாமல் நடப்பதே ஸுகஜீவனத்திற்குத் தக்க உபாயமாகும்; என்று ஒருவர் தெரிவித்தார்.

இவ்விடைகளைப் பார்த்தால் ஒருவர் சொல்வதுபோல் வேறொருவர் சொல்லவில்லை.

எல்லாவற்றையும்சேர்த்து ஊன்றிப்பார்க்குமளவில் முதற் சொன்னவிடையே ஏற்றுக்கொள்ளத் தக்கதென்றும், தெய்வ பக்தியும், தன் முயற்சியால் ஸுகமாய் வாழலாம் என்ற நம்பிக்கையும், தன் தர்மம் அல்லது கடமையைச் செய்வதில் அபிமானமும் உறுதியும் இல்லாதார்க்கு இவ்வுலகத்தில் ஸுகமில்லையென்பதும் நன்றாய் விளங்கும்.

வி. எஸ். ஸ்வாமிநாத தீக்ஷிதர்.

BAMBOO CULTIVATION

BY

T. S. KANAKASABHAI.

மூங்கில் பயிற்செய்தல்.

மூங்கில் விதை எடுத்தல்:—ஸுமார் ஐம்பது அல்லது அறுபது வருஷஞ் சென்றபிறகு மூங்கில் ஸகஜமாய் பூக்க ஆரம்பிவிக்கும். அப்பூவானது சிலகாலத்திற்குப்பிறகு விதையாகி முற்றிக் கீழே உதிரும். உதிர்ந்த விதையைக் கூட்டியள்ளி வந்து நன்றாகக் காயப் போட்டு, தரன்னியில் தூற்றிப்புடைத்து மறுபடியும் காயவைத்துக் கொள்ள வேண்டும். விதையெடுப்பதில் நல்லஜாதிமூங்கிலாவென்று பார்த்துக் கொள்வது உத்தமம்.

விதை தெளிக்க வேண்டிய நிலம் :—விதை தெளிக்கிற நிலம் அதிக மணற்பாங்காகவும் அல்லது அதிக களிமண் பூமியாகவுமில்லாமல் இருமண் பூமியாக இருக்கவேண்டும். அந்நிலத்தை இரண்டுஜாண் ஆழம் நன்றாய் வெட்டிப் புறட்டி அதிலுள்ள கட்டிகளை அடிக்க வேண்டும். பிறகு ஒருகுழி (144-சதுர அடி) நிலத்திற்கு கலம் பிடிக்கும் கூடையால் நாலுகூடை எருப்போட்டுப் புறட்டி நான்கு பாத்தியாகக் கட்டவேண்டும். இவ்வாறுதயார்செய்தநிலமே விதை விடுவதற்கு ஏற்ற நிலம்.

விதை விடும் விதம் :—மேற்கூறியபடி தயாரான ஒரு குழி நிலத்தில் அரைமரக்கால் (பட்டணம்படி ஒன்று) விதைதெளிக்க வேண்டும். பிறகு 6-மரக்கால் எருவுடன் மூன்று மரக்கால் மண்சேர்த்துக்கலந்து விதையின்மேல் தெரிந்துந்தெரியாததுமாய் வீசிவிட வேண்டும். அப்படி செய்தவுடன் மிளகாய் முட்டுக்குப் போடுவதுபோல் விதைவிட்ட நிலத்தின் மேல் நன்றாய் மூட்டம்போட்டு அதன் பேரில் உள்ளே சாரும்படி ஜலம் தெளிக்கவேண்டும்.

ஜலம் தெளிக்கும் வகை :—விதை விட்ட பிறகு ஒன்று விட்டொருநாள் ஜலம்தெளிக்க வேண்டும். ஏழாம்நாள் முளைகாணும். அன்று மாலை ஜலம் உள்ளே நன்றாய்ச் சாரும்படி மூட்டத்தின்மேல் விட்டு மூட்டத்தைப்பிரிக்கவேண்டும். பிறகு மூன்றுநாளைக்கு ஒன்றை விட்டொரு நாள் சீராய்த் தண்ணீர் தெளித்து வரவேணும். முளைத்த இரண்டுவாரத்திற்குப் பிறகு தண்ணீர் பாய்ச்சலாம்.

முளை வந்து மூட்டம் பிரித்தவுடனே அனுஸரிக்கவேண்டியஎச்சரிக்கை:—முளைகிளம்பிப் பத்துப் பன்னிரண்டு நாள்வரைக்கும் ஒரு ஆள் அம்முளைகளை, அணில், கன்று, குருவி இவைகள் தின்னாதபடி வெரட்டிக் கொண்டு உட்கார்ந்து இருக்க வேண்டியது. இல்லாவிடில் செலவழித்தகாசும் பட்டபாடும் வீணே. ஏனெனில், குருவி அணில் இவைகள் கூட்டங் கூட்டமாய் வந்து முளைகளைப்புறட்டி வேரைத் தின்னுவிடும். ஆகையால் கஷ்டத்தைப் பாராமலும் ஆலசியமாயிராமலும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டியது அத்தியாவசியம் "பாடின்றிப் பணமுமில்லை சுகமுமில்லை" யென்பது நமக்குத் தெரிந்தவிஷயமே. விதை விட்டுப் பத்தொன்பது இருபது தினத்திற்குமேல் அணில், குருவிகள் ஓட்ட வேண்டுவது அவசியமில்லை. ஆனால் காயாதபடி தண்ணீர் இறைத்து வரவேண்டும்.

இப்பயிர் எட்டொன்பதுஅங்குலம் வளருவதற்கு முன்னமே பதியம்போட நிலம் தயார் செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

நிலம் தயார் செய்யவேண்டிய விதம்:—தயார் செய்வதற்கு முந்தி விதை எவ்வளவு நிலத்தில் விட்டிருக்கிற தென்று யோசிக்க வேண்டும். விதைவிட்டது ஒருகுழி நிலமானால் அதிலுள்ள கன்னைப் பேர்த்துப் பதியம் போடுவதற்கு எண்பது குழி நிலம் தயாரிக்கவேண்டும். அந்நிலம்கூடியவரையில் நல்லதாயிருக்கவேண்டும். இல்லாவிடில் எருப்போடுவது உத்தமம். என்

பது குழி நிலத்தையும் இரண்டு கொட்டு (18 அங்குலம்) ஆழம்நன்றாய்வெட்டி வாங்கவேண்டும். காய்ந்தபிறகு கட்டியையடித்து இரடிவாய்க்கால் கிழித்துப் பாத்திபாத்தியாகக் கட்டவேண்டும். ஒரு குழிக்கு இரண்டு பாத்தி கட்டலாம்.

பதியம் போடும் விதம்:—பயிர் எட்டொன்பது அங்குலம் வளர்ந்தவுடன் பேர்க்கவேண்டியதினத்திற்கு முதல்நாள் தண்ணீர் குளிரப் பாய்ச்சவேண்டும். இரண்டுகன்னையச் சேர்த்து வேர் அறுமல் பிடுங்கி அதிலுள்ள மண்ணைச் சேர்த்துப் பிடித்துவைத்துக்கொள்ள வேண்டும். மேற் கூறியபடி தயாரான ஒரு குழி நிலத்தில் 12, 16, பதியம் போடும்படி மிளகாய்க்கன்னுக்கு குழிபோடுவதுபோல் குழிவாங்கி அக்குழிகளுக்கு ஜலம் விட்டுப் பேர்த்தெடுத்த கன்னைப்புதைத்துபின்னுலேயும் ஜலம்விட்டுவர வேண்டும். நல்ல நிலமாயிருந்தால் ஒரு குழி நிலத்தில் பன்னிரண்டு பதியம் போடலாம். கொஞ்சம் பஞ்சையாயிருந்தால் பதினறு போடலாம்.

இதற்கு ஜலம் விட்டுப் பாய்ச்சும் விதம்:—பதியம் போட்ட மறுநாள் காலே மாலேயிலும் பிறகு மூன்றுநாளைக்கு தினம் ஸாயந்திரமும் அதற்குமேல் மூன்றுநாளைக்கு ஒன்று விட்டொரு நாள் மாலேயிலும் ஜலம் விட்டு வரவேண்டும். மூன்றுநாளைக்கு ஜலம் விடாமல் காயப்போடவேண்டும். பதினென்றும்நாள் ஜலம் நன்றாய்ப் பாய்ச்சவேண்டும். பதினைந்தாவது, பதினறுவதுநாள் சிறுகொத்தாய்க் கொத்தவேண்டும். கொத்தின மூன்றும்நாள் பாத்தி கட்டித் தண்ணீர் இரைக்கவேண்டும். மூன்றும் நாள் கழித்த பிறகு மறுபடியும் கொத்த வேண்டும். இரண்டாம்நாள் கொத்தினதைப் புறட்டவேண்டும். ஒரு நாள் நடுவில் விட்டுத் தண்ணீர்பாய்ச்சவேண்டும். இதன் பின்னர் காயாமல் ஆறுநாளைக்கொருமுறை நீரிறைத்து ஸுமார் ஒன்றரை வருஷத்திற்குப் பாதுகாத்துவரவேண்டும். இப்படிச் செய்து வந்தால் நாம் நல்லவழியில் தக்க லாபத்தைபடையலாம். இதற்கு உதாரணமாக மன்னர்குடி தாலுக்காவிலுள்ள எனது கிராமத்தில் ஒரு குழி நிலத்தில் மேற்கூறியபடி விதைவிட்டு அதைப்பேர்த்து எண்பது குழியில் பதியம் போட்டு சற்றேறக்குறைய ரூபாய் 40-0 வரையில் கிரயம் செய்திருக்கிறேன். பணச்செலவு கொஞ்சமாயினும் லாபம் அதிகமே. இப்படிப் பதியமாகவும் கொத்தாகத் தயார் செய்தும் விற்பனை செய்யலாம்.

கொத்துத் தயார் செய்யயும்விதம்:—ஸுமார் ஒன்றரை வருஷத்திற்குப் பிறகு பதியம் கட்டை விரற்பருமன் பேர்த்து வெடித்தவுடன் பேர்த்துக் கொத்தாகும் பொருட்டுப் போடும் நிலத்தில் போட ஆரம்பிக்கவேண்டும். ஒவ்வொரு கன்னையும் பேர்க்கும் பொழுது வேர் அறுமலும் மண் உதிராமலும் சேர்த்துப் பேர்க்கவேண்டும்.

போடும் விதம்:—போட உத்தேசித்த நிலத்தை முதலாவது இரண்டு கொட்டு அல்லது அரை கஜ ஆழம் நெடுகிலும் கொத்தி வாங்க வேண்டும். பிறகு ஜாதியடி 15-க்கு இடைஇடையே முக்கால் கஜ ஆழமும் ஒரு கஜ அகலமும் குழிவெட்டி ஒரு வாரத்திற்குஆறப்போடவேண்டும். இப்படி வறட்சி நிலமாயிருந்தால் ஆடிமாசத்திலும் குளிர்ந்த பூமியாயிருந்தால் கார்த்திகை மார்கழி மாசங்களிலும் போடவேண்டும். தயாராயிருக்கிற குழிகளில் பேர்த்துவந்தகன்களை வைத்து உதிரிமண்ணை வேர் தெரியாமல் விட்டு குழிநிறைய ஜலத்தைதஊற்றி அக்கன்களை ஒரு அசை அசைக்க வேண்டும். இப்படியே ஒவ்வொரு கன்னுக்குஞ் செய்ய வேண்டும்.

இப்படிப்போட்ட பிறகு செய்யும் விதம்:—மூன்று நாளைக்கு மாலேயில் தினந்தோறும் ஜலம் விடவேண்டும். அப்புறம் ஒன்று விட்டொரு நாளைக்கு மூன்றுஜலமும் பிறகு மாசம்

ஒன்றுக்கு நாலுதண்ணீரும் காயாமல் இறைத்துவரவேண்டும் தரித்தவுடன் மாசம் இரண்டு தண்ணீர் இறைத்தால் போதும். பிறகு காயாமல் பாதுகாத்து வரவேண்டும். இப்படிச் செய்தால் தக்கபலனைக் கொடுக்கும்.

பலன் :—கொத்துப்போட்ட அடுத்த வருஷம் முட்கழித்து ஒரு கொட்டாழம் நெடுகிலும் கொத்தவேண்டும். அம்முள்ளைக் கொண்டு வேலியையடைத்துக் கொள்ளலாம். மறு வருஷம் முதற் கொண்டே பலன் கொடுக்க ஆரம்பிக்கிறது. ஆனால் இக்கொத்துகளுக்கு உரமாகும் பொருட்டு பின்வருமாறு செய்யலாம். பங்குனி சித்திரை மாதங்களில் ஸுலபமாயிருந்தால் இரண்டு தண்ணீர் கொத்துகளைச் சுற்றிக் கட்டுவது திறம். ஒவ்வொருவருஷமும் ஆடிமாசத்திலும் மார்கழிமாசத்திலும் கொத்தி வருவது உத்தமம்.

கொத்துப்போட்ட ஐந்தாம் வருஷம் முதல் பழுத்த கழிகளை வெட்டி வரவேண்டும். வெட்டாவிடில் கொத்துகள் கெட்டுப்போம். கழி வெட்டும் போது அடியோடு வெட்ட வேண்டும். இல்லாவிடில் கட்டைகளினால் பிறகு கழிகள் மேலே மேலே வெடித்து கொத்துகள் ஜரணிப்பதுடன் கழிகளுஞ் சிறுவனவாய்ப் போகின்றன. ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு கொத்தும் பத்துக் கழிக்குக் குறையாமல் கொடுத்துவரும். அப்போதைக் கப்போது முட்கழித்து பழுத்த கழிகளை வெட்டி அசலாத்துதல் அத்தியாவசியம்.

மேற்கூறியபடி செய்துவந்தால் கழி ஒன்று நாலணாவுக்குக் குறையாமலும் எட்டணாவுக்கு மேற் படாமலும் விற்கும். இப்படி ஒருவர் ஸுமார் 100 கொத்துகள் வைத்து நன்றாய்ப் பாதுகாத்து வருவாராயின் கொத்து ஒன்றுக்கு ரூபாய் நாலு விழுக்காடு ரூபாய் நானூறு ஒவ்வொரு வருஷமும் எளிதில் சம்பாதிக்கலாமென்பதற்கு ஐயமே இல்லை. இந்த நூறு கொத்துகள் அடங்கிய நிலத்தில் வேறெவ்வித ஸாகுபடி செய்தாலும் இவ்வளவு வருமானம் வராதென்பது திண்ணம்.

ஆகையால் "தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பாய்க்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய்ப் புலப்படுவது எல்லாருக்குந் தெரிந்தவிஷயமே.

டி. எஸ். கனகஸபை.

TRAINING CHILDREN

BY

S. A. SUBBARAYA PILLAI.

சிறுவர்களை வளர்த்தல்.

ஒரு தேசத்தின் எதிர்கால நிலைமைக்கு அத்தேசத்துச் சிறுவர்களே காரணஸ்தராயிருக்கிறார்கள். ஆகையால் மனுஷ்ய ஸமூகத்தில் சிறுவர்கள் ஓர் முக்கியமான பகுதியாயிருக்கிறார்கள். பொது நலத்திற்கு உழைப்பவர்கள் அதற்காக எவ்வளவு ஊக்கத்துடன் உழைத்து வந்தபோதிலும், அவர்கள் தங்கள் சிறுவர்கள் நிலைமையைப்பற்றிச் சிறிதேனும் கவனியாமலிருந்தால் அவர்கள் முபற்சிகள் எதைப்போலாகுமென்றால், அரைகஜம் நீளமுள்ள திரியுள்ள ஓர் புதிய விளக்கைத் துருப்பிடிக்க விட்டு விட்டு க்ஷணப்பொழுதில் கரியாய்விடும் திரியுள்ள ஓர் அவலக்ஷண விளக்கிற்கு எண்ணெய் வார்த்து ஏற்றிவைப்பது போலவும், இப்போதுதான் எழும்பிவரும் ஒரு இளஞ்செடி அருந்துவதற்கு அசுத்த ஜலங்கூட இல்லாமல் அவதிப்பட; பட்டுப்போகும் ஓர் பாழ் விருக்ஷத்திற்குப் பால்வார்த்துப் பாதுகாப்பது போலவும் ஆகும். நமது சிறுவர்கள் நிலைமையைக் கவனியாமல் பொது நன்மைக்குப் பாடுபடுபவர்களுடைய முயற்சிகளெல்லாம் நிகழ்காலத்தில் விசேஷ நன்மையைக் கொடுக்கக் கூடுமேயொழிய, எதிர்கால ஸம்பவங்களெல்லாம் நமது சிறுவர்கள் நிலைமையிலேயே அமைந்திருக்கின்றன. ஆகையால்,நாம் அடையும் அபிவிர்த்தி, நாம் செய்யும் பலவித சீர்திருத்தங்கள், முதலியவைகள் நமக்குப் பிற்காலத்தும் நிலைத்திருக்கவேண்டுமானால் அதற்குத் தக்கபடி நமது சிறுவர்களை வளர்க்க வேண்டும்.

நாம் அடைந்து கொண்டிருப்பதும் அபிவிர்த்திசெய்ய விரும்புவதும் என்ன? நாகரிகந்தான். நாகரிகம் என்று ஒரே ஒரு வார்த்

தையாய்ச் சொல்லிவிட்டாலும், அந்த ஒரு வார்த்தையில் எத்தனையோ விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. அறியாமை அல்லது பேதமை என்பதை ஒழித்தல், சாந்தம், இன்சொல், ஸகல விஷயங்களையும் நியாயமாய் சீர்தூக்கிப் பார்த்தல், கஷ்டப்படுபவர்களிடம் காருண்யம் பாராட்டல், அநேகருடைய நன்மையின் பொருட்டு தன் ஸொந்த ஸுகங்களையும் கைவிடுதல், ஸமூகங்களில் மதுரமாய் ஸம்பாஷித்துப் பழகியிருத்தல், சிறந்த கல்விஞானமும், உலக விவகாரங்களில் அநுபோகமுமுள்ள வர்களாயிருத்தல்,முதலிய பல விஷயங்களில் அபிவிர்த்தி அடைதலையே, நாம் சுருக்கமாய், நாகரிகத்தில் அபிவிர்த்தி அடைதல் என்றுசொல்லுகிறோம். நாம் அடைந்து வரும் இந்த நாகரிகம் என்றும் நிலைத்திருக்க வேண்டுமானால் அதற்குத் தக்கபடி நமது சிறுவர்களை வளர்த்துவரவேண்டும். ஆனால் தற்காலத்தில் நமது சிறுவர்களில் அநேகர் வளர்க்கப்படும் விதத்தை கவனித்தால் அவ்வளவு திருப்திகரமாயில்லை. இவ்வியஷத்தைப்பற்றி விவரமாய்ச் சொல்வோம்.

நமது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் இயற்கையிலேயே விசேஷ அன்புடையவர்கள். ரெயில் வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒரு இந்திய ஸ்திரி, தன் குழந்தை ஜன்னல் வழியாய்த் தவரித் தாழ விழ, அப்படி விழுந்த க்ஷணத்திலேயே தானும் ஜன்னல் வழியாய்த் தாழக்குதித்து உயிர்விட்டாள் என்று நாம் ஓர் முறை கேள்விப்பட்டிருக்கிறோம். மற்ற தேசங்களிலுள்ள மாதர்கள் தங்கள் குழந்தைகளின் நிமித்தம் ரெயில்வண்டி ஜன்னல் வழியாய்க் குதித்தல் அருமையே. ஆகையால் தங்கள் குழந்தைகளிடத்தில் பெற்றோர்களுக்குள்ள அன்பில் நமது நாடு இதர நாடுகளை முந்துகின்றது. அந்த அன்பு பெற்றோர்கள் மனதிலே நிறைந்திருத்தல் நாட்டிற்கு பெருமையேயாம். ஆனால் அந்த அன்பைத் தங்கள் குழந்தைகளே அறியும்படி பற்பல விதங்களில் பகிரங்கமாய் வெளியிடுதலால், அக்குழந்தைகள் தங்கள் மனதில் தாங்கள் இவ்வுலகத்தில் ஏதோ ஓர் விசேஷ ஜன்மங்கள் என்ற எண்ணமுடையவர்களாகிறார்கள். காக்கை தன்குஞ்சைப் பொன் குஞ்சென்றெண்ணி சும்மா யிருந்தால் பாதகமில்லை. ஆனால் அது "என் பொன் குஞ்சே!" "என் பொன் குஞ்சே" என்று சொல்லித் தன் குஞ்சோடு கொஞ்சிக் குலாவினால் அந்தக் கிருங்குஞ்சு யதார்த்தத்திலேயே தன்னைப் பொன் குஞ்சென்றெண்ணிக் கொள்ளுகிற விபரீதம் விளைகிறது. யதார்த்தத்திலேயே அது பொன் குஞ்சாயிருந்தபோதிலும் தாய்க்காகம் அதைநோக்கி "என் பொன்குஞ்சே" "என்பொன்குஞ்சே" என்று சொல்வது உசிதமல்ல. ஏனென்றால் அப்படிச் சொல்வதினால் குஞ்சு ஓர்வித அகந்தையை அடைகின்றது. ஸௌந்தர்யத்திலாவது, மழலைச் சொற்களிலாவது, விநோத விளையாட்டுகளிலாவது, தேகபலத்திலாவது, கல்வியிலாவது, ஓர் தாய் அல்லது தந்தை தன் குழந்தையை அதன் முன்பாகவே புகழ்ந்து கொள்வதால், அக்குழந்தை அகந்தை மேட்டிமை முதலிய குணங்களை அடைவதற்கு ஹேது வுண்டாகிறது. ஆனால் குழந்தைகளின் ஸௌந்தர்யம் மழலை மொழிகள் விளையாட்டுகளில் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சியிருத்தல் கூடாதென்று நாம் சொல்லவரவில்லை. அம்மகிழ்ச்சியைத் தங்கள் குழந்தைகளுக்கு முன்பாகவே வெளிப்படையாகக் காட்டி அவர்களை அதிகமாகப் புகழ்ந்து கொள்ளப்படாது என்றுதான் சொல்லுகிறோம். சுருக்கமாய்ச் சொல்லின், நமது பெற்றோர்கள் தங்கள் சிறுவர்களுக்கு குழந்தைப் பருவத்திலிருந்தே அதிக செல்லங் கொடுத்து வளர்த்தல் பெரும்பிழை.

ஆகையால் உண்மையில் தங்கள் சிறுவர்கள் நன்மையைக்கோரும் பெற்றோர்கள் இவ்வழக்கத்தை ஒழித்துவிட வேண்டும்.

இன்னும், நமது பெற்றோர்கள் அற்பவிஷயங்களைப் பற்றியும் இல்லாத விஷயங்களைப் பற்றியும் சொல்லி சிறுவர்களைக் குழந்தைப் பருவமுதல் பயமுறுத்துவதால் அச்சிறுவர்கள் அக்கியானங்களில் நம்பிக்கையும் கோழை மனமும் உடையவர்களாகிறார்கள். குழந்தைகள் அழுதால் பெற்றோர்கள் "பூச்சிக்காரன் வருகிறான், பூதம்வருகிறது, பிசாசு வருகிறது" என்று சொல்லி பயமுறுத்துகிறார்கள். குழந்தைகளின் அழுகையை நிறுத்துவதற்கு இல்லாதவைகளாகிய பூச்சிக்காரன் பூதம் பிசாசு முதலியவைகளைப்பற்றிச் சொல்லிப் பயமுறுத்துவதை விடவேறுவழி இல்லையா? இப்படி வளர்க்கப்பட்ட குழந்தைக்குச் சிறிது வயதாய்விட்டால், "பூச்சிக்காரன்" என்ற ஓர் பயங்கர மனிதன் இருப்பது பொய் என்று அவன் தெரிந்து கொள்ளுகிறான். ஆனால் பூதம் பிசாசு என்பவைகளில் மாத்திரம் அவனுக்கு நம்பிக்கைவிட்டுப் போவதில்லை. நமது காருண்ய கவர்ன்மெண்டாரால் நமக்களிக்கப்பட்டிருக்கிற உயர்தரக் கல்வி பெற்றவர்களிற்கூட அநேகருக்கு பேய்களிலும் பூதங்களிலும் நம்பிக்கை அற்றுப்போகவில்லை யென்றால், ஸாமானிய ஜனங்களைப் பற்றிக் கேட்பானேன். படித்தவனாயிருந்தாலுஞ் சரி மூடனாயிருந்தாலுஞ்சரி, ஒருவன், தன் ஸகோதரி மனைவிமுதலிய பெண் பந்துக்களுக்குத் தன்னால் இன்னவியாதிஎன்றறிந்து கொள்ளக்கூடாத ஓர்வியாதி உண்டானால், அவன் உடனே தக்க வைத்தியரை அழைத்து வந்து ஆலோசிக்காமல் அப்பெண்களுக்குப் பேய் பிடித்துவிட்டதென்றெண்ணி மந்திர வாதிக்குக் காசை இறைக்கிறான். ஏனென்றால் நம்மவர்கள் எவ்வளவு உயர்தரக்கல்வி பெற்றிருந்தாலும் அல்லது ஸர்வமூடரா யிருந்தாலும் அவர்கள் தாய்ப்பால் குடித்த காலந் தொடங்கி, தங்கள் பெற்றோர்களிட மிருந்து பேய் பிசாசுகளைப் பற்றியும், அவைகளைப் பற்றிய பயங்கரமும் ஆச்சரியமும் நிறைந்த கதைகளைப்பற்றியும், கேட்டு அவைகளில் ஸம்பூர்ண நம்பிக்கையுடையவர்களா யிருக்கிறார்கள். இவைகளில் மாத்திரம்நம்பிக்கையிருந்தாலும் அக்கரையில்லை. ஆனால் அந்தோ! இன்னும் பல்லி சாஸ்திரம், பட்சிசாஸ்திரம், பறையறைப் பழிக்கும் சாஸ்திரம், வாந்திபேதியம்மாள் வயிற்றுக்கு ஆட்டுக்கடா கோழி பலியிடும் சாஸ்திரம், மாலைசுற்றிபிள்ளை பிறந்தால் அதுமாமனுக்காகாதென்று அது எப்போது சாகுமோ என்று பகவானைப் பிரார்த்திக்க வேண்டும் என்று சொல்லும் சாஸ்திரம், ஐந்து வயதுப் பெண்ணுக்கும் ஐம்பது வயது மாப்பிள்ளைக்கும் அருமைக்கலியாணம் செய்து அந்தப் பெண்ணின் ஆறுவது வயதில் அதன் தாலியை அறுத்துத் தலையைச்சிரைத்து ஆயுள்காலம் வரையில் அழுது கொண்டிருக்கச் சொல்லும் சாஸ்திரம், இன்னும் இதைபோன்ற எத்தனையோ பாழுஞ்சாஸ்திரங் களிலெல்லாம் நம்மவர்களில் படித்தவர்கள் பாமரர்கள் ஆகிய இருசாதியாரிலும் அநேகருக்கு முழுநம்பிக்கையுண்டு. இந்த அநாகரிக நம்பிக்கையை ஒழித்துவிடுவது கஷ்டந்தான். ஏன்!, அஸாத்தியமென்றே சொல்லலாம். ஏனென்றால் குழந்தைப் பருவத்திலிருந்தே அந்த நம்பிக்கையிலேயே வளர்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள், தங்கள் சிறுவர்களையாவது மேற்கூறிய அக்கியானங்களில் நம்பிக்கை யில்லாதவர்களாக வளர்த்து வர வேண்டும். பேய்களைப் பற்றியும், ஆட்டுக்கடா பலியிடுதலைப் பற்றியும், இன்னும் இதைப்போன்ற அநாகரிகக்கொள்கைகளைப் பற்றியும், பயங்கரமான கதைகள் சிறுவர்கள் கேட்கும்

படி நேரிட்டாலும், பெற்றோர்கள் (மேற் கூறிய கதைகளில் தங்களுக்கு எவ்வளவு நம்பிக்கை யிருந்தபோதிலும்) தங்கள் சிறுவர்கள் நலத்தைக்கோரி, "மனுஷ்ய ஜன்மத்திற்கியல்பாயுள்ள மூப்பு, பிணி முதலிய பலவித துன்பங்களில் வருந்துவதல்லாமல், இல்லாத துன்பங்களையும் இருக்கிறதாக பாவித்து ஏன் வருந்தவேண்டும். ஆகையால் துன்பத்தைக்கொடுக்கும் இந்தக் கேடுகெட்ட கதைகளையும், அக்கியானங்களையும் காலால் உதைத்துத்தள்ளிவிடுங்கள்" என்று அச்சிறுவர்களுக்குப் பலவிதமாகக் காரணங்காட்டிப் போதிக்கவேண்டும். நமது சிறுவர்கள் பிற்காலத்தில் உயர்ந்த நாகரிகத்தை அடைவதற்கு இப்படிப்பட்ட போதனை அதிக பிரயோஜனகரமானதே.

இனி நம்முடைய சிறுவர்களது தேக ஆரோக்கியத்தைப்பற்றிக் கவனிப்போம். திடதேகமும் ஆரோக்கியமுமுடையவர்களே ஸந்துஷ்டியாயிருப்பார்கள். அவர்கள் மூளை தெளிவாயும் நுட்பமாயும் இருக்கும். ஆகையால் அவர்கள் அறிவும் ஆராயும் சக்தியும் விசாலிப்பதற்கு விசேஷ இடமுண்டு. ஸரியான ஆரோக்கிய மில்லாதவர்களுக்கு இந்த அநுகூலங்களில்லை. ஸரியான ஆரோக்கியத்திற்கு திடதேகம் அவசியம். நமது பெற்றோர்களில் அநேகர் தங்கள் சிறுவர்கள் திடதேகம் அடைவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யாமலிருப்பதுமன்றி, அதற்குத் தடையுஞ் செய்கிறார்கள். தங்கள் குழந்தைகளை நோக்கி "அடுத்த வீட்டுப்பாப்பா தடிப்பையன் அவனோடு விளையாடினால் அவன் உன்னைபலமாய் அடித்து விடுவன்," என்று சொல்லுகிற பெற்றோர்கள் எத்தனைபேர். "நீ ஓடி விளையாடினால் உன்கால் ஒடிந்து விடும்," என்று பயமுறுத்துகிற பெற்றோர்கள் எத்தனைபேர். "எங்கள் பையன் எப்போதும் புஸ்தகமுங் கையுமாயிருக்கிறான், கொஞ்ச நேரம் விளையாடிவிட்டுவாடா என்று நானே சொன்னாலும் புஸ்தகத்தை விட்டுவிட்டுப் போகமாட்டான்," என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் பெற்றோர்கள் எத்தனை பேர். "எங்கள் பையனுக்கு "ஜிம்நாஸ்டிக்ஸ்" கிளாஸுக்கு எக்ஸெம்ஷன் வேண்டும், ஏனென்றால் அதினால் அவனுக்கு ஆபத்து நேரிட்டுவிடும்.' என்று பாடசாலைத் தலைவர்களிடம் மனு செய்துகொள்ளும் பெற்றோர்கள் எத்தனைபேர். இப்படிப்பட்ட பெற்றோர்களுடைய பிள்ளைகள் சுண்டைக்காய் போன்ற புஜங்களும் துடைப்பக்குச்சி போன்ற கால்களும் கைகளும் உடையவர்களாய் தங்கள்ஸாவகாசநேரங்களில் பலவித துர்விஷயங்களில் சிந்தனையைச் செலுத்தி தேக ஆரோக்கியத்திலும் மன அமைதியிலும் க்ஷீணிக்கிறார்கள். ஆகையால், தங்கள் சிறுவர்கள் நன்மையை நாடும் பெற்றோர்கள் அச்சிறுவர்கள் மனம் உத்ஸாகமடையும்படி விளையாடவும் தேகாப்பியாசம் செய்யவும் ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்கு விளையாட்டிலும் தேகாப்பியாசத்திலும் பிரியமில்லாவிட்டாலும் எப்படியாவது அவர்களுக்குப் பிரிய முண்டாகும்படி செய்வது பெற்றோர்கள் கடமை. அப்படி வளர்க்கப்படும் சிறுவர்கள் ஆரோக்கியத்துடனும் முகமலர்ச்சியுடனும் ஸௌந்தர்யத்துடனும் தெளிவான புத்தி நுட்பத்துடனும் விளங்குவார்கள்.

இன்னும், நமது பெற்றோர்கள் தங்கள் சிறுவர்கள் குண ஒழுக்கங்கள் அமைவதில் விசேஷ கவனமும் சிரத்தையும் செலுத்த வேண்டும். உண்மைபேசுதல், ஸகலரிடத்தும் அன்பு பாராட்டல், எவ்விஷயத்திலும் பெருந்தன்மையோடிருத்தல், சாந்தம், பொறுமை, ஈசனிடம் பக்தி, அவரிடம் நம்பிக்கை, முதலிய நற்குண நல்லொழுக்கங்களை அவர்கள்

டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 600090.

குழந்தைப் பருவத்திலிருந்தே போதித்தால் தான் அவர்கள் என்றென்றும் அக்குண ஒழுக்கங்களை உறுதியாகக் கொண்டிருப்பார்கள். இப்படி போதிப்பதற்கு நமது நாட்டுத் தாய்மார்களே முக்கியமாய்க் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஐரோப்பிய ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளுக்கு நற்குண நல்லொழுக்கங்களையும் முக்கியமாய் தெய்வப்பக்தியையும் கற்பிப்பதும், அவர்கள் தாங்கள் கற்பித்தவாறு நடந்து வருகிறார்களா எனக் கவனிப்பதும், அந்த ஸ்திரீ ரத்நங்களுக்குள்ள சிறந்த குணங்களிற் சிலவாம். நமது ஸ்திரீகளோ தங்கள் குழந்தைகளைக் கொஞ்சுவதிலும், அவர்களுக்கு நகையிட்டுப் பொட்டிட்டு மினுக்கி அழகுப்பார்ப்பதிலும் மாத்திரந்தான் விசேஷ கவனம் செலுத்துகிறார்கள். குழந்தைகளைக் கொஞ்சுவதும் அலங்கரிப்பதும் குற்றமென்று யாம் சொல்லவில்லை. அவர்களைக் கொஞ்சுவதிலும் நகையிட்டு மினுக்கி அலங்கரிப்பதிலும் தாய்மார்களுக் குண்டாகும் ஆநந்தத்தைவிட அவர்களுக்கு நற்குண நல்லொழுக்கங்களை போதித்து அவர்கள் அந்த போதனைப்படி நடப்பதைக் காண்பதால் தாய்மார்கள் அடையும் ஆநந்தம் மிகவும் மேலானது. இன்னும், நமது நாட்டில் சில நவீன தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு கெட்ட சொற்களையும் வன்சொற்களையும் கற்பித்து, அக்குழந்தைகள் அச்சொற்களைச் சொல்லும்பொழுது அம்மழலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறார்கள். தன் தாயை நோக்கி "உன் தாலியறுக்க!" என்னும் மழலையைப்பற்றியும், தன் தந்தையை நோக்கி "அடே முண்டம்! இனிமேல் என்னை அடித்தாயானால் உன்னைக் கொன்றுவிடுவேன்!" எனச் சொல்லும் மழலையைப்பற்றியும், அப்படிச்சொல்லிக் கொண்டே தன் தந்தையைக் காலால் எட்டியுதைக்கும் திருவிளையாடலைப் பற்றியும் மனங்குளிர மகிழும் தாய்தந்தையர் நமது நாட்டில் பலருளர். சிலபெற்றோர்கள் தங்கள் சிறுவர்களைநோக்கி "நீ பெரியவனாய் விட்டால் உன் பெண்சாதி பேச்சைக்கேட்டுக் கொண்டு உன் தாயையும் தகப்பனையும் வெளியே ஓட்டி விடப்பா," என்று சிரித்துக் கொண்டு விளையாட்டாய்ச் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட பெற்றோர்களிடம் வளர்ந்த பிள்ளைகள் எப்படி நற்குண நற்செய்கைகளையடைந்து நல்ல நாகரிகத்தை அடைவார்கள்? ஸாதாரணமாய், குழந்தைப்பருவமானது நாம் எவ்வெவற்றைச் சொல்லுகிறோமோ, எவ்வெவற்றைக்காண்பிக்கிறோமோ, அவற்றை யெல்லாம்விரைவில் கிரஹித்துக்கொண்டு அவற்றின்படி நடக்கும் மாசற்ற பருவம். இப்படிப்பட்ட பருவத்தில் அவர்களுக்கு ஸகல ஸன்மார்க்கங்களைப் போதிப்பதோடு, அவர்கள் குண ஒழுக்கங்களைத் தீயவழியிற் செலுத்தக்கூடும் விஷயங்களைப்பற்றி யாதொரு காரணத்தை முன்னிட்டும் வாயெடுத்துப்பேசாமல் ஸர்வ ஜாக்கிரதை யுடனிருக்கவேண்டும்.

இப்படி குழந்தைகளை ஸன்மார்க்கத்தில் வளர்த்துவருவதில், அவர்கள் யார் யாரோடு ஸகவாஸம் செய்கிறார்கள் என்பதைப் பற்றி கவனிப்பது பெற்றோர்களது கடமை. ஒரு தாயானவள் தன் சிறுவன் எங்கேயிருக்கிறான், யாரோடு இருக்கிறான் என்ற விஷயங்களை எப்பொழுதும் அறிந்தவளாயிருக்க வேண்டும். அவன் பாடசாலைக்குப் போய்வரும் சிறுவனாயிருந்தால், அவனது தந்தையும் தாயுமாகிய இருவருமே தங்கள் சிறுவன் எவ்வெவரோடு சிநேக முள்ளவனாயிருக்கிறான், அந்த சிநேகர்கள் குணங்கள் எப்படிப்பட்டவை, என்றவைகளை அறிந்தவர்களாயிருக்க வேண்டும். ஸகவாஸத்தால் பெரிய நன்மைகளும் ஸித்திக்கலாம், பெருங்கேடுகளும் உண்டாகலாம். ஆகையால் ஓர் சிறுவன் தீய

குண ஒழுக்கங்களுடையவர்களோடு பழகுவதாக அவன் பெற்றோர்களுக்குத் தெரிந்தால் உடனே அவனை அத்தோழர்களைவிட்டுப்பிரிப்பது பெற்றோர்கள் கடமை. முற்கூறியபடி ஸன்மார்க்கத்தில் தங்கள் குழந்தைகளை வளர்த்து வரும் பெற்றோர்கள் குழந்தைகளாகிய ஸகோதரர்களுக்கு, தங்களைவிட வேறு அந்நியத்தோழர் வேண்டுவதில்லை யென்றே சொல்லலாம். ஏனென்றால், நல்ல பெற்றோர்களால், அன்பிலும், ஸன்மார்க்கத்திலும் நாகரிகத்திலும் வளர்க்கப்பட்ட ஸகோதரர்கள் ஒன்றாய் கூடி ஸம்பாஷிப்பதிலும், விளையாடுவதிலும், குலாவுவதிலும், அவர்கள் அடையும் இன்பமும் உத்ஸாகமும், அவர்கள் அந்நிய தோழர்களோடு ஸம்பாஷிப்பதிலும், விளையாடுவதிலும், குலாவுவதிலும், அடையும் இன்பத்தைவிட அதிக மேலானதென்பது நிச்சயம்.

முற்கூறியபடி நமது சிறுவர்களை அதிக செல்வமாய் வளர்க்காமலும், அவர்களுக்கு அக்கியானங்களைப் போதிக்காமலும், திடதேகத்துடனும், ஆரோக்கியத்துடனும் விளங்கும்படியாகவும் அவர்களுக்கு, ஸன்மார்க்கங்களை போதித்து, அவர்கள் நல்ல தோழர்களையுடையவர்களாயிருக்கச்செய்து, வளர்த்து வந்தால் அவர்கள் கல்வியறிவு பெறுவதும் சுலபமாகும். ஆகவே அவர்கள் கல்வியறிவும் நற்குண நல்லொழுக்கங்களுமுடையவர்களாய், சிறந்த நாகரிகமுடையவர்களாய், நாட்டிற்குப் பெருமையைக் கொடுப்பவர்களாய், விளங்குவார்கள்,

சு. அ. சுப்பராயப் பிள்ளை,

A. SUGGESTION TO GOVERNMENT

BY

S. RAJARAMIER, VAKIL.

கவர்ன்மேண்டாருக்கு ஒரு யோசனை.

ஒற்றை நாற்று நடுவதைதென்இந்தியா முழுவதும் பரவச்செய்யவேணுமென்கிற சிரத்தை கவர்மெண்டு அக்ரிகல்ச்சர் டிப்பார்ட்டுமெண்டாருக்கு முக்கியமாய் ஏற்பட்டிருக்கிறபடியாலும், ஸாதாரணமாய்ச்செய்துவரும் நடுகையைவிட ஒற்றைநாற்று நட்டு விளையக்கூடிய மாஸூல் ஒருக்காலும் குறையவே மாட்டாதென்று திண்ணமாய் எல்லாப் பத்திரிகைகளிலும் முறையிடுவதாலும், ஷை வழக்கத்தை அநுஸரணைக்குக் கொண்டுவரும் பொருட்டு ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்று அல்லது இரண்டு மிராசுதார்களுடன் கிராம முனிசீப் மூல்யமாயாவது அல்லது தாசில்தார் மூல்யமாயாவது அவர்களுடைய பூமியில் சென்ற போகத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில் எவ்வளவு மாஸூல் கிடைத்ததோ அதை தீர்க்க விசாரித்துத் தெரிந்துகொண்டு, அதின் கிரயத்தை அவர்களுக்கு முந்தியே அட்வான்ஸாகக் கொடுத்துவிட்டு, நடப்பு போகத்துக்கு ஷை நிலங்களில் ஒற்றை அலகு ஸாகுபடி செய்யும்படிக்கும், அப்படிச் செய்வதில், அதற்காகச் சொல்லப்படும் பக்குவப்படிக்கும், நிபந்தனைப்படிக்கும், பயிரிடும்படிக்கும், அறுவடை காலத்தில் ஸர்க்கார் உத்தியோகஸ்தரின் கங்காணத்தின் பேரில் மாஸூலை அறுவடை செய்யும்படிக்கும், முந்தி அவர்களுக்கு அட்வான்ஸாக கொடுக்கப்பட்டிருக்கிற தொகைக்கு மேற்கொண்டு அதிகமாய்க் காணுகிற மாஸூலையோ அல்லது லாபத்தையோ ஸர்க்காரில் எடுத்துக் கொள்ளுகிறதென்றும், யோசனை செய்து பரீக்ஷைசெய்து காட்டும் பக்ஷத்தில், ராஜாங்கத்தில் குடிகளுக்குச் செய்யவேண்டிய உபகாரத்தைச் செய்து காட்டிய தர்மம் ஏற்படும். இந்த முறையை மாக்ஷிமை தங்கிய கவர்மெண்டார் அநுஷ்டானத்துக்குகொண்டு வருவார்களென்று நம்புகிறேன்.

எஸ். ராஜாராமய்யர்,

SELECTIONS.
விசேஷத்திரட்டு.

THE BAD HABIT OF SPITTING.
எச்சில் துப்பும் துர்வாடிக்கை.

அநேகர் காரணமில்லாமலே எச்சில் உமிழ்ந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோமே. அவர்கள் அம்மாதிரி கெட்ட வாடிக்கையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். ஏதாவது விரஸமான வஸ்துவைக் காணும்பொழுது நம் வாயில் உமிழ்நீர் சொரிவது ஸகஜமே. அப்பொழுது காறித்துப்பி விடுகிறோம். அப்படியல்லாமல் நிஷ்காரணமாய் எப்பொழுது பார்த்தாலும் துப்பிக்கொண்டிருப்பது மிகவும் கெட்ட வாடிக்கை. அதனாலுண்டாகும் தீங்குகளும் அநேகம்.

முதலில் உமிழ்நீரின் பிரயோசனம் என்னவென்று பார்ப்போம். எச்சில் துப்புவதென்றால் உமிழ்நீரை வீணாய் வெளிப்படுத்துவதாம். (1) நாம் உண்ணும் உணவு நம் வாயிற் சென்றவுடனே உமிழ்நீர் அதிகமாய்ப் பெருகி உணவுடன் கலந்து அது சுலபமாய் உட்செல்லும்படி அதை மொத்தையாக்குகின்றது. (2) நாம் உட்கொள்ளும் மா பதார்த்தங்களைச் சர்க்கரையாக மாற்றி ஆகாரம் சுலபமாய் ஜீரணிக்கும்படி செய்கிறது. (3) உமிழ் நீரினால் நம் வாய் வரட்சி கொள்ளாமலிருக்கிறது. அப்படியில்லாவிட்டால் நாம் பேசவாவது சாப்பிடவாவது முடியாது. அடிக்கடி துப்புவதினால் உமிழ் நீர் அடிக்கடி சிறிது சிறிதாய் வெளிப்பட்டு வீணாய்ப்போய் மேற்கூறிய வேலைகளைச் செய்வதற்குப் போதுமான அளவில்லாமற் போகிறது. அதனால் அஜீரணமுண்டாகிறது. அடிக்கடி துப்புவது கையிலிருக்கும் பணத்தை துர்வாடிக்கைகளில் செலவிட்டுப் பின்னர் வருந்துவது போலாகும்.

சுருட்டு பிடிப்பவர்கள் அடிக்கடி துப்புவதை நாம் காண்கிறோம். ஆகையினால் சுருட்டு கெட்ட அப்பியாசமென்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். புகையிலை போட்டுக்கொள்ளுதலும் துரப்பியாசமே. புகையிலை உமிழ் நீரையுண்டாக்கும் உறுப்புகளை அதிக வேலைக்குட்படுத்தி உமிழ் நீரை வெளிப்படும்படி செய்து, அதன் நியாயமான வேலைக்குப் போதுமான அளவு சக்தியற்றதாகச் செய்கிறது. மேலும் அது பல்லுக்கும் ஒரு விதமான நிறத்தை உண்டாக்குகிறது. புகையிலையினால் ஏதாவது ஒரு குணம் இருக்கலாம்; ஆயினும் அதனாலுண்டாகும் தீங்குகள் நன்மைகளைக்காட்டிலும் அதிகமானது பற்றி அதை அப்பியசிக்காமலிருப்பது நலமெனத் தோன்றுகிறது.

துப்புவது ஆசாரக் குறைவென்பது மாத்திரமல்ல. அது மிகவும் அபாயகரமானது. திண்ணைகள், கூடங்கள், தெருவுகள் முதலான விடங்களில் துப்பியிருக்கும்பொழுது நமக்கு அதைப் பார்க்க எவ்வளவு அருவருப்பாயிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ரயில் வண்டியில் நாம் பிரயாணம் செய்யும்பொழுது நாம் துப்புவது எவ்வளவு தகாத காரியமென்பது நமக்கே தெரியுமல்லவா? இதரர் மேல் படும்படி துப்புவது ஒழுக்கத்திற்குக் குறைவென்பது ஒரு பக்கத்திலிருக்கட்டும். நம் வாயில் கண்ணுக்குத் தெரியாத இலக்ஷக் கணக்கான நுண்ணிய பூச்சிகள் இருக்கின்றன. எச்சில் உமியும்பொழுது அவைகள் வெளிப்பட்டு அநேகவிதமான வியாதிகளைப் பரவச் செய்கின்றன. இம்மாதிரி பூச்சிகளே தொத்து வியாதிகளுக்கெல்லாங் காரணம். முக்கியமாய் க்ஷய ரோகிகள் துப்புவதைக்குறித்து அதிகமாய் கவனிக்கவேண்டும். நாம் உட்கொள்ளும் வாயுவில் அவர்களுடைய பூச்சிகள் பரவாமலிருக்கும்படி நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அடிக்கடி காறித் துப்பிக்கொண்டிருந்தாலே க்ஷய ரோகம் நாளடைவில் வந்துவிடும்.

குழந்தைகளுக்கு முத்தமிடல் பெரிய துர்வாடிக்கை. நம் எச்சில் அவர்களின் முகத்தில் பட்டு, அதன் மூலமாய் அவர்கள் வியாதியை யடைகிறார்கள். ஐரோப்பியர்களுக்குள் பெரியவர்கள் கூட முத்தங் கொடுத்துக் கொள்வது ஒழுக்க நாணயமென்று நினைத்து அப்படி செய்துவந்தார்கள்? இப்பொழுதும் சிலர் செய்து வருகிறார்கள். ஆனால் இது பெருந்தவறான காரியமென்று மேல் நாட்டு சாஸ்திரிகளே ஆராய்ச்சி செய்தறிந்து அவ்வழக்கத்தை விட்டொழிக்கும்படி வற்புறுத்தி வருகிறார்கள்.

எச்சிலினா லுண்டாகுந் துன்பங்களை யறியாமலா நம் பூர்வீகர்கள் எச்சில் உதவாதென்று சாஸ்திரங்க

களில் கூறியிருக்கின்றனர். நம் முன்னோர்கள் அதிக மாய் மூட பக்தி யுள்ளவர்களாதலின், எச்சிலினு லுண்டாகும் தீங்குகளைத் தெரிவிப்பதை விட அது மத சம்பந்தமாயும், ஒழுக்கத்தின் சம்பந்தமாயும் கெட்ட தென்று படித்தோர் சொன்னால் அக்காலத் திய ஜனங்கள் அவர்களின் பக்தியின் மிகுதியினால் கட்டுப்பட்டு நடப்பார்க ளென்பதே முக்கிய கருத்து. மேலும் இக்காலத்தைப்போல் முற்காலத்தில் எதை யும் சகலரும் தெரிந்து கொள்ளட்டும் என்கிற எண் ணமுங் கிடையாது. ஏதாவது முக்கியமான விஷ யம் சிலருக்குத் தெரிந்தால் அதை வெளிவிடாது ஙிரம்பவும் இரகசியமாய் வைத்துக்கொள்வது அக்கா லத்தாருடைய சுபாவம். ஆகையால் நாம் அவர்க ளைப்போலிராமல் நாமுந் தெரிந்துகொண்டு இதரர்க ளுக்கும் தெரிவித்தோமானால் அதிக நன்மையுண்டா கும். பணச்செலவு முதலாகிய சிரமமில்லாத விஷ யங்களை நன்றாய்க் கவனித்து துரப்பியாசங்களை யொழித்து நடந்து வந்தோமானால் வியாதி பணச் செலவு முதலானவை யில்லாமற் செய்துகொள்ளலா மல்லவா?

சுதேச மித்திரனில் ஒரு நிருபர்.

Dr. BENJAMIN FRANKLIN'S ADVICE.

டாக்டர் பெஞ்சமின் பிராங்க்ளினின் மிகநீயமதி.

பணத்தை வட்டிக்குப்போட்டால் அது குட்டி போடும்.—கையில் ஒரு காசு மிகுந்திருக்கும்போது 'தாரிக்குப் பொன்னுந் துரும்பு' என்றபடி, இந்த ஒரு காசு எதற்காகும், இதனால் என்ன பிரமாத முண்டாகப் போகிறது, என்று அலக்ஷியமாக எண்ணி செலவழிக்கக்கூடாது. 5 ஷில்லிங்கை வட்டிக்குப் போட்டால் அது 6 ஷில்லிங்காகும். மறுபடியும் அதை வட்டிக்குப்போட்டால் 7 ஷில்லிங்கு 3 பென்னி யாகும். 'பலதுளி பெருவெள்ளம்' என்பதுபோல் கடைசியாக 100 பவுனாகும். ஒரு கிரௌன் (5 ஷில் லிங்கு) அலக்ஷியஞ் செய்கிறவன் அதனாலுண்டா கும் சவரன்களையெல்லாம் இழந்தவனாகிறான்.

தினத்தில் 4 பென்னியாயிருந்ததல்லவோ வருஷத் தில் ஆறுபவுனாகிறது.—இதை ஞாபகம் வையுங்கள். எந்த விதமாகவாவது, கண்டோ காணமலோ, பிரதி தினத்திலும் காசாகவாவது, பொழுது போக்கியாக வாவது இந்த சொற்ப பணத்தை விரயம் செய்து விடுகிறோமல்லவா? இதை ஒரு நாணயஸ்தன் செய் வதென்னை? சொற்பமானாலுஞ் சரி, அதிக பண மானாலுஞ் சரி, தன்னுடைய ஜாமீன் பேரில் 120 பவு னுக்குக் குறையாத சரக்குகள் வாங்கிப்போட்டு அதைப்பின்னும் பின்னும் விருத்தி செய்வதிலேயே கண்ணோக்கமாய் இருப்பான்; எனவே நாணயஸ்தனி டம் தனலக்ஷிமி தாண்டவமாடுவ தென்பதற் கைய முண்டோ?

கடன் தொகையை கடுகெனத் திருப்பு.—எந்த சமயத்தில் எவனொருவன் தான் சொன்னசொல் பிச காமல் தான் வாங்கியிருக்கக்கூடிய கடனைத் திருப் பிக் கொடுக்கிறானோ அவனுக்கு எவ்வேளையிலும் எவரிடமிருந்தும் வேண்டும்போதெல்லாம் பணம் வந்துகொண்டே யிருக்கும். இது எவ்வளவோ காரியங்களுக்குப் பயன்படுமல்லவா? உலகத்தில். ஒருவன் உத்தமனாயுங் கௌரவஸ்தனாயும் உஜ்ஜீவிக் க தொழில் முயற்சியும், செட்டாய்ச் செலவிடுவ தும் அவசியம். ஆயினும் இவைகளோடு தான் செய் யும் விவகாரங்களிலெல்லாம் பொய்புரட்டு ஒன்று மில்லாமலும் சொன்னசொற் பிசகாமலும் இருத்தல் வேண்டும். ஆனது பற்றி நீர் பணம் கடன் வாங்கியிரு க்கும் பக்ஷத்தில் அதைத் திருப்பிக்கொடுப்பதாக எப் போது சொன்னீரோ அந்தக் காலத்திற்குப் பிறகு ஒருமணி நேரங்கூட செலுத்துவதில் தாமதம் இருக் கக்கூடாது. தாமதம் இருக்குமேயானால் உமக்குப் பணம் கொடுத்து உதவக்கூடிய நண்பர்கள்கூட உன் நாணயத்தைக் குறித்து சிறிது ஆலோசனை செய்ய இடமுண்டாகக் கூடும்.

ஒருவனுடைய நாணயத்தைக் கெடுக்கும் சில அற்பகாரியங்கள்.—நீர் வேலை செய்யும்பொழுது, காலையில் 5 மணிக்கும் அல்லது இரவில் 9 மணிக் கும், உண்டாகும் சம்மட்டி சப்தம் உமக்குக் கடன் கொடுத்தவனுக்கும் கேட்குமானால், அவன் என்ன நினைத்துக் கொள்வானென்றால் "இவன் சரியாய் உழைக்கிறான். நம்முடைய பணத்துக்குப் பய மில்லை" என்று கவலையற்றிருப்பான். அப்படியல் லாமல் வேலை செய்வதற்குப் பதிலாக உம்மைக் கள் ளுக்கடையிலாவது அல்லது சூதாடுமிடத்திலாவது காண்பானேயானால் உடனே அவன் உம்மை பணத்

தை திருப்பிக் கொடுக்கும்படி வற்புறுத்துவான். ஏனெனில் அவனுச்குத்தன் பணம் தனக்குத் திரும்பி வராது என்ற அவநம்பிக்கை உண்டாய் விடுகிறது.

வரவுக்குத் தகுந்த செலவு.—நமக்கு வந்த வரவு எவ்வளவு? நாம் செலவு செய்வதெவ்வளவு? என்ற ஒரு ஏற்பாடில்லாமல் பலர் மிதமிஞ்சி செலவு செய்து கடன்பட்டு கஷ்டப்படுகின்றனர். இதில் நீரும் மூழ்காதிருப்பதற்கு, நீர் உமக்கு வரவு எவ்வளவு செலவு எவ்வளவு என்று விவரமாய் கணக்கெழுதி வைத்திருக்கவேண்டும். எப்படி கொஞ்சம் கொஞ்சமாய் செலவுசெய்து கடைசியில் அது ஒரு பெருந்தொகையாகின்றதென்பது நீர் இந்த சிரத்தையெடுத்துக்கொண்டால் தான் தெரியும். அப்பொழுது தான் உமக்கு 'நம்முடைய ஸ்திதி இப்படியிருக்கிறது. இனிமேல் இப்படியிருக்கும். ஒரு ஆபத்து வந்தால் அதிலிருந்து எப்படி தப்பித்துக்கொள்வது; என்று பகுத்தறியும் சக்தி யுண்டாகும்.

இந்து நேசனில் 'நீலோத்பலம்'.

PADDY MANURING.

நெற்பயிருக்கு எருவிடுதல்.

தென்னிந்தியாவில் வழங்குகிறபடி நெல்சாகுபடியானது சாதாரணசாகுபடியிலிருந்து விசேஷமாய் வேறுபடுகிறது. ஆகையால் மேற்படி நிலங்களுக்கு எருவிடுகிற முறைகளுங் கூட வேறுபடும்.

முதலில் நாற்று நடுவதற்காகப்பூமியை ஒருவிதமாய்ச் சேருக்கித் தயார்செய்வதில் மேற்படி மண் மிகச்சன்னமானதாகவும் களிப்புள்ளதாகவும் செய்யப்படுகிறது. தொழு எரு, மீன் எரு, பிண்ணாக்கெரு, பசுந்தாளெரு முதலிய எருவகைகளும் மூலவஸ்துக்களை (ஆர்க்கானிக் மாட்டர்) ஜாஸ்தியும் மற்ற உணவுகளைச் சுமாராகவுமுடைய இதர எருக்களுமே மேற்சொன்ன சேற்றில் பயிர் செய்யும் நிலைமைக்கு மிகத் தகுந்தவைகளென்று சர்க்கார் பண்ணைகளில் நடத்தப்பட்டிருக்கிற பரிக்ஷைகளால் தெரிய வருகிறது. மேற்சொன்ன ஜாஸ்தியான மூலவஸ்துக்கள் (ஆர்க்கானிக் மாட்டர்) பூமியில் மக்கும்போது, உழுது சேருக்குவதனல் பூமிக்கு உண்டாகும் இறுகும் குணத்தைமாற்றி வேலை செய்யக்கூடிய இருந்தை (ஹ்யுமஸ்) என்று சொல்லப்பட்ட ஒரு பொருளை யுண்டாக்குகிறது.

இரண்டாவது, நன்செய் நிலங்களில் பயிர் ஏறியிருக்கும்போது, எப்போதும் தண்ணீர் கட்டியிருப்பதால், மேற்படி நிலங்கள் பூராவாக நீர் பிடிபட்டு மண்ணுக்குள் காற்றோட்ட மில்லாமலிருக்கிறது. இப்படி தண்ணீர் கட்டி யிருக்கும் நிலைமையானது, புன்செய் நிலங்களில் எருக்கள் மக்குவது போலல்லாமல் முழுதும் வேறுவிதமாக எருக்களை மக்கவைக்கின்றது. நைட்ரோஜன் என்று சொல்லப்படும் வெடியுப்பு வாயுவை பயிர்கள் உட்கொள்ளு முன், அப்பயிருணவு அடையுமாறுபாடுகளை இன்னிலைமை வித்தியாஸப் படுத்துகிறது. இந்நிலைமைக்குத் தகாத எருக்களை உபயோகித்தால் அவ்வெருக்களிலிருக்கும் இம்முக்கியமான பயிருணவையே முழுதும் சேதமாக்கலாம். பொட்டிலுப்பு இனத்தைச் சேர்ந்த சில எருக்கள் விசேஷமாய் இம்மாதிரி தான் பிரிக்கப்பட்டு மேற்படி நைட்ரோஜன் சத்தானது சின்னபின்னமாய்ப் பயிருக்கு உபயோகப் படாமல் காற்றுடன் கலந்துபோய் விடுகிறது. ஆனல் அம்மோனியா என்னும் பொருளோடுகூடிய எருக்களும் இன்னிலைமையில் அம்மோனியாவைக் கொடுக்கக்கூடிய மேற்கண்ட மூலவஸ்துக்களை ஜாஸ்தியாய் உடைத்தான எருக்களுமே இன்னிலைமைக்கு ஏற்றவைகள். மேலும் தண்ணீரில் இலேசாய்க்கரைந்து பூமியால் இழுத்து வைத்துக்கொள்ளக் கூடாத எருக்களும் நன்செய் நிலங்களிலிருந்து கரைபட்டு வீணாகப்போகின்றன.

நெற்பயிரின் ஊட்ட விஷயத்தைப்பற்றி அடுத்தபடி யோசிப்போமாகில் நெல்லானது தானியப்பயிரானதால் அதற்கு பொடாஷ் என்று சொல்லப்படும் சாம்பல் காரத்தைக்காட்டிலும் பாஸ்வாரிக்காஸிட் என்று சொல்லப்படும் பிரகாசதாமிலத்தை ஜாஸ்தியாய்ப் போடவேண்டும். ஆனதுபற்றி அநேகமாய் தென்னிந்தியாவிலுள்ள நிலங்கள் சுமாராகப் போதுமான சாம்பல் காரத்தோடும் முறையே பிரகாசதாமிலத்தில்மிகக் குறைவுள்ள தாகவு மிருப்பதால் இப்பயிருக்கு அவசியமான பிரகாசதாமிலத்தைப் போதுமளவு செலுத்துவதில் முக்கிய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். வாஸ்தவமாகவே நிலங்களுக்

குச் சாம்பல்காரம் அவசியமாக இருந்தாலொழிய சாம்பல்காரத்தோடு கூடிய எருக்களைப் போடுவது மிகக்கெடுதலென்று பரீக்ஷை மூலமாகத் தெரியவருகிறது. ஏனென்றால் சாம்பல் காரத்தோடு கூடிய எருக்களை உபயோகிப்பதால் மாசூலில் தானியம் குறைந்துபோக இடமிருக்கிறது.

சுருக்கமாய், ஜாஸ்தியான மூல வஸ்துக்களோடும், பூரணமாய் வெடியுப்பு வாயுவையும் பிரகாச தாமிலத்தையும் உடைத்தான எருக்களே நெற்பயிருக்கு மிகத் திறமான எருக்கள். பரிக்ஷை மூலயாய் லாபகரமென்று தெரிந்த விடங்களில் மாத்திரம் சாம்பல்காரமுள்ள எருக்களை உபயோகப்படுத்த வேண்டும். பொட்டிலுப்பு இனத்தைச் சேர்ந்த எருக்களை உபயோகப்படுத்தவே கூடாது.

தென்னிந்தியாவில் அகப்படக்கூடிய எருக்களை யோசித்துப் பார்க்குமளவில், மீன் எரு, தொழு எரு, பிண்ணாக்கு இவைகள் மேற்சொன்ன விஷயங்களுக்கெல்லாம் ஒத்தஎருத்தினுசுகளாகையால், அவைகளை நம்பிக்கையுடன் உபயோகப்படுத்தலாம். ஸரஸமாயும் ஜாஸ்தியாயும் அகப்படக்கூடிய இடங்களில் இலைதழைகளை நெற்பயிருக்கு எருவாக உபயோகப்படுத்துவது மிகசிலாக்கியம். ஆனால் சாத்தியப்படும் இடங்களில் நெற் பயிருக்கு மிக ஸரஸமாக எருவிடுவது எப்படியென்றால், வயல்களில் பசுந்தாள்களை விளைவித்து மேற்படி வயல்களிலேயே உழுதுவிடுவதே. சித்தகத்தி, சடம்பு, கொழுஞ்சி, பயறு வகையறுச் செடிகளைப் பசுந்தாள் எருவுக்கென்று விளைத்து உழுதுவிடலாம். ஏனெனில் அவைகளுக்குக் காற்றிலிருந்து வெடியுப்பு வாயுவைப் பிரித்துத் தனக்குள் ஐக்கியப்படுத்தித் தனக்குப் பின் வரும் பயிர்களுக்கு உபயோகப்படுமாறு மேற்படி வெடியுப்பு வாயுவைத் தனக்குள் சேர்த்து வைக்கக்கூடிய சக்தி உண்டு. ஆகவே பிண்ணாக்குத் தினுசு எருக்களை கிருஷிகர் உபயோகிக்கும் போது அதிலிருந்து கிடைக்கும் வெடியுப்புவாயு ராத்தல் ஒன்றுக்கு 8 அணா முதல் $8\frac{1}{2}$ அணா விகிதமும், சேர்க்கை எருக்களை உபயோகிக்கும் போது அதிலிருந்து கிடைக்கும் வெடியுப்பு வாயுராத்தல் ஒன்றுக்கு10-அணாவிகிதமும் அடங்கும். ஆனால் பசுந்தாள் எருவுக்கென்று விதைத்து அதையே உழுது விடுவதில் கிடைக்கும் வெடியுப்பு வாயுவின் கிரயம் கிருஷிகருக்குச் சாதாரணமாய் அப்பயிர் செய்யும் செலவுக்குள் அடங்கும். அதன் மதிப்பு ஜாஸ்தியாய் திட்ட மிட்டபோதிலும் சுமார் ராத்தல் ஒன்றுக்கு ஒரு அணாவுக்கு மேற்படாது.

சாதாரணமாய் மீன் எரு, தொழு எரு, பசுந்தாள் எரு இவைகளுடன் பிரகாசதாமிலத்தோடு கூடிய எருக்களை கலந்துபோடுவது அவசியம். ஆனாலும் பெரும்பான்மையாய்த் தனியே பிண்ணாக்கு அல்லது பசுந்தாள் எருக்களை உபயோகப்படுத்துவதில் கிடைக்கும் மாசூலை விட மேற்படி (பிரகாச தாமில) எருக்களைப்பசுந்தாளுடனும், சில சமயங்களில் பிண்ணாக்குடனும் சேர்த்துப் போடுவதில் ஜாஸ்தி மாசூல் கிடைக்கும்.

இதே விஷயத்தை உத்தேசித்து சூபர்பாஸ்பேட்டையும் எலும்புப் பொடியையும் உபயோகப்படுத்தலாம். எலும்புத்தூள் மிகக் கம்மியாக மழை உள்ள இடங்களில் புன்செய்களுக் கேற்றதல்லாத போதிலும் நன்செய் நிலங்களில் அதிசீக்கிரம் மக்கி பயிர்களுக்கு ஆதாரமாகக் கூடியது பற்றி மேற்படி நிலங்களுக்கு மிகவும் உபயோககரமுள்ளது.

டப்ளியு. எச். ஹாரிசன்,
அக்கிரிகல்சரல் கெமிஸ்டு.

CARE OF COWS.

பசுமாடுகளை ஸரியாய் நடத்தும் விதம்.

பசும்பாலில் முக்கால்பாகம் தண்ணீரும், மீதியான கால்பாகத்தில் வெண்ணெய், சர்க்கரை, ஒருவிதமான கரியமில வஸ்து, இவைகளெல்லாம் இருக்கின்றன. ஆனால் இந்த வஸ்துக்களின் தாரதம்மிய அளவு எல்லாப் பசுக்களின் பாலில் ஒரே மாதிரியாக இராது, இந்த வஸ்துக்களில் உயர்ந்தவை, வெண்ணெய். சர்க்கரை, கரியமில வஸ்து, இவைகள்தான் மாடு ஜாஸ்தியாக கறப்பதும் பால் நன்றாயிருப்பதும் மாடுகளின் ஜாதியை ஒத்தன. பால் வெண்ணெய் விற்குமிடங்களில் உயர்ந்த ஜாதிமாடுகளை வைத்து வியாபாரம் செய்யாததினால்தான் வியாபாரிகளுக்கு ஸரிவரகட்டி வருகிறதில்லை. இவ்விடங்களில் பசுமாடுகளை ஸவுகரியமாக நடத்துகிறதில்லை. அதினால் அவைகளுக்கு வியாதிகள் உண்டாகின்றன. அப்பொழுது பாலின் அளவும் குணமும் குறைகின்றன.

ஆகையால் பசுக்கள் வைத்திருக்கிறவர்கள் அவைகளுக்கு வியாதி வராமலிருக்க ஏற்பாடு செய்யவேண்டியது முக்கியமான விஷயம்.

பால் கறக்கும் விதம் முக்கியமானவிஷயம். அதிக பலத்தை உபயோகித்து கறக்காமலிருக்கவேண்டும். பாலை நன்றாய்க் கறக்கவேண்டும். கன்று அடிக்கடி விடக்கூடாது. கன்றுக்குட்டிக்கு கடைசியில் எவ்வளவு பால் விடவேண்டுமோ அவ்வளவுதான் விடவேண்டும். அப்பொழுதுதான் பால் சிலாக்கியமாயிருக்கும். பால் கறப்பதற்கு முன் கன்றைவிட்டுக் கறக்கவேண்டும், கறப்பதற்குமுன் முதலில் கறந்த சில துளிபால்களில் விரல்களை நனைத்துக் கறப்பது மிகவும் கேவலமான வழி.

பசு மாடுகளைக் குறித்து.—சுத்தத்தைப்பற்றி மிகவும் முக்கியமாயிருக்கவேண்டும். பால் என்பது பசுவின் இரத்தத்தினின்றும் எடுக்கப்படுகிற வஸ்து. பசுக்கள் சுத்தமாயிருக்காவிடில் ரத்தம் கெடும். கெட்ட ரத்தத்தினின்றும் எடுக்கப்பட்டபால் நமக்கு அசவுகரிய மல்லவா? மாட்டுக் கொட்டாய் மிகவும் சுத்தமாயும் நாற்றம் முதலானவைகளிராமலு மிருக்க வேண்டும். பிரதிதினமும் கொட்டையை நன்றாய் சுத்தப்படுத்தவேண்டும். மாடுகளை அடிக்கடி நீராட வைத்து தேகத்தை சுத்தமாய் துடைத்து வரவேண்டும். இந்த விஷயங்களை நாம் பார்க்காவிடில் பசுவின் பால் கெடுவதுடன் கறவையும் குறையும். கொட்டாயை வருஷத்திற்கு இரண்டு முறையாவது சுண்ணும்படித்து விடவேண்டும். பினைல் என்னும் ஒரு திராவகத்தை இவ்விடத்தில் இரண்டு நாளைக் கொரு முறை தெளிக்கவேண்டும். சுண்ணும்புடன் மரப் பொடியைக் கலந்து இவ்விடத்தில் அடிக்கடி தெளித்தால் நலம்.

இப்பொழுது கைத்தொழில் விவசாயம் முதலான இவைகளை யுரிய கண்காக்ஷிகளின் பிரயோசனத்தைப்பற்றி நமது துரைத்தனத்தார் எல்லோரும் அதிகமாய் அபிப்பிராயப்படுகிறார்கள். பசுமாட்டுக் கண்காக்ஷிகளைப்போல ஜனங்களுக்கு நன்மையைத் தரும்.

IRON PLOUGHS.

இரும்புக் கலப்பைகள்.

(தென்னிந்தியா விவஸாயத்தில் எழுதியபடி பிரசுரிக்கப் பட்டிருக்கிறது).

புராதனமாய்த் தொன்றுதொட்டு விவசாயமே முக்கியத் தொழிலாய் அனுசரித்து வரும் இந்நாட்டிற்கு மரக்கலப்பை உபயோகத்திலிருக்க, பிறதேசத்திலிருந்து இரும்புக் கலப்பையைக் கொண்டுவந்து அதுதான் இந்நாட்டுக்குத் தகுந்ததென்று சாஸ்திரம் படித்தவர்கள் ஏன் தெரிவிக்க வேண்டும்? மண்ணைத் தக்கவாறு ஆழமாகவும் படைச்சால் அகலமாகவும் உழ வெடுக்க வேண்டுமென்பது தேசத்திய கொள்கை யாகையால் ஜாண்உழவு முழ எருவுக்குச் சமானம்; அகல உழுவதை ஆழ உழு; ஆழ உழுதாலும் அடுக்க உழு; ஏழுழவு உழுதால் எருப்போடவேண்டாம்; உழுதவன் காட்டைப் பார்; 'மேழிச் செல்வம் கோழைபடாது,' உழவிற்கு ஏற்றகொழு ஆற்ற புழுதி ஈரம் தாங்கும்; அதிர அடித்தால் உதிர விளையும், 'தொடிப் புழுதிகஃசா உணக்கிற் பிடித் தெருவும் வேண்டாது சாலப்பெறும்' என்று பழமொழிகளும், வாக்கியங்களும் பழக்கத்தில் இருக்கின்றன. ஆக, கலப்பையால் ஆழமாகவும், அகலமாகவும், கட்டை யில்லாமல் அடுக்காயும், ஏற்ற கொழு கொண்டும், உழும்படித் தெரிவித்திருக்கிறது. அப்போது எரு வேண்டாமென்றும், ஈரம் தாங்குமென்றும், உதிர விளையுமென்றும், இருக்கிறபடியால், மரக் கலப்பைகள் அங்கங்கே மாட்டுச் சக்தியை அனுசரித்து வெவ்வேறு பட்ட அனுசரணையில் இருக்கின்றன. இக்கலப்பைகள் 12 பெரிய எருதுகள்பூட்டி ஒரு முழ ஆழம் கரிசல் மண்ணைப் புறட்ட, கடப்பை, கர்னூல், பல்லாரியில் பெத்த மடக வென்றும், மாடுகள் வலிவுகுறைந்த மலையாள தேசத்தில் கலப்பை கடியால் குழவாய்ச்செய்து மேல்பக்கத்தில் இருபுறமும் சாய்ப்பாகச் செய்து உழ, மாட்டுக்குக் கஷ்டமில்லாமலும் அமைக்கப்பட்டிருக்கிறது. கோதாவரி ஜில்லாவில் மாட்டு வலிவு போதுமானபடி யிருப்பதால் அங்கே மாட்டின் கஷ்டத்தைக் கவனியாமல் கலப்பைக்கும் ஏர்க்காலுக்கும் மத்தியில் அகலமாயிருந்து மண்சேர இடம் கொடுத்திருக்கிறது. தமிழ் நாட்டிலும், திருச்சி, திருநெல்வேலியில் பெருங்

கலப்பைகளும், செங்கல்பட்டு, மஞ்சக்குப்பத்தில் சிறு கலப்பைகளும், தஞ்சாவூரில் கேவலம் சிறு கலப்பைகளும் இருக்கின்றன.

இவ்வாறு இருந்தும் அவைகள் தற்கால சாஸ்திரப் படிப் பொருந்தியில்லை யாதலால், 'கொஞ்சம் சிரமத்திற்கு அதிக வேலை' யென்னும் கோட்பாட்டுக்கு விரோதப்பட்டிருக்கிறது. ஆழ உழ வேண்டியது மழை காலாகாலத்தும் நிதானமாயுமில்லாத இக்காலத்தில் அவசியம். இவ்வாறு காலமனுகூலமில்லாத இச்சமயத்தில் நமக்கு வேலை எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்கப்படுகிறதோ அவ்வளவுச்கு விதைப்பு முதலிய வேலைகள் சீக்கிரம் நடக்கும். இவ்வுஷ்ண தேசத்தில் ஆழ உழுதால் வேர் ஆழமாகவும் சுலபமாகவும் மண்ணுக்குள் போய், சூரியகொடுமைக்குத் தப்புவிக்கும். காற்றும் ஈரமும் மண்ணுக்குள் ஆழமாய்ப் போய் வேர் மூலமாய்ச் செடியைப் போஷிக்கும். காற்றிலுள்ள ஈரத்தையும் இதர வாயுக்களையும் மண் கிரகிக்கும். பிராணவாயு, கரியமிலவாயு, ஈரம் இவைகள் மண்ணுக்குள் ஆழமாகச் சேர, மண் செழிக்கும். ஆழ உழவினால் மண் இயற்கைமாறும். பூச்சிப் புழுக்கள் மண்ணில் இட்டமுட்டைகளை வெளித்தள்ளுவதால் பறவைகள் பொறுக்கித்தின்று பயிருக்குக் கெடுதிசெய்யும் பூச்சிகள் குறையும். மண்ணில் சிற்றுயிர் பிராணிகள் அதிகப்பட்டு கரையாத தன்மையிலுள்ள பயிருணவு கரையுந் தன்மையடையும். இவ்வாறு அனுகூலங்களை நாம் அடையாதிருப்பதால் நமது விவசாயம் தாழ்ந்திருக்கிறது. அதற்குக்காரணம் நமது கலப்பை தக்கபடி இல்லாததினாலேயே. ஆகவே, நமது கலப்பை அதிக வேலை செய்ய மாற்றப்படவேண்டும். தற்காலத்தில் ஐரோப்பியர் அவ்வாறு மாற்றி இருப்பதினால் அவைகளை நாம் அனுசரித்தால் நமது இராஜதானியில் 1866-ல் இன்ஜினீயராயிருந்த மேஜர் காட்டன் என்பவர் சீமைக்கு லீவில் போயிருக்கும்போது ரான்சமஸ் கம்பெனியில் ஏற்பாடுசெய்து அங்கு வேலைசெய்யும் பலவித கலப்பைகளையும் மற்ற விவசாயக்கருவிகளையும் சென்னைக்கு அனுப்பும்படி செய்தார். அவ்வாறே செக்ரிடரி ஆப்ஸ்டேட் மூலமாகச் சென்னைக்கு மேற்படி கருவிகள் வந்துசேர்ந்தன. அவைகள் இந்நாட்டுக்குப் பொருந்தினவா இல்லையா என்று பரீக்ஷிக்கப்படவேண்டு மென்றும், அதற்காக ஐரோப்பியரும் சுதேசிகளும் சேர்ந்த ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. இவை வேலைசெய்ய இடம் வேண்டுமென்று சைதாப்பேட்டையில் ஒன்றுக்கும் உதவாமல் இருந்த ரோஷம்பாக் என்னும் தோட்டத்தை இக்கமிட்டியாரிடத்தில் கவர்ன்மெண்டார் ஒப்புவித்தார்கள். இவர்கள் மூன்று நான்கு வருஷம் பரீக்ஷை செய்து தங்களால் பரீக்ஷை திருப்தியாய் முடியாதென்றும், பரீக்ஷையில் சாஸ்திரப்பயிற்சி அவசியமென்றும் தெரிவித்தார்கள். 1869-ம் வருஷத்தில் இப்பரீக்ஷைகளை நிறைவேற்ற மிஸ்டர் ராபர்ட்சன் என்பவர் சீமையிலிருந்து வந்து இக்காரியத்தை நிறைவேற்றினார். அவர் நமது க்ஷேமத்துக்குப் பாடுபட்டது அபாரமாயிருக்கிறது. தற்கால விவசாய டிபார்ட்மெண்டு அவருடைய முயற்சியாலே உண்டாயிற்று. தற்கால விவசாய காலேஜ் அவராலேயே உண்டாயிற்று. இவ்வாறு டிபார்ட் மெண்டையும் விவசாயப் பள்ளிக்கூடத்தையும் உண்டாக்கி அவைகளுக்கு முதல் அதிபதி அவராயிருந்தார். இரும்புக் கலப்பையால் இவ்வளவு விர்த்தியாயிற்று. இரும்புக் கலப்பை விஷயமாய் அவர் பரீக்ஷித்ததில் இந்நாட்டுக்கு ஆழ உழும் கருவி அவசிய மென்றும், இரும்புக்கலப்பையே அவ்வேலையைத் திருப்தியாய் நடப்பிக்குமென்றும் தீர்மானித்தார். சீமையிலிருந்து வந்த கலப்பைகள் பலவிதமாயும் குதிரை நீராவி சக்திக்கு ஏற்றதுமாயும் இருந்தபடியால் அவைகளில் சிறியவைகளை நமது மாட்டுச் சக்திக்குத் தக்கவண்ணம் தெரிந்தெடுத்து ஸ்டீவன் கலப்பைகளை நிலைநிறுத்தினார். இவை முதலில் ஏராளமாய் வரவழைக்கப்பட்டு ஜில்லாவுக்கு ஒன்று காட்சிக்கு இருக்கவேண்டுமென்று அனுப்பினார். நாளாவட்டத்து அனுபோகத்தில் இக்கலப்பை நாட்டிலுள்ள பெரிய மாடுகளுக்கு மாத்திரம் உபயோகப்படுகிறதென்றும், மற்றவிலை குறைந்த மாடுகள் இழுக்கக் கஷ்டப்படுகிறதென்றும், சிறு கலப்பைகள் செய்யவேண்டுமென்று சைதாப்பேட்டையில் ஒரு பட்டரையை அமைத்தார். இதில் கலப்பை மாறுதல் அடைந்தே வந்தது. இவ்வாறு கலப்பை செய்வதை மாசி கம்பெனியார் அனுசரித்துச் சிறு கலப்பைகளைப் புதுப்பித்தார்கள். 1887-ம் வருஷத்தில் கலப்பைப் பரீக்ஷை செய்து பரிசுகொடுக்கக் கவர்ன்மெண்டார் யத்தனித்ததில் சைதாப்பேட்டை கலப்பை ஒர்க்

ஷாப்பில் மேஸ்திரியா யிருந்த நீலகண்ட ஆசாரி ஒரு கலப்பையை வேலைசெய்து காட்டவே மாசி கம்பெனியாரின் கலப்பையைவிட நேர்த்தியாய் வேலைசெய்தது. இதற்குக் கொடுக்கவேண்டிய பரிசு வேறுபல காரணத்தை யனுசரித்து மாசி கம்பெனி யாருக்குப் போயிற்று.

இவ்வாறு மாறுதலடைந்து நமது மாட்டுக்குத் தக்க வண்ணம் 6, 7 ரூபாய்க்குக் கிடைக்கும்படி யான சிறு கலப்பைகள் உண்டாயின. பெரியமாடு வைத்திருப்பவர்கள் 18 ரூபாயுள்ள பெரிய கலப்பை களை உபயோகிக்கவேண்டும்.

இவ்வாறு விருத்தி முடிவுபெற்றபடியால் இனி மேல் நாட்டுக் கலப்பை ஒழியவேண்டிய காலம் வந்துவிட்டதென்று சொல்லலாம். அவ்வாறு சொல்ல, பல சந்தர்ப்பங்கள் குறுக்கே நிற்கின்றன. மரக் கலப்பையின் வேலை பூராவாய் இரும்புக் கல்ப்பையால் முடியவில்லை யாகையால், மரக்கலப் பையும் நாட்டிலிருந்து அதற்குத் தகுந்த வேலை யையும் செய்யவேண்டும். சொற்பவிலைக்கு மரம் கிடைத்தால் கல்லாங்காடுகளில் மரக்கலப்பையே விசேஷம். ஈரம் குறைந்த சமயத்தில் மரக்கலப்பை மண்ணைக் கீறி முதல் உழவு எடுக்க உதவுகிறது. அடியில் ஈர மிருக்கும்பக்ஷத்தில் இரும்புக் கலப்பை பின்னல் வேலைசெய்து முடிக்கும். பயிர் மத்தியில் உழவு செய்யவும் மண்ணை ஆழ உழுவதற்கும் மரக் கலப்பை உபயோகமாகும்.

மூன்று நாலு அங்குலத்துக்கு அதிகமாய்ச் சாதா ரண மரக்கலப்பை உழமாட்டாதாகையாலும் இடை இடையே கட்டை பெயராமலிருக்கிறபடியால் வேலை சீக்கிரம் அரை ஏகராவுக்கு அதிகமாய் முடி யாதாதலாலும் இரும்புக் கலப்பையை அனுசரிக்க வேண்டுமென்று சாஸ்திரிகள் தெரிவிக்கிறார்கள்.

ஆழ உழவு நடப்பிக்கும் இரும்புக் கலப்பையால் மண்ணில் மழை புரண்டு ஓடாமல் நிலத்து மண் ஈரம் பிடித்துப் பயிரைப் போஷிக்கும். 1877-ம் வருஷத்தில் 7 அங்குலம் ஆழமாய் உழுது 20 வண்டி எரு போட்டு சோளம் விளைவிக்க, நாற்று புறம் எங்கும் ஒரு புல்கூட காணவிட்டாலும் உழுத நிலத்தில் மாத்திரம் நீர் பாய்ச்சலில்லாமலே சோளம் வளர்ந்து மாட்டுக்குத் தீவனமாவது கிடைத் தது. இரும்புக் கலப்பை உழவால் பயிர் வரட்சி தாங்கமுடியும்.

சிறு இரும்புக் கலப்பையும் மூன்றத்தனை உழவு வேலை செய்வதால் அகாலமழை பெய்யும் இக்காலத் தில் விதைப்பு பட்டத்தைக் காப்பாற்ற அனுகூல மாயிருக்கிறது. இரும்புக் கலப்பையால் உழவு செய்ய, நிலத்தில் இருக்கும் மண்ணானது கட்டை கட்டையாய் இல்லாமலிருப்பதால் குறுக்கு நெடுக்கு உழவிலேயே மண் புழுதியாய் விடுகிறது. இவ்வாறு ஆழமாக உழுது புழுதி யேற்றிய மண்ணில் விதை கொஞ்சமாகப்பிடித்து ஒவ்வொரு செடியும் அதிக மாகக் கிளைக்கிறது. ஆக இந்நிலத்தில் விதை நஷ்ட உம் இல்லை. களையெடுப்பது இவ்வாறு பண் படுத்திய நிலத்தில் சுலபமாக இருக்கிறது. செடிக்கு உயிர் வலிவேறுகிறபடியால் நோய்நொடிகள் பூச்சி புழுக்கள் பாதை செய்தாலும் பயிர்தப்பிக் கதிர் வாங்கிவிடும். இரும்புக் கலப்பையால் வரப்பு வெட்டலாம். நீர் பாய்ச்சுவதற்காகக் கால் செய் வது இதனல் முடியும். வரப்புகளில் பயிர் செய்ய வேண்டுமானல் நிலத்தைக் கால்களும் வரப்புகளு மாக மஞ்சுகட்ட உதவும். இவ்வாறு பல வேலை களுக்குக்கும் இரும்புக் கலப்பை உபயோகப்படுவ தால் பலவிதமாய் ஆள்கூலி மிச்சமாகிறது.

தமிழ்நாட்டில் இரும்புக் கலப்பை பெரியது. மாடு இழுக்க சக்தியில்லையென்று மாட்டுக்குத் தக்க வண்ணம் சிறு கலப்பைகள் செய்யப்பட்டு, பல்லாரி யில் 12 எருது இழுக்கும் மரக்கலப்பை அதிக கஷ்ட மென்று 60 ரூபாயுள்ள இரும்புக் கலப்பை வந்து மரக்கலப்பையை சாகடித்துவிட்டது. அவர்களுக் குக் கலப்பை சிறியதென்று 80 ரூபாய் கலப்பை வாங்கினர்கள். அதுவும் போதாதென்று 100 ரூபாய்க் கலப்பை வாங்கி தற்காலத்தில் 1,000 கலப் பைக்கு அதிகமாக வழக்கத்தில் வந்திருக்கிறது அதுபோலவே தமிழ் நாட்டிலும் மரக் கலப்பை நாளாவட்டத்தில் தொலைந்து விடுமே யொழிய நிலைக்காது.

பல்லாரியில் சக்தியுள்ள மாடுகள் உழவுக்கு உப யோகப்பட, தமிழ் நாட்டில் கேவலம் எலும்பும் தோலுமாயுள்ள எருதுகள் கலப்பைக்கு உதவுவது தான் இவ்விடத்திய கலப்பைகளுக்குக் காரணம். தமிழ்நாட்டு மாடுகளுக்கென்று கலப்பை சிறிய

வைகளாக்கப்பட்டாலும் அவை தக்கபடி பாதுகாக்கப்படாத்தினுல் தினேதினே மாடுகள் க்ஷீணமடைந்துவருகின்றன. நாட்டுக்கலப்பையை இம்மாடுகள் ஆழமாய் உழாவிட்டால் மேல்மண்ணையாகிலும் கீறிவிடுகிறபடியால் உழவு முடிகிறதென்று எந்த மாட்டையும் உழவுக்கு உபயோகிக்கிருர்கள். ஆழ உழவென்று சவனம் தொலேந்து விதைப்புக்கு உழவென்று தற்காலம் வேலே நடந்தேறுகிறது. பளு விழுக்கமுடியாத வண்டிகளில் நல்லமாடு பூட்டுவதும் உழுதலுக்கு எந்த மாடானுலும் போதுமென்பதும் இக்காலத்துக்கொள்கை; இதுவே தேசத்திற்குக் கெடுதி. வண்டி இழுக்க வலுத்தமாடு வேண்ள்மென்ருல் கலப்பை இழுக்க இன்னம் வலிவுள் மாடுகள் அவசியம். அப்போது தான் ஆழமாக உழவு முடியும் மாடு எவ்வளவுக்கு வலுத்திருக்கிறதோ. உழவு அவ்வளவுக்கும் ஆழமாகமுடியும். இத்தேசத்துத் தற்கால பேதங்களுக்கு ஒன்பது அங்குல ஆழ உழவெடுத்தால்தான் பலகஷ்டங்கள் தொலேந்து நஷ்டமில்லாமல்விவசாயம் நடந்தேறும். தேசம் வறுமையால் பீடிக்கப்படாமல் க்ஷேமப்படும். அப்போது தான் உழவுகோல் செங்கோலாகுமென்று சொல்லலாம். அப்போதுதான் “ஒதுவாரெல்லாம் உழுவான் தலேக்கடையில்” என்று சொல்லலாம். அப்போதுதான் விவசாயம் மகிமைப்படும். குடித்தனத்தானுக்கு மதிப்புண்டாகும்.

மேற்கண்ட விதமாக இரும்புக் கலப்பையால் விவசாய டிபார்ட்மெண்டும், விவசாயக் காலேஜும் இவ்விராஜதானியில் நிலே பெற்றது. விவசாயச் சங்கங்கள் உண்டானதற்கும் இதுவேகாரணம்.

சுமார் 10 வருஷங்களுக்கு முன்னமே நாம் கவர்ன்மெண்டு விவசாய இன்ஸ்பெக்டராயிருந்தபோது, பெங்களூருக்கடுத்த இந்துப்பூரில் நார்பயிர் விளைவிக்க ஏற்பாடு நடந்ததில், கற்ருழை மத்தியில் ஏதாவது பயிர் செய்யலாமென்று அங்கிருந்த ஸ்வீடென் கவர்ன்மெண்டு கலப்பை கொண்டு மத்தியில் உழுது ஆமணக்கை விதைத்தோம். அவ்வருஷம் மழை குறைந்திருந்தும் ஆமணக்கு நன்ருய் வளர்ந்து சில செடிகள்காய்த்தன. அக்காலத்தில் விவசாயக்காலேஜில் உபபிரின்ஸிபாலாயிருந்த தாரன் என்பவர் நாட்டு விவசாயம் தெரியவேண்டுமென்றும், அவருக்குத் துணையாக இருக்க நம்மைபோர்டார் ஏற்படுத்தினுர்கள். நாங்கள் அநந்தபூர் பெனுகொண்டாவுக்கு வந்தபோது அவ்விடத்தில் எட் அஸிஸ்டெண்டு கலெக்டராயிருந்த மிஸ்டர் காம்பெல் என்பவர் ஓர் விவசாய உபந்யாசஞ் செய்யும்படி ஏற்பாடுசெய்தார். அச்சமயத்தில் இந்துப்பூரில் விளேந்திருந்த ஆமணக்கங்குலேகள் சில கொண்டு வரப்பட்டு வந்தவர்களுக்குக் காண்பிக்கலாயிற்று. இக்குலேயைப் பார்த்து வந்தவர்கள் பிரமித்தார்கள். அவ்வளவு பெரிய குலேகளே புன்செய் சாகுபடியில் பார்த்ததில்லேயென்று பேசிக்கொண்டார்கள். இரும்புக் கலப்பையால் உழுத உழவு இவ்வளவு ஆச்சரியத்தை உண்டாக்க, விவசாய விருத்தியில்லாமே விருக்கிறதென்று அங்கே அப்போதே ஒரு விவசாயச் சங்கம் ஏற்பட்டது. அதன் வேலேயைப்பார்த்து தஞ்சாவூர் சங்கம் ஏற்பட்டது. இவ்வாறு ஒவ்வொன்ருய் ராஜதானி முழுவதும் உயிர் பெற்று நிலேத்தன; ஆகவே, இரும்புக் கலப்பையைத் தாராளமாய்க்கையாடவேண்டும். நீலகண்டாசாரிசெய்த கலப்பையைப் போலவே நாம் செய்து 6 ரூபாய்க்குச்சென்ற இரண்டு வருஷகாலமாய் நூறு கலப்பைக்கு அதிகமாகத் தமிழ்நாடுகளுக்கு அனுப்பியிருக்கிருேம். (வேண்டியவர்கள் இப்பத்திராதிபருக்கு முன்பணம் அனுப்ப கலப்பைகளேச்செய்து அனுப்ப ஏற்பாடுகள் நடத்துவார்.)

இந்த உபந்யாசம் திருவள்ளூர் டிவிஷன் விவ்சாயச் சங்கத்தில் ஜனவரி மாதத்தில் அச்சங்கத்து வைஸ் பிரசிடெண்டாக நியமிக்கப்பட்டிருக்கும் இப்பத்திராதிபரால் நடத்தப்பட்டது. செங்கல்பட்டு ஜில்லாவில் முதல் முதல் விவசாய விருத்திக்கு ஆதாரமான இரும்புக்கலப்பை வந்து டிபார்ட்மெண்டும் காலேஜும் ஏற்பட்டும், இக்கலப்பை பல்லாரியில் பிடிபட்டு ஆயிரக்கணக்காய் உபயோகத்திலிருப்பதாகவும், செங்கல்பட்டு மிராசுதார்கள் தூங்குவதினுல் அங்கு நிலேபெற்ற விவசாயக் காலேஜும் கோயமுத்தூருக்கு பெயர்க்கப்பட்டது. ஏழை நிலமுள்ள செங்கல்பட்டு ஜில்லா இன்னமும் தூங்கமுடியாது. விழித்து விருத்தியை அனுசரித்தால் தான் அவர்கள் உயிருடன் நிலேப்பார்கள்.

DEPARTMENTAL NOTES.
பகுதிக் குறிப்புகள்.

AGRICULTURE.
விவஸாயம்.

Eradicating weevils.

அந்துகளைத் தொலைத்தல்.- தானியங்களில் அந்து விழுந்து ரொம்பவும் சேதமாவதை விவஸாயிகள் அறிவார்கள். அவைகளைத் தொலைப்பதற்கு ஒரேவழி தான் உண்டு. அதாவது தானியங்களை நன்ருய்க்காயப்போட்டுவைப்பது. ஆனல் இப்படிக்காயப்போடுவது தானியம்ரொம்ப இருக்கும்பக்ஷத்தில் கொஞ்சம் கஷ்டந்தான்.

Is Salt Necessary for the Cocoanut?

தென்னைக்கு உப்பு அவசியமா?—சிலர் கடற்கரைகளில் விசேஷமாய் தென்னைசெழித்தோங்குவதினல் அதற்கு உப்புக்காற்று அவசியம் என்றும், அதன் வேர்கள் வழியாய் மரம் அவசியம் உப்பைக்கிரஹிக்க வேண்டுமென்றும் சொல்லுகிருர்கள். பிலிப்பைன் தீவிலுள்ளவர்கள் உப்பானது கெடுதல்செய்வதேயொழிய அதனல் தென்னைக்குக் குணம் ஒன்றும் காணேமென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாக எழுதுகிருர்கள். அநேகமரங்களின் வேர்களில் உப்புப்பட்டால் கெடுதி. தென்னைவேர் உப்பை ஸமாளித்துக் கொண்டாலும் அதனல் அதற்குயாதொரு குணமுமில்லை. தென்னை உள்நாட்டில் செழித்துவளர்வதால் உப்பாவது உப்பங்காற்ருவது வேருக்கு அவசியமென்பது பிசகென்று சொல்லுகிருர்கள்.

Chemical Branding of Cattle.

ரஸாயன முறையால் மாடுகளுக்கு சூடுபோடுதல். லங்கையில் மாடுகளுக்கு ரஸாயன முறைப்படி சூடுபோட்டு பரீக்ஷைபார்த்ததில் அது திறமானவழி யென்று ஏற்பட்டிருக்கிறதாம். இப்படிச்செய்த பிறகு உள்ள அடையாளங்கள் அழிவதில்லையாம். மாடுகளுக்கு ஒருவித தொந்தரவுமில்லையாம். புண்ணும் வெகு சீக்கிரத்தில் ஆறிவிடுகிறதாம். இப்படிக்கெல்லாம் பரீக்ஷைசெய்து பார்த்தவர் டாக்டர் ஸ்டர்ஜஸ் என்பவர். இவர் தன்னுடைய முறையைப்பற்றி லங்கை கவர்ன்மெண்டாருக்கு எழுதினர். அந்த கவர்ன்மெண்டார் லங்கைதீவு முழுக்க அந்த மாதிரிசெய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிருர்கள். இந்தமுறையை நம்முடைய விவஸாய இலாகா உத்தியோகஸ்தர்களும் கவனித்து இங்கேயும் அதை பரவச்செய்யலாமா வென்று ஆருய்ந்து பார்க்கவேண்டும்.

Sugar Cane.

கரும்பு.—ஒரு ஏகராவில் உற்பத்தியாகும் கரும்பிலிருந்து எடுக்கக்கூடிய சர்க்கரை நான்கு விஷயங்களைப் பொருத்திருக்கிறது.

1. கரும்பின் எடை.
2. கரும்பிலுள்ள ரஸத்தின் அளவு.
3. ரஸத்திலுள்ள சர்க்கரையின் அளவு.
4. ரஸம் அழுக்கில்லாமல் சுத்தமாயிருத்தல்.

காலநிலைமை, சீதோஷ்ணம், மண்வாகு, இவைகளால் கரும்பின் மேன்மை வேறுபட்டாலும், மேற்சொன்ன நாலு விஷயங்களை கீழ்க்கண்டவைகளால் ஒருவாறு விருத்தியாக்கக்கூடும்.

1. கரும்பின் ஜாதி.
2. செய்நேர்த்தியின் மாதிரி.
3. எருவின் குணம்.
4. அறுக்கும் ஸமயம், அதாவது, சில ஸமயத்தில் ரஸத்தில் அதிக இனிப்பும் குறைந்த அழுக்கும் உள்ள தருணம்.

Testing Dairy Cows.

கறவைமாடுகளைப் பரிசோதித்தல்.—அநேகம் பேர்கள் கறவைமாடுகளை வாங்குவதற்கு முன் அவைகளைக் கறந்து எவ்வளவு பாலாகிறதென்று பார்த்து வாங்குவது வழக்கம். இப்படி பார்த்து வாங்கியுங்கூட மாடுகள், வாங்கினவன் வீட்டுக்கு வந்தவுடன் முன்போல் ஸரியாகக் கறப்பதில்லை. இதற்குக்காரணம் என்னவென்ருல், சிலமாடுகளை அவைகளுடைய வழக்கமான இடத்திலிருந்து வேறு இடத்திற்கு ஒட்டிக்கொண்டுபோய்க் கறந்தால், அவைகள் நிலப்பெயர்ப்பால் பீதிகொண்டு ஸரியாகக் கறப்பதில்லை. இந்தக்காரணத்தைக்கொண்டே இப்போது ஆஸ்திரேலியா கண்டத்தின் சில இடங்களில் மாட்டுச்சந்தைகள் கூட்டி நல்ல மாடுகளுக்கு பரிசளிக்கும்போது கறவைமாடுகளை சந்தையில் கொண்டுவந்து கறக்காமல் சந்தைக்கு சிலநாள் முன்னமே அவையவைகள் கட்டியிருக்கும் இடங்களுக்கே இன்ஸ்பெக்டர்கள் போய்க் கறந்துபார்த்து அப்படி ஏற்படும் கறவைப்படி பரிசுகள் கொடுக்க ஆரம்பித்திருக்கிருர்கள்.

American Cotton Growers.

அமெரிக்காவில் பருத்திப்பயிர் செய்கிறவர்கள். அமெரிக்கா கண்டத்தின் தென்னாடுகளில் பருத்தி பயிர் செய்கிறவர்கள் தங்கள் மாசூலை நல்லவிலைக்கு விற்பதற்கு அதைக்கட்டிப்போட தகுந்த உபாயம் செய்ய வேண்டுமென்று ரொம்பநாளாக யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஸமீபத்தில் அங்கிருந்து வந்த செய்தியைப்பார்த்தால் மேற்சொன்ன யோஜனை கை கூடும்போல் தொன்றுகிறது. பருத்தி விலை ஸுமார் ராத்தல் ஒன்றுக்கு பதின்மூன்று ஸெண்டு அதாவது ½அணாவுக்குக் குறையும்பக்ஷத்தில் விற்காமல் கட்டிப் போட்டு விடலாமென்றும், அதற்காக சில பாங்கிக் கார்கள் ஒன்றுசேர்ந்து பண ஒத்தாசை செய்யத் தயாரா யிருக்கிறார்களென்றும், தெரியவருகிறது. பருத்தியை இப்படிக் குறைந்தவிலைக்கு விற்காமலிருப் பதற்கு முடியுமானால் பருத்தியில் நல்ல லாபம்கிடைக் கும். அதினால் அதை எங்கும் அதிகமாக ஸாகுபடி செய்வார்கள். அமெரிக்காவில் பருத்தி நல்ல விலைக்கு விற்குமானால் இந்தியாவிலும் நல்ல விலைக்கு விற்கு மென்று சொல்லவும் வேண்டுமோ?

Dairying in Northern India.

வட இந்தியாவில் பால்தயிர் வியாபாரம்.—நம் தேசத்து வடபாகங்களில் மாடுகள் நன்றாய்க் கறக் கும். குஜராத்திப் பசுமாடுகள் கறப்பதைப்பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. மத்திய இந்தியாவிலும் வட இந்தியாவிலும் எருமை மாடுகள் யானைகள் போ லிருக்கும். நெய், பால், தயிர் விற்று ஜீவிப்பவர்கள் இந்த எருமைகளைக்கொண்டே ஜீவிப்பார்கள். ஒரு எருமைமாடு ஸாமானியமாய் தினத்துக்கு 8 சேர் பால் கொடுக்கு மென்றும், அது 10 மாசம் கறக்குமாகை யால் பால் வர வரக் குறைந்துபோனாலும், இந்தப் பத்து மாசத்திற்கும் நெய் மட்டும் நூறு ரூபாய்க்குக் கிடைக்குமென்றும், சொல்லுகிறார்கள். தயிர் விற்றுப் பெறக் கூடியதும் கன்றின் விலையும் இருக்கின்றன. கிடாரிக் கன்றானால் மூன்று வயதானதும் 40-ரூபாய் பெறும். கிடாக் கன்றானால் 20 ரூபாய் பெறும். இது வருஷம் ஸராஸரி 15 ரூபாயாக வைத்துக் கொண்டா லும், இதையும், தயிர் தினத்துக்கு அரை அணாவாக வைத்துக் கொண்டு அதனால் கிடைக்கும் 9 ரூபா யையும், எருமுட்டை வருஷத்துக்கு ஒருரூபாயாக வைத்துக் கொண்டு அதையும், நெய்விலையையும் சேர்த்தால் வருஷத்துக்கு 125 ரூபாய் கிடைக்கும். மாட்டுக்குப் பிடிக்கும் செலவைக் கழித்து லாபம் 80 ரூபாயென வைத்துக் கொள்ளலாம்.

Honorary Visitors.

கௌரவ விஸிடர்கள்.—கோயம்புத்தூர் விவ ஸாய காலேஜுக்கும் ஆராய்ச்சிசாலைக்கும் ஆனரரி விஸிடர்களாய் நியமிக்கப்பட்டிருந்த கனவான்களின் வேலைக் காலாவதி முடிந்துவிட்டது. அதனால் அடி யில் வரும் கனவான்களை ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னரவர்கள் நியமித்திருக்கிறார்.

(1) தஞ்சாவூர் ராவ்ஸாகிப்பு ஏப்ரஹாம் பண்டி தர், (2) அனந்தப்பூர் ஜில்லா ஹிந்துப்பூர் தாலூகா கொண்டபுரம் ஆதிநாராயண ரெட்டியார், (3) தஞ்சாவூர் ஜில்லா உக்கடைத்தேவர், (4) சின்னப்ப நாயக்கன் பாளையம் மிட்டாதார், (5) செங்கற்பட்டு ஜில்லா சூனம்பேட்டை ஜமீன்தார், (6) குளித்தலை பி. டி. ரெங்கஸாமி ஐயங்கார், (7) சிங்கம்பட்டி ஜமீன் தார், (8) ஆனரெபில் ராவ்பகதூர் என். சுப்பாராவ், (9) ஊத்துக்குழி பாளையகாரர் முதலிய 25 பேர்கள்.

ஒவ்வொருவரும் போய்ப் பார்வை செய்யும்காலம் 3 வருஷமாகும். இவ்விஸிடர்களுக்கு உபயோகமான சட்ட நிபந்தனைகள் பின்வருமாறு.

(1) இந்த விஸிடர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைக ளும், கவர்ன்மெண்டு விடுமுறைநாள்களும் ஒழிய மற்ற நாள்கள் பரிசோதனைக்கு ஏற்றநாள்களாகும்.

(2) பார்வையிடப்போகும் ஒவ்வொரு விஸிடரும் அக்காலேஜ் ப்ரின்ஸிபாலுக்கு 24-மணி முன்னமே தெரிவிக்கவேண்டும். இன்னமணிக்கு வருவதாகவும் குறிப்பிடவேண்டும்.

(3) இந்த நோட்டீஸ் வரப்பெற்ற பிறகு காலே ஜில் ஒரு ஆபீஸர் வந்த விஸிடருக்கு எல்லாவற்றை யும்காட்டவும் காலேஜ்பண்ணை ஸம்பந்தமாகக்கேட்ட கேள்விகளுக்கு விடையளிக்கவும் நியமிக்கப்படுவார்.

(4) விஸிடர்கள் ப்ரின்ஸிபாலின் ஆபீஸிலுள்ள விஸிடர்ஸ் புஸ்தகத்தில் தமக்குத் தோற்றிய குண தோஷங்களையும், நிர்வாக முறைகளையும் கண்டெழு தலாம். இந்த குணதோஷக் குறிப்புகளின் நகல்களை காலேஜ் ப்ரின்ஸிபல் விவஸாய டைரெக்டர்மூலமாய் ரெவின்யூ போர்டுக்கு 3 மாதத்திற் கொருமுறை அனுப்புவார்.

COMMERCE.

வியாபாரம்.

Business Enterprise.

வியாபார ஊக்கம்.—இந்தியாவில் போன டிசம்பர்மீ த்தில் அடியில் கண்ட விவரப்படி 13 கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. அந்த விவரங்களைக் கொண்டு அந்த மீ த்தில் வியாபாரத்தில் ஊக்கம் எவ்வளவிருந்த தென்பதை அறிந்து கொள்ளலாம்.

2. பாங்கிகளும், லேவாதேவி கம்பெனிகளும் ...	52,50,000
5. இன்ஷியூரென்ஸ் கம்பெனிகள் ...	1,70,000
5. வியாபாரக் கம்பெனிகள் ...	6,20,000
1. நூல் நூற்கும் நெசவு கம்பெனி ...	7,00,000
ஆகமொத்தம் ...	67,40,000

Improving Business.

வியாபாரத்தை விர்த்தி செய்தல்.—ஒவ்வொரு சில்லரை வியாபாரிக்கும் தன்னுடைய வியாபாரத்தை விருத்திசெய்ய வேண்டுமென்ற ஆசை இயற்கையாகவே உளது. அவன் தன்னுடைய சரக்குகளை விற்பதற்கு புதிய புதிய யுக்திகள் தேடிக்கொண்டிருப்பான். ஆனால் எந்தத் தொழிலும் கொஞ்ச காலமானவுடன் புதுமையை இழந்து பழைய 'கர்நாடகம்' ஆய் விடுகிறது.

நாற்காலிமேல் படுத்துக் கொண்டபடியே சரக்குகளை வாங்கிவிடலாம். மேஜைமேல் உட்கார்ந்து கொண்டே கணக்கை யெழுதிவிடலாம். ஆனால் விற்கிற தொழில் கஷ்டமானது. இதனால் சரக்குகளை நல்லவைகளாகவும் மலிவாகவும் பார்த்து வாங்குவது அவசிய மில்லையென்று தாத்பரியமல்ல. சரக்குகள் நல்லவைகளாகயிருக்க வேண்டியது அவசியமேயானாலும் நல்ல சரக்குகளை ரொப்பி வைத்திருப்பதனால் மாத்திரம் வியாபாரம் ஆகிவிடாது. ஜனங்கள் இதை அறியும்படி செய்யும் சாமர்த்தியமும் வேண்டும். ஒரு பாக்கு வியாபாரி ஒரு ராஜாவுக்கு தான் பாக்கு கொடுப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டு அதை விளம்பரப்படுத்தினான். ஜாஸ்தி லாபமில்லாவிடினும் அந்த ஏற்பாடு செய்துகொண்டதனால் அவன் வியாபாரம் எவ்வளவு விருத்தி யடைந்ததென்று சற்று கவனிப்போம். அநேக ஜனங்கள் அவனிடத்திலேயே பாக்கு வாங்க ஆரம்பித்தார்கள். சாதாரண ஜனங்கள் ராஜாக்கள் சாப்பிடுகிற பாக்கை தாங்களும் உபயோகிக்கிறோமென்ற எண்ணத்துடன் விலை கொஞ்சம் ஜாஸ்தி கொடுக்க ஆக்ஷேபிக்கவில்லை. சரக்கினுடைய நோட்டமறிந்துவாங்குபவர்கள் நூற்றில் ஒருவர்தான். மற்றெல்லாரும் ஸாமான்கள் ஜோடித்திருக்கிற மாதிரியையும் கடைக்காரனுடைய பேச்சையும் பார்த்து வாங்கப்பட்டவர்கள். தன்னுடைய எதிராளிகள் மிகவும் கெட்டிக்காரர்களென்றும் அல்லது தன்னுடைய முதல் போதாதென்றும் ஒரு வியாபாரி பயப்படக்கூடாது. நீண்ட வியாபாரத்தினால் சம்பாதிக்கும் நல்ல பெயர் முதலுக்கு ஸமானம். பிரதிதினமும் அந்த பேர் கெடாதபடி பாதுகாத்து வரவேண்டும். சில வியாபாரிகள் பேர் உண்டானவுடனே தங்களுடைய பிரயத்தனங்களைக் குறைத்துவிடுகிறார்கள். பேர் உண்டாகிவிட்டது,இனி வியாபாரம் தானாகவே நடக்கும், என்று அவர்கள் நினைக்கிறார்கள். அது ஸரியல்ல. ஏனெனில் திருப்திசெய்யும் பிரயத்தனங்களைவியாபாரிகள் குறைத்தவுடனே ஜனங்கள் அதை அறிந்து தாங்களும் வியாபாரத்தை நிறுத்திவிடுகிறார்கள். தற்கால நிலைமை எப்படி யிருக்கிறதென்றால் ஸகல விஷயங்களிலும் நாளுக்கு நாள் மாறுபாடுகள் ஏற்பட்டுக் கொண்டே யிருக்கின்றன. ஜனங்களுடைய அபிப்பிராயங்களும் தினந்தோறும் மாறிக்கொண்டே வருகின்றன. ஆகையால் பழைய ரீதியாகவே வியாபாரத்தை நடத்திக்கொண்டு வருபவனுக்கு வியாபாரம் குறையும்.புதிது புதிதாக யுக்திசெய்பவனுக்குத் தான் இதுகாலம். ஸ்தலங்கள் மாறிக்கொண்டே யிருக்கின்றன. இன்றைதினம் ஜனத்தொகை நிறைந்த இடமாயிருக்கிறது, கொஞ்சகாலமானவுடன் ஜனங்களில்லாத சிறிய கிராமமாகிவிடுகிறது. இப்பொழுது ஜனங்களில்லாத இடம் கொஞ்சகால மானவுடன் ஜனங்கள் நிறைந்த பெரிய வியாபாரஸ்தலமாகி விடுகிறது. ஆகையால் புத்தி கூர்மையும் சுரு சுருப்பும் உள்ள வியாபாரிகள் புதிது புதிதாக வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தக்கூடும். பெரும்படியாக வியாபாரம் செய்ய போதுமான முதல் இல்லையென்று ஒரு வியாபாரி வருத்தப்பட வேண்டுவதில்லை. தன்னுடைய சாமர்த்தியத்தாலும் பயிரங்கப்படுத்தும் முறைகளாலும் தான் இருக்குமிடத்தை மற்றவர்கள் தேடிக்கொண்டு வரும்படியாய் செய்யலாம். எவ்வளவு முதல் இருந்தபோதிலும் நல்ல பெயருக்கு ஈடாகாது. நல்லபேர் இருந்தால் கடன் சுலபமாய் கிடைக்கும்.

INDUSTRY.

கைத்தொழில்.

A Permanent Exhibition in Calcutta.

கல்கத்தாவில் நிரந்தரமான ஒரு பொருட்காட்சி. இங்கிலாந்தில் ஒரு வர்த்தக சங்கத்தார், கல்கத்தாவில் ஒரு பொருட்காட்சி சாலையை ஸ்தாபித்து, எப்பொழுதும் இருக்கும்படி நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கிலீஷ் ஸாமான்கள் மாத்திரம் இந்த சாலையில் காண்பிக்கப்படும். இங்கிலீஷ் ஸாமான்களுக்கு, இந்தியாவில் இப்பொழுது ரொம்ப கிராக்கி ஏற்பட்டிருக்கிறதாம். அதற்கு இந்த மாதிரி ஒரு காட்சிசாலை இருந்தால் ரொம்ப ஸௌகரிய முண்டென்று அதை அவர்கள் ஏற்படுத்தப்போகிறார்கள்.

Toy Making.

விளையாட்டு ஸாமான்கள் செய்தல்.—இந்தத் தொழில் ஜெர்மனி தேசத்தில் விசேஷம். இதைச் செய்வதால் சாஸ்திரஞானம் அபிவிர்த்தியாகும். இன்னும் சொல்லப்போனால் சிறு பையன்களுக்கு விளையாட்டு ஸாமான்கள் செய்வதை சொல்லிக்கொடுத்தே சாஸ்திரங்களை போதிக்கவேண்டும். இதை நம்முடைய தேசத்து ஸ்கூல் அதிகாரிகள் கவனிப்பார்கள் என்று நம்புகிறோம்.

Small Industries.

சிறு கைத்தொழில்கள்.—கொஞ்ச காலமா இதர தேசங்களிலிருந்து வரும் சரக்குகளுக்கு எதிரில் நிற்க முடியாமல் நமது தேசத்து கைத்தொழில்கள் ஒன்றொன்றாய் நசித்துப்போய் அவைகளை ஒட்டிய தொழிலாளிகளுக்குப் பிழைப்பில்லாமல் அவர்கள் விவஸாயத்திலிறங்கி வருகிறார்கள். இதர தேசங்களில் விவஸாயத்தைவிட கைத்தொழில்கள் ஓங்கி வளர, இந்தியாவில் மட்டும் கைத்தொழில்கள் நசித்துப்போவது தேச க்ஷேமத்துக்கு விரோதமென்று படித்தவர்கள் நினைக்கிறார்கள் ஆகவே, தேசத்தின் க்ஷேமத்தை உத்தேசித்து ஸ்வதேசி உணர்ச்சியை ஒத்தாசையாகக்கொண்டு பல பேர்கள் பல நூதன கைத்தொழில்களை ஏற்படுத்திச் செய்து பார்த்ததில், அவைகள் அநேகமாய்ப் பயன்படாமலே போய்விட்டன. இருந்தபோதிலும் கொஞ்ச காலமாக விலை விகிதங்கள் உயர்ந்திருப்பதாலும், வேலையாட்களுக்குக் கூலி ஜாஸ்தியாகி விட்டதாலும் தொழில் நடத்தும் முதலாளிகளுக்கு லாபம் குறைந்துபோய், அவர்கள் ஏற்கனவே நடத்திவந்த தொழில்களில் யந்திரங்களை விசேஷமாய் உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்தியா முழுவதையும் ஆராய்ச்சி செய்யும் போது பஞ்சாப் நீங்கலாக மற்ற மாகாணங்களுக்குள் நம்முடைய சென்னை ராஜதானியிலே தான் ஆள்களைத் தள்ளிவிட்டு யந்திரங்களை விசேஷமாக உபயோகிப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் ஒரு விஷயம் நன்றாக ஏற்படுகிறது. அதாவது இந்தியர்கள் சிறு அளவில் மட்டும் கைத்தொழில்கள் செய்ய லாயக்கானவர்களென்பதுதான்.

Jail Manufactures.

ஜெயிலில் செய்யப்படும் ஸாமான்கள்.—ஜெயில்களில் குற்றவாளிகளுக்கு வேலைகொடுப்பதற்காக துணிகள், சமுக்காளங்கள், கம்பளிகள், முதலியவைகள் நெய்தல் போன்ற பலவித தொழில்கள் நடந்து வருவது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. இப்படி ஸர்க்காரில் தொழில்களை நடத்துவதால் வியாபாரிகளுக்கு நஷ்டமுண்டாகிறதென்று ஐரோப்பியவர்த்தக சங்கத்தார்கள் பலதடவை முறையிட்டிருக்கிறார்கள். இந்தவிஷயமாக வருகிற ஜூன்மாஸம் லண்டன் நகரத்தில் கூடப்போகும் வர்த்தக சங்கங்களின் எட்டாவது காங்கிரஸில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்போகிறார்களாம். அது என்னவென்றால், கவர்ன்மெண்டார் தண்டனையென்று செல்லும்படியான வேலையை மட்டும் செய்யச்சொல்லவேணுமே யொழிய யந்திர ஸகாயத்தால் செய்யக்கூடிய தொழில்களை ஜெயில்களில் செய்யக்கூடாதென்று தீர்மானிக்கப்போகிறார்களாம். நிற்க, வடக்கே பஞ்சாப் வர்த்தக சங்கத்தார் இந்த விஷயமாக ஸமீபத்தில் ஒரு தீர்மானம் செய்தார்கள். பொதுவாய் வர்த்தகர்களுக்குப் போட்டியாக கவர்ன்மெண்டார் தொழில்களைச்செய்யக்கூடாதென்பதை அங்கீகரிப்பதாயும், குற்றவாளிகளை வேலை வாங்குவதற்காக ஸாமான்களைச் செய்யச்சொல்வது ஸௌகரியமாயும் செட்டாயுமிருந்து, அதனால் குற்றவாளிகளின் புத்தி திருந்தி, அவர்கள் நல்நடத்தையுடையவர்களாக ஏற்பட ஹேதுவாகும்பக்ஷத்தில் கவர்ன்மெண்டார் தொழில்களை செய்விப்பது நியாயந்தானென்றும் பொதுநன்மைக்கு ஒத்ததுதானென்றும் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள்.

ECONOMICS.

பொருளாதாரம்.

Export Duty on Rice.

அரிசியின்மேல் ஏற்றுமதி வரி.—பர்மாவிலிருந்து ஏற்றுமதியாகும் அரிசியின்மேல் 10 வருஷத்துக்கு ஒரு வரி போடுவதாக அந்த மாகாணத்து லெப்டினன்ட் கவர்னர் உத்தேசித்திருக்கிறார். இரண்டு அந்தர் நிறையுள்ள மூட்டையின்மேல் அது இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் நாலு அணாவும், வேறு தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் ஒரு அணாவீதமும், வரிபோடுவதாக உத்தேசம். இதர தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் மூட்டைகளின்மேல் ஏற்கனவே எட்டுஅணா வரி வசூல் செய்யப்படுகிறது. இதைப்பற்றி பர்மா வியாபாரிகளின் அபிப்பிராயத்தை லெப்டினன்ட் கவர்னர் கேட்டிருக்கிறார்.

The Economic Position in Bombay.

பம்பாயின் பொருளாதார நிலைமை.—பம்பாய் ராஜதானியில் நல்ல நிலங்களிலெல்லாம் விவசாயிகள் உணவுக்கு உபயோகப்படும்படியான பயிர்களையொழித்து வியாபாரத்திற்கு உபயோகப்படும்படியான பயிர்களை செய்துவருகிறார்களாம். இதனால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் வருமென்பதற்கு ஸந்தேகமில்லை. இதனால் அகவிலைகள் ஏறத்தான் செய்யும். இதற்கு கூலி வீதமும் அதிகமானாலொழிய கூலிக்காரர்கள் கஷ்டப்படுவார்கள். ஆனால் பம்பாயில் கூலி வீதங்கள் அதிகமாகிக்கொண்டு வருகிறதாகவே தெரியவருகிறது. தேசத்தில் கைத்தொழில் அபிவிருத்தி ஆக ஆக கூலி வீதங்கள் உயர்ந்துகொண்டே வரும்.

The Situation in India.

இந்தியாவின் நிலைமை.—போன நவம்பர்மீ 25உயன்று இங்கிலாந்தில் பிரசுரமாகும் மான்செஸ்டர் கார்டியன் என்னும் பத்திரிகையின் பிரதிநிதியொருவர் இந்தியாவின் வைஸ்ராயின் நிர்வாக ஸபையில் மெம்பராக இருந்த எஸ். பி. ஸின்ஹா என்பவரைப் போய்ப்பார்த்து சுதேசி முதலிய தற்கால விஷயங்களைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டார். அதற்கு ஸின்ஹா பதில் சொன்னதாவது:—

இந்தியாவில் பொதுவாக படித்தவர்களெல்லாரும் இதர தேசங்களிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகளின்மேல் காப்பு வரிகள் போட்டாலொழிய நம்தேசத்துக்கைத்தொழில்கள் அவைகளோடு போட்டிபோட முடியாதென்றும், அப்படி இறக்குமதியாகும் சரக்குகள் இங்கிலாந்திலிருந்தே விசேஷமாக வருவதால் அவைகளின்மேல் காப்பு வரிபோடுவது சீக்கிரத்தில் நிறைவேறக்கூடிய யோஜனையல்லவென்றும், இந்தக் கஷ்டந்தான் தற்கால அமைதியின்மைக்கு முக்கிய காரணம் என்றும் சொன்னார். இந்த அமைதியின்மையைப் போக்கடிக்க என்ன செய்யலாமென்று கேட்டதற்கு, எல்லாரையும் பணக்காரர்களாகச் செய்யவேண்டுமென்றும், அதற்காக விவஸாயத்தையும் கைத்தொழில்களையும் அபிவிர்த்தி செய்யவேண்டுமென்றும், இன்னம் வெகுகாலத்திற்கு இந்தியர்கள் விவஸாயத்தின் மூலமாகவே பணம் ஸம்பாதிக்க வேண்டியவர்களாகையால் சாஸ்திர முறைகளை அனுசரித்து விவஸாயத்தைச் செய்யவேண்டுமென்றும், சொன்னார்.

இந்தியர்களில் வெகுபேர்கள் ஏழைகளாக இருக்கிறார்களே! இந்தியாவிலிருந்து இங்கிலீஷ்காரர்கள் ஐசுவரியத்தை எல்லாம் வடிக்கட்டிக்கொண்டு போவதாகச் சொல்லுகிறார்களே, இந்த விஷயங்களைப்பற்றி அவருடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டதற்கு ஸின்ஹா என்னபதில் சொன்னாரென்றால், இங்கிலீஷ்காரர்கள் இந்தியாவிலிருந்து ஐசுவரியத்தை வடிக்கட்டிக்கொண்டு போவதால் இந்தியர்கள் ஏழைகளாயிருக்கிறார்களென்று சொல்வது தமக்கு ஸரியான முகாந்திரமாய்த் தோன்றவில்லையென்றும், சாஸ்திர ஞானமில்லாமலும், குடி மூழ்கிப்போகும்படியான வட்டி கொடுத்து வாங்கும் முதலைத் தவிர, கையில் முதலில்லாமலும், விவஸாயத்தையே நம்பியிருக்கும் ஜனங்கள் எப்பொழுதும் ஏழைகளாய்த்தான் இருக்கவேண்டுமென்றும், இவைகளுக்கெல்லாம் பரிஹாரம் என்னவென்றால், மூலாதாரப் படிப்பு, ஐக்கிய நாணயச் சங்கங்களின் அபிவிர்த்தி, இவைகள்தான் என்றும், ஸின்ஹா பதில் சொன்னார். மேற்சொன்ன பரிஹாரங்கள் ஏற்படும் பக்ஷத்தில் இந்தியர்களின் தரித்திரம் ஓடிப்போகுமாவென்று கேட்க, அதற்கு பதில் சொல்வது சுலபமானதல்லவென்றும், நாம் பணக்காரர்களாவதற்கு கைத்தொழில்கள் ஏற்படவேண்டியதென்றும், கைத்தொழில்கள் ஏற்படுவதற்கு அந்நிய தேசங்களிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகளின்மேல் காப்பு வரி போடவேண்டியதென்றும் சொன்னார்.

CO-OPERATION.

கோவாபரேஷன்.

Co-operative Societies and Limited Companies.

கோவாபரேட்டிவ் ஸொஸைட்டிகளும், லிமிடெட் கம்பெனிகளும்.—இவைகளுக்குள்ள வித்தியாஸங்களைப் பற்றி ஒருவர் பின்வருமாறு சொல்லுகிறார். "எனக்கு ஐக்கியச் சங்கங்களின் மெம்பர்களைக் கண்டால் பிடிப்பதில்லை. ஏனென்றால் அவர்களில் பெரும்பான்மையோர் பேராசைக்காரர்கள். லிமிடெட் கம்பெனிகளின் மெம்பர்களைக் கண்டாலும் பிடிப்பதில்லை. ஏனென்றால் அவர்களும் பேராசைக்காரர்களே. இன்னும் சொல்லப்போனால் லிமிடெட் கம்பெனி மெம்பர்கள் அனுவசியமாக பேராசைக்காரர்களா யிருக்கிறார்கள். ஐக்கியச் சங்கத்தார்கள்பேராசைக்காரர்களென்றாலும் அவர்களுக்கு வரும்படி சொல்பம். அவர்கள் சொற்ப வரும்படியைக்கொண்டு கொஞ்சம் அதிகமாக ஸுகம்ஸம்பாதிக்க முயல்கிறார்கள். லிமிடெட் கம்பெனியின்மெம்பர்களோ வென்றால் அதிகமோ, ஸ்வல்பமோ, பொதுவாக முதல் உள்ளவர்கள். அவர்களுக்கு ஜீவனம் செய்வதற்கு வேறு வரும்படிகளுண்டு. முதல்போட்டதற்காக பிறத்தியார் நெற்றிவியர்வை நிலத்தில்விழ ஸம்பாதிக்கும் சொத்தில் பாகத்துக்கு வருகிறவர்கள். ஆகையால், லிமிடெட் கம்பெனி மெம்பர்களைவிட ஐக்கியச் சங்கங்களின் மெம்பர்கள் நியாயஸ்தர்களென்று சொல்லவேண்டும்."

Ramnad Co-operative Conference.

ராமநாதபுரம் ஐக்கிய நாணயக் கான்பரென்ஸ். ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸமீபத்தில் துலுக்கப்பட்டி ரயில் ஸ்டேஷனுக்கு அடுத்த வடமலைபுரத்தில் கூடின. அந்த ஊர் ஐக்கிய நாணயச்சங்கத்தின் ப்ரஸிடெண்ட் மிஸ்டர் ஆனந்தராவ் வந்திருந்த டெலிகேட்டுகளை வரவேற்றார். மதுரை ராவ்பகதூர் ஜி. ஸ்ரீநிவாசராவ் ப்ரஸிடென்டாயிருந்து ஒரு ப்ரஸங்கம் செய்தார். இந்தப் ப்ரஸங்கத்தில், நம் தேசத்தில் பூர்வம் கிராமாந்தரங்களில் பஞ்சாயத்துகளிருந்து, கிராமத்துக்கு வேண்டிய ஸகல விஷயங்களையும் கிராமப் பொது ஐவேஜிலிருந்து கிராமத்தாரின் கூட்டுறவைப்பெற்று நடத்திக்கொண்டுபோக, இக்காலத்தில் நாகரிகமும் படிப்பும் ஜாஸ்தியாயிருந்தாலும், வில்லேஜ் பஞ்சாயத்துகளும் கிராமத்தாரின் கூட்டுறவும் போய்விட்டனவென்றார். ஆயினும் இப்போது மறுபடியும் கிராமத்தாருக்குள் ஐக்கியம் உண்டாய் வருகிறதென்றும், கவர்ன்மெண்ட் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபித்து வருவதில் இந்த ராஜதானியில் தேசபாஷை அறிந்த இந்திய உத்தியோகஸ்தரை ரெஜிஸ்ட்ராய் நியமிப்பதால் நன்மையுண்டாகி வருகிறதென்றும், ராமநாதபுரம் ஜில்லாவில் இரண்டு வருஷத்துக்குள் 37 ஸொஸைடிகள் ஸ்தாபிக்கப்பட்டுப்போயின வென்றும், இவைகளில் 34 ஸொஸைடிகள் இந்தக் கான்பரென்ஸுக்கு ப்ரதிநிதிகள் அனுப்பியிருக்கின்றன வென்றும், ஐக்கிய நாணயச்சங்கங்களால் கிராமத்தாருக்குக்கிடைக்காத நன்மை இல்லையென்றும், அவர்கள் ஒன்று சேர்ந்து ஐவேஜுண்டுபண்ணி நாணயத்தின் பேரில் கடன்கொடுத்துக் கடன்வாங்குவதால் விவஸாயத்தை அபிவிர்த்தி செய்வதோடுகூட கைத்தொழில்களையும் அபிவிர்த்தி செய்யக்கூடு மென்றும், பொருள்களைச் செய்வதும் விற்பதும் வாங்குவதும் ஸாத்தியமென்றும், சொன்னார்.

பிறகு, மதுரை ராமஸாமிசாஸ்திரிகள் பெடரல் பாங்கிகளின் உபயோகத்தைப்பற்றிப் பேசினார். பெடரல்பாங்கிகள் இப்போது நடத்தப்படுவதைப் போல் லாபத்தைப்பற்றி மட்டும் நடத்தப்படாமல் ஐக்கிய நாணயச் சங்கங்களின் ப்ரதிநிதிகள் அடங்கியனவாய் அந்தப்பிரதிநிதிகளுக்கு அதன் நடவடிக்கைகளில் வோட்டு கொடுத்து அதன் லாபத்திலும் அந்தச் சங்கங்கள் பங்குபெறும்படி நடத்தப்படவேண்டுமென்றார். பிறகு திவான்பகதூர் எல் டி. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை பேசினதில், ஒரு தொடர்ச்சியான பிரதேசத்திலுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்கள் சேர்ந்து ஒரு பெடரல் பாங்கி ஸ்தாபித்துக்கொண்டு அந்த பாங்கைச் சேர்ந்தவர்கள் இன்ஸ்பெக்டர்களாகவும் ஆடிட்டர்களாகவும் இருந்து, கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களை விலக்கிவிட வேண்டுமென்று சொன்னார். கோவில்பட்டி கவர்ன்மெண்ட் பண்ணை மானேஜர் மிஸ்டர் சங்கரய்யர், ராமநாதபுரம் ஜில்லாவில் பருத்தி ஸாகுபடி லாபந்தருமென்றும், வீடெட் டிஸ்ட்ரிக்ட்களிலிருந்து கருவிகள் தருவித்து உபயோகப் படுத்தப்படவேண்டு மென்றும், நல்ல எருப்போட்டு விதைப்பதற்கும் களை பிடுங்குவதற்கும் நல்ல உபாயங்களை அனுஷ்டிக்கவேண்டுமென்றும் சொன்னார். இதே அபிப்பிராயத்தை டிப்டி கலெக்டர் மிஸ்டர் விஜயராகவாசாரியாரும் சொன்னார்.

BANKING.

பாங்கி வியாபாரம்.

Bank Profits in Great Britain.

க்ரேட்ப்ரிட்டனிலுள்ள பாங்கிகளின் லாபம்.—ஸாதாரணமாக, இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காத்லாந்து, அயர்லாந்து, ஆகிய இவைகள் அடங்கிய க்ரேட்ப்ரிட்டனிலுள்ள ஜாயிண்டு ஸ்டாக்பாங்கிகளுக்கு வருஷா வருஷம் வரும்லாபம் 15¾கோடிமுதல் 16½கோடி ரூ. வரையில் ஆகிறது. இதை போட்ட முதலின் மேல் ஈவித்தால் வருஷம் 1-க்கு 100க்கு 15 வட்டி ஆகிறது. செலுத்தின முதலையும் ரிஸர்வ் பண்டையும் சேர்த்துப் பார்த்தால் 100 க்கு 9 வீதம் ஆகிறது.

A New Bank in Behar.

பீஹாரில் புது பாங்கி.—தர்பங்கா மஹாராஜா பீஹாரில் தர்பங்கா பாங்கென்ற பெயருடன் ஒரு பாங்கி ஸ்தாபித்திருக்கிருரென்று தெரிகிறது. அந்த பாங்கிகுக்குச் சேர்மன் தர்பங்கா மஹாராஜாவே. பங்கொன்றுக்கு ரூபாய் 50 விகிதம் 20,000 பங்குகளாகப் பிரித்த 10 லக்ஷ ரூபாய் மூலதனத்தை இது உடையதாயிருக்கும். 20,000 பங்குகளை ஜனங்கள் ஏற்கெனவே எடுத்துக்கொண்டு தொகை செலுத்தி விட்டார்களென்றும், இன்னும் 2000 பங்குகளை டைரெக்டர்கள் இஷ்யு செய்யப்போகிருர்களென்றும் சொல்லப்படுகிறது.

Bank Profits.

பாங்கிகளின் லாபம்.—சில பாங்கிகளில் வருஷா வருஷம் கணக்குக் கூட்டிப்பார்க்கும்பொழுது வந்த லாபத்தை போட்டமுதலின்மேல் ஈவித்து 100-க்கு இவ்வளவு லாபமென்று சொல்லுகிருர்கள். பாங்கிகளுக்கு ரிஸர்வ் பண்டு இருக்கும்பக்ஷத்தில் மேற்சொன்ன மாதிரி லாபக்கணக்குப் போடுவது ஸரியல்ல. ரிஸர்வ் பண்டையும் வியாபாரத்தில் போட்டு புரட்டித்தானே பாங்கிகள் லாபம் ஸம்பாதிக்கின்றன. அந்த ரிஸர்வ் பண்டுகளும் ஷேர் ஹோல்டர்களுடைய பணமே. ஆகையால் வருஷாவருஷம் லாபக் கணக்குப்பார்க்கும்பொழுது முதலோடு ரிஸர்வ்பண்டையும் சேர்த்து வந்த மொத்தத்தின்மேல் லாபத்தை ஈவித்துப் பார்க்கவேண்டும். இப்படிச் செய்யாமல் முதலின்மேல் மட்டும் ஈவித்துப்பார்த்தால் லாபம் அதிகமாகக் கிடைத்தாகத் தோன்றும்.

Interest on Deposits.

டிபாஸிட்டுகளுக்கு வட்டி.—போன மாஸத்து ஸஞ்சிகையில் 31-வது பக்கத்தில் பாங்கிகள்லாபம் ஸம்பாதிப்பது டிபாஸிட்டர்களுக்குக் கொடுக்கும் வட்டியைப் பொருத்ததென்று சொன்னோம். இதற்கு திருஷ்டாந்தமாக பம்பாயில் வியாபாரம் செய்துவரும் பாங்கி ஆப் இந்தியாவை எடுத்துக்கொள்வோம். இந்த பாங்கியின் ஷேர் ஹோல்டர்களுடைய வருஷாந்திர மீட்டிங் ஸமீபத்தில் நடந்தது. அப்பொழுது அதன் அக்ராஸனாதிபதியாயிருந்த ஸர். கவாஸ்ஜிஜி ஹாங்கீர் என்பவர் பின்வருமாறு பேசினர். "வருஷத்தின், முன் ஆறுமாஸத்தில் வந்தலாபம் 2,51,809 ரூ. பின் ஆறு மாஸத்தில் வந்தலாபமோ 66,152 ரூ. பின் ஆறுமாஸத்தில் லாபம் குறைந்ததற்கு முக்கிய காரணம் கரெண்ட் டிபாஸிட்டு அதாவது கேட்டவுடனே திருப்பிக்கொடுக்க வேண்டிய டிபாஸிட்டுகளுக்கு வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 2½ வீதம் வட்டிகொடுப்பதே. இப்படிக்கு பின் ஆறுமாஸத்தில் கொடுத்த வட்டியானது 1,90,000ரூ. இதோடு கூட பின் ஆறுமாஸத்தில் பணமும் எடுபடாமலிருந்தது"—என்ருர்.

ஸாதாரணமாக, கேட்டபொழுது திருப்பிக்கொடுக்கவேண்டிய டிபாஸிட்டுகளுக்கு தினம் பாங்கிக்காரர் கையில் எவ்வளவுதொகை நிற்கிறதோ அதற்கு வருஷம் ஒன்றுக்கு 100க்கு 2 வட்டி வீதந்தான் கட்டிக்கொடுப்பார்கள். இப்படிக் கல்லாமல் வட்டிகூட கொடுத்தால் பாங்கிகளுக்கு எவ்வளவுநஷ்ட முண்டாகு மென்பதை மேற்சொன்னபாங்கி ஆப் இந்தியா திருஷ்டாந்தத்தால் அறிந்து கொள்ளலாம். இந்த ஸந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தை இங்கே சொல்லவேண்டியிருக்கிறது. மேற்சொன்ன மாதிரி ½ வட்டி கூடக் கொடுத்ததால் லாபம் அடிபட்டுபோனதானது அந்த பாங்கியில் கேட்டபொழுது திருப்பிக்கொடுக்கவேண்டிய டிபாஸிட்டுகளே பெரும்பாகமாக இருந்தனவென்பதைக் காண்பிக்கிறது.

INSURANCE.
இன்ஷ்யூரென்ஸ்.

Insurance and Government Servants.

கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் இன்ஷ்யூரென்ஸூம்.—கீழ் வங்காளம், அஸ்ஸாம் என்ற நாடுகளுக்கு அபீஷியேடிங் சீப் செக்ரிடெரியான ஆனரபில் மிஸ்டர் என். பீட்ஸன் பெல் அடியில் வருமாறு அம்மாகாணங்களில் எல்லா கமிஷனர்களுக்கும், எல்லா இலாகா தலைமை உத்தியோகஸ்தர்களுக்கும், டிஸ்டிரிக்டு ஜட்ஜூகளுக்கும் சுற்றுக் கடிதம் அனுப்பியிருக்கிறார்:—

கவர்ன்மெண்டு உத்தியோகத்திலிருக்கிற எல்லா உத்தியோகஸ்தர்களும் மேல் உத்தியோகஸ்தர் முதல் கீழ் உத்தியோகஸ்தர் வரையில் சில இன்ஷியூரென்ஸ் "கம்பெனிகளின் கமிஷன் ஏஜெண்டுகளாகவும் ஸெக்ரிடரிகளாகவும் அமர்ந்து வேலைபார்த்து வருகிறார்கள். இவ்வாறு இவர்கள் கமிஷனுக்கு வேலை பார்த்து வருவதால் பல கெடுதிகள் உண்டாகின்றன. இந்த கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் தாக்ஷிணியத்திற்குக் கட்டுப்பட்ட கீழ் உத்தியோகஸ்தர்களும், ஜனங்களும், மேற்படி மேல் உத்தியோகஸ்தரால் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். இன்ஷியூரென்ஸ் கம்பெனிகளும் இவர்களுடைய செல்வாக்கினால் அனியாய வழியாய் லாபமடைகின்றன. அது நியாயவிரோதமாகும். ஆதலால் எந்தக் கவர்மெண்டு உத்தியோகஸ்தரும் இனி அவ்வாறு கம்பெனி ஏஜெண்டு உத்தியோகத்தை வகிக்கக்கூடாது. இப்பொழுது வகித்துள்ளவர்களும் உடனே அதை ராஜீநாமாக் கொடுத்துவிடவேண்டும்" என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

The Bonus in Insurance.

இன்ஷ்யூர் செய்கிறவர்களுக்கு கிடைக்கும் லாபம்.—சென்ற வருஷத்து ஸெப்டம்பர் மாதத்து ஸஞ்சிகையின் 455-56 வது பக்கங்களில் இன்ஷியூரென்ஸ் என்றால் இன்னதென்றும், இன்ஷியூர் செய்கிறவர்கள் கட்டவேண்டிய ப்ரீமியம் தொகைகளை என்னவிதமாக திட்டஞ் செய்கிறார்களென்றும் சொல்லியிருக்கிறோம். இன்ஷியூரென்ஸ் கம்பெனிகள் ஐந்து வருஷம் அல்லது 3 வருஷமும் சில கம்பெனிகள் வருஷா வருஷமும் 'ஆக்சுவரி' என்று சொல்லப்படும் கணக்கு நிபுணர்களைக் கொண்டு லாப நஷ்டத்தைப் பார்ப்பது வழக்கம். இப்படி பார்க்கும் பொழுது அநேகமாய் ஒவ்வொரு கம்பெனிகளிலும் முதலில் உத்தேசித்த லாபத்தைவிட கிடைத்த லாபம் அதிகமாகவே யிருக்கும். இதற்கு பலகாரணங்களுண்டு.

முதலாவது, இன்ஷ்யூர் செய்கிறவர்களால் கொடுக்கப்படும் ப்ரீமியம் தொகைகளை சேர்த்து வட்டிக்குப் போடும் வகையில், கிடைக்குமென்று உத்தேசித்த வட்டியைவிட அதிகமாகக் கிடைத்த வகையில் வரும் லாபம் ஒன்று. இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் ஸாதாரணமாக வருஷத்துக்கு 100-க்கு 3 வட்டிக்குமேல் கிடைக்காதென்று திட்டம் போட்டுக் கொள்வது வழக்கம். ஆனால், அநேக கம்பெனிகளுக்கு 100-க்கு 4-க்குமேல் கிடைத்திருக்கிறது.

இரண்டாவது, ப்ரீமியத் தொகையை திட்டஞ் செய்யும்பொழுது விப்பந்திச்செலவு, ஏஜண்டுகளின் கமிஷன் முதலியவைகளால் என்ன செலவாகக்கூடுமென்று இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் திட்டம் போட்டுக்கொள்வது வழக்கம். ஆனால் கடைசியில் கணக்குப் பார்க்கும்பொழுது உத்தேசித்தபடி செலவாகாமல் இந்த அம்சத்திலும் தொகை மிகுவது வழக்கம்.

மூன்றாவது, இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் குறித்த காலத்தில் எத்தனைபேர்கள் இறந்துபோவார்களென்பதை உத்தேசமாகக் கணக்கிட்டு அதன்மேல் ப்ரீமியம் தொகையை ஏற்படுத்துவது வழக்கம். ஆனால், உத்தேசித்தபடி இன்ஷ்யூர் செய்கிறவர்கள் சாகாமல் அந்த அம்சத்திலும் பணம் மிகுந்து விடுகிறது.

மேற்சொல்லிய அம்சங்களில் கிடைக்கும் லாபத்தை ஒன்று சேர்த்துப் பார்க்கும்பொழுது அது பெருந் தொகையாக ஏற்படும். இப்படிக்கெல்லாம் கிடைக்கும் லாபத்தில் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியின் ஷேர் ஹோல்டர்களுக்குப் பிரித்துக் கொடுத்ததுபோக பாக்கியை இன்ஷியூர் செய்து ப்ரீமியம் கொடுத்துவருகிறவர்களுக்கு 'போனஸ்' (லாபம்) என்பதாகப் பிரித்துக் கொடுப்பார்கள். இந்த போனஸ் விகிதமானது வெவ்வேறு கம்பெனிகளில் அதனதன் கட்டுக்கும் செட்டுக்கும் தக்கபடி இருக்கும். ஆகையால் இன்ஷ்யூர் செய்ய உத்தேசிக்கிறவர்கள் இதர கம்பெனிகளைவிட எந்தக் கம்பெனியில் அதிக போனஸ் கிடைக்கக் கூடுமென்பதையும் பார்த்துக் கொண்டு அந்தக் கம்பெனியில் இன்ஷ்யூர் செய்வது நலம்.

EDUCATION.

வித்யா விஷயம்.

Commercial Scholarships.

வியாபார ஸம்பந்தமாய் படிப்பவர்களுக்கு ஸ்காலர் ஷிப்பு.—நமது மஹாராஜாவுக்கு டில்லியில் நடந்த முடிசூட்டு வைபவத்தை முன்னிட்டு, பெங்களூர் கம்மர்ஷியல் ஹைஸ்கூல் ப்ரின்ஸ்பால், 10 பையன்களுக்கு இனாமாகவும், 20 பையன்களுக்கு பாதி இனாமாகவும், 18 மாஸத்துக்கு படிப்பிப்பதாக தெரிவித்திருக்கிறார். அதை அபேக்ஷிக்கும் பையன்கள், அவர்கள் படிக்கும்ஸ்கூல் அல்லது காலேஜ் அதிகாரிகளிடமிருந்து ஸர்டிபிகேட் வாங்கி அப்ளிகேஷனோடு போடவேண்டும்.

Technical Scholarships.

தொழிற் ஸ்காலர்ஷிப்புகள்.—லார்ட் மிண்டோ காலத்தில் ராஜப்பிரதிநிதியின் ப்ரைவேட் செக்ரெட்டேரியாயிருந்த லெப்டினண்ட் கர்னல் ஸர் ஜேம்ஸ் டன்லாப் ஸ்மித்தின் பேரால் பஞ்சாப் மாகாணத்தில் புதிதாய் 4 தொழில்கல்வி ஸ்காலர்ஷிப்புகள் ஸ்தாபிக்கப்படுமென்று பஞ்சாப் கவர்ன்மெண்ட் கெஜட்டில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. மாதம் ரூபாய் 25 வீதம் 4 ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படும். அந்த ஸ்காலர்ஷிப்புகளைப் பெறுவோர் பம்பாய் விக்டோரியா ஜூபிலி டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டில் 4 வருஷ காலம் வாசிக்கலாம். அந்த ஸ்காலர்ஷிப்புகள் வருஷத்தி லொன்றுவீதம் பஞ்சாப் மாகாணத்தையோ, பஞ்சாப் கவர்ன்மெண்டுக் குட்பட்ட சமஸ்தானங்களையோ, சேர்ந்த மாணுக்கர்களுக்குக் கொடுக்கப்படும். பாஞ்சாப் மாகாணத்திலேயே ஒரு தொழிற் கல்விச்சாலை ஸ்தாபிக்கப் பட்டுப்போகுமானால் அந்த ஸ்காலர்ஷிப்புகள் அத்தொழிற் கல்விச்சாலையில் வாசிக்கும் பிள்ளைகளுக்குத்தான் கொடுக்கப்படும்.

Moral Instruction.

ஸன்மார்க்கப் போதனை.—பம்பாய் கவர்ன்மெண்ட் வித்தையிலாகா செக்ரிடெரியாகிய மிஸ்டர் எந்தோவனைக்கொண்டு அந்த கவர்ன்மெண்டார் ஸன்மார்க்க பாடங்கள் பிள்ளைகளுக்கு சொல்லி வைப்பதில் உபாத்தியாயர்களுக்கு உதவக்கூடிய ஸன்மார்க்க போதக்குறிப்புகள் பல சேகரித்திருக்கிறார்களென்றும், ஆனால் அவைகளை ஒரு புத்தகரூபமாய் வெளியிடுவதாய் அக்கவர்ன்மெண்டாருக்கு உத்தேசமில்லையென்றுந் தெரிகிறது. அக்குறிப்புகள் அடங்கிய புஸ்தகங்களைச் சோதித்து அவைகள் உபாத்தியாயர்களுக்கு உபயோகப்படும் அல்லது உபயோகப்படமாட்டாதென்று அறிந்து சொல்ல, ஒரு ஸ்பெஷல் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

Technical Institutions.

தொழில் வித்தைச்சாலைகள்.—ரூர்க்கியிலுள்ள தொமேஸன் காலேஜ் ப்ரின்ஸிபாலாகிய லெப்டினண்ட் கர்னல் இ. எச். அட்கின்ஸனையும் பம்பாய் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டின் ப்ரின்ஸிபாலாகிய மிஸ்டர் டி. டாஸனையும் ஜனவரி மாஸம் முதல் இந்தியா கவர்ன்மெண்டார் தொழில் வித்தியாசாலைகள் ஸம்பந்தமாக ஸ்பெஷல் ட்யூட்டியில் வைத்திருக்கிறார்கள். தேசத்தில் தொழிற்சாலைகளில் வேலை வாங்குவோருக்கும் தொழில் வித்தியாசாலைகளுக்கும் அனுபோகத்தில் நெருங்கிய ஸம்பந்தமுண்டாகும்படி செய்வது இவர்களுடைய ஸ்பெஷல் ட்யூட்டியாகும். இந்தத் தொழிற்சாலைகள் கவர்ன்மெண்டுடையனவாயிருந்தாலும் ஸரி, ஸொந்தக்காரர்களுடையனவாயிருந்தாலும் ஸரி, இவர்கள் இருவரும், வேலை வாங்குவோரின் அவசியங்கள் எவை என்றும், அவைகளுக்குத் தக்கவாறு இப்போதுள்ள வித்தியா சாலைகளில் ஏற்பாடுகள் இருக்கின்றனவாவென்றும் விசாரிப்பார்கள். ஒவ்வொரு மாகாணத்துச்கும் போய் அம்மாகணத்துக் கவர்ன்மெண்ட் சொல்லுகிறபடியும் அவர்கள் நியமிக்கும் மனிதரைச் சேர்த்துக்கொண்டும் விசாரணை செய்வார்கள். இந்த முக்கியமானதும் அனுபோகத்திற்கு இசைந்ததுமான வேலையில் வேலை வாங்குவோர் ஒத்துழைப்பார்களென்று கவர்ன்மெண்டார் நம்புகிறார்கள்.

தொழில் பள்ளிக்கூடங்களில் படித்தல் பிறகு பிழைப்பதற்கு ஹேதுவாகுமென்பதற்கு ஸந்தேகமில்லை. ஆனால் என்னபடித்தவனாயிருந்தாலும் வேலை செய்யக்கூடியவனென்று நிச்சயமாய்த் தெரிந்தாலொழிய எஜமான்கள் வேலைக்கு அமர்த்திக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் ஒருவனுடைய தொழில் படிப்பு ஆனதும் அவனை ஒரு தொழில் சாலையில் கற்றுக்குட்டியாய் (அப்ரென்டிஸ்) போட்டுவைப்பது நல்லது. இப்படி கற்றுக்கொண்டு வேலையைத் தெரிந்து கொண்டதும் எஜமான்கள் சம்பளம் போட்டு விடுவார்கள்.

ECONOMIC PRODUCTS.

விலையுள்ள பொருள்கள்.

Waste Rubber.

தள்ளுபடியான ரப்பர்.—இப்பொழுது பைவிகல்களில் ரப்பர் கெட்டுப்போய்விட்டால் அதை வீணாக எறிந்துவிடுகிறார்கள். இப்படி தள்ளுபடியான ரப்பரை வாங்குவதற்கு கல்கத்தாவிலும் லண்டனிலும் சில வர்த்தகர்கள் இருக்கிறார்களாம். கல்கத்தாவில் ஒரு கவர்ன்மெண்டு ஆபீஸில் பழைய ரப்பர்களை எடுத்துவைத்து விலையாக்குவதாகத் தெரியவருகிறது.

Linseed.

யாளி விதை.—இது இந்தியாவில் ஒரு முக்கியமான விளைப்பொருள். இதன் மாவைக் கிளறி சிரங்குகள் கட்டிகள் இவைகள் மேல் வைத்துக் கட்டினால் அவை சீக்கிரத்தில் பழுக்கும். யாளி விதையிலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கப்படுகிறது. அது வார்னிஷ் செய்யும் தொழில்களிலும் மெழுகு சீலை செய்யும் தொழிலிலும் ரொம்பவும் உபயோகப்படுகிறது. கொஞ்சகாலமாக ஸாய்பீன் என்று சொல்லப்பட்ட அவரை ஜாதியைச் சேர்ந்த ஒருவித கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டு, அதன் உபயோகமும் யாளி விதையின் எண்ணெய்க்கு ஸமானமாக இருந்ததைப்பற்றி யாளி விதையின் எண்ணெயில் வியாபாரம் கொஞ்சம் ஜப்பாயிருந்தது. ஆனால் சில கைத்தொழில்களில், முக்கியமாய் மெழுகு சீலை செய்யும் கைத்தொழிலில், யாளி விதை எண்ணெய்க்கு அப்புறந்தான் ஸாய்பீன் எண்ணெய் என்று அநுபோகத்தில் தெரிந்ததால் யாளி விதை எண்ணெய்க்கு கிராக்கி ஏற்பட்டு வருகிறது.

Lotus Root.

தாமரைக் கிழங்கு.—ஏழைகளுக்கு இது உணவாக உதவுகிறது. இவை உள்ள குளங்கள் குட்டைகள் வற்றிப்போனால் கிராமங்களில் பன்றிகளை விட அவை இக்கிழங்கை தோண்டித்தின்னும். இக்கிழங்கு தண்டு வடிவமாகவே இருக்கிறது. இதற்குள் ஐந்து ஆறு துவாரங்களும் தண்டிலிருப்பது போல் உண்டு. இது பருத்து மாவு நிறைந்து இருக்கும். இது ருசியற்றிருக்கும். பச்சையாகவும் சுட்டும் அவித்தும் தின்பதுண்டு. கிழங்கை ஒடித்தால் நார் ஒடிவதுண்டு.

இக்கிழங்கை வற்றல்போட்டு உப்புக் கலந்து வறுப்பதுண்டு. இதைப் பருப்புடன் கூட்டு செய்வதுண்டு. இத்தேசத்துக்கு குளிர்ச்சியென்று பட்டணங்களில் காசுகொடுத்து வாங்குவதுமுண்டு. கிடைக்கு மிடங்களில் வீண்போகாதபடி சேகரித்து வற்றல்போட்டு வியாபாரம் செய்வது உணவை தேசத்தில் அதிகப் படுத்தும் மார்க்கம். குளங்களில் கிழங்கைத் தோண்டியெடுத்தாலும் மழை வரும் போது மறுபடியும் நிறைய முளைக்கிறது.

The Uses of Pearls.

முத்துக்களின் உபயோகங்கள்.—(1) முத்து பல தேசத்தாராலும் ஆடவர் பெண்டிர் இளையோர் முதியோர் என்ற ஏற்றத்தாழ்வின்றி அலங்காரத்திற்காக, அணியப்படுகிறது. பெண்கள் புலாக்கு, கொப்பு மூக்குத்தி முதலிய ஆபரணங்களில் அவைகளைப் பதித்தும், மாலையாகக் கோத்தும், அணிவர். சிலர் கடுக்கன் மோதிரம் முதலியவைகளில் அவற்றைக் கட்டி அணிவர். ஸ்வாமிக்கும் ராஜாக்களுக்கும் செய்யப்படும் கிரீடங்களில் முத்தை விசேஷமாகக் காணலாம்.

(2) இஃதொரு அரிய வியாபார சரக்காயிருப்பதால் வணிகர்க்கு இதனால் பெருத்த லாபம் உண்டு.

(3) முத்து ஓர் மருந்துச் சரக்காதலின் பொடி முத்துக்களை சீனரும் இந்தியரும் புடம்போட்டு பிறகு மருந்துடன் கூட்டி விற்றுப் பணம் பெறுவர்.

(4) மேற்றிசையோரிற் பலர் பவளத்தைக் கொள்வது போலவே, சிலர் மலடு நீங்கவும், திருஷ்டி கழியச் செய்யும் ரக்ஷையாகவும், கருதி உபயோகிக்கிறார்கள்.

(5) நகைகளுக்கு உபயோகிக்க முடியாத கடுகு போன்ற 'விரை' முத்துக்களை சில தனவான்கள் வாங்கி சுட்டு சாம்பலாக்கித் தாம்பூலத்துடன் அருந்துவர்.

(6) தென் ஐரோப்பாவில் உள்ளோர் முத்துடன் சில பொருள்கள் சேர்த்து ஓர் வகைத் தைலம் எடுத்து அதை முகத்தில் பூசிக்கொள்வார்களாம். அவ்வாறு செய்வதால் அவர்கள் நரைத்தலையராங் காலத்தும் முகத்திரை காணாதாம்.

(7) முத்துச் சிப்பிகள் நானாவித பொத்தான்கள் செய்யவும் அநேக விதமான அலங்கார வேலைகள் செய்யவும் உபயோகமாகும்.

BUSINESS METHODS
வியாபாரமுறைகள்.

What Salesmen Should Know.

விற்கிறவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அம்சங்கள்.—சரக்குகளை செய்வதில் ஸாமர்த்தியம் வேண்டுமென்றாலும் அதைவிட அவைகளை விற்பதில் அதிக ஸாமர்த்தியம் தேவை. கடையில் உட்கார்ந்து கொண்டு ஸாமான்களை விற்கிறவர்களுக்கும் வெளியூர்களுக்குப்போய் அங்கங்கே சரக்குகளுக்கு ஆர்டர்வாங்கும் தரகர்களுக்கும் கான்வஸ்ஸர்களுக்கும் அடியில்கண்ட விஷயங்கள் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும்:

1. இவர்கள், தங்கள்முதலாளிகள், அவர்களுடைய வாடிக்கைக்காரர்களோடும் விப்பந்திகளோடும் இன்னும் இதரவர்த்தகர்களோடும் என்ன நோக்கங்களோடு வியாபாரம் செய்கிறார்களென்பதை அறிந்திருக்கவேண்டும்.

2. இவர்கள் வியாபாரத்தை நடத்திவரும் மானேஜர்களை நன்றாய் அறிந்திருக்கவேண்டும். இதோடு அந்த மானேஜர்கள் எப்பேர்ப்பட்டவர்களென்று அறிந்து கொள்வதற்கு தருணங்களும்கிடைக்கவேண்டும்.

3. இவர்கள் முதலாளிகளின் சரக்கின் குணகுணங்களை அறிந்திருக்கவேண்டும். அதாவது, முதலாளி எந்த சரக்குகளை முன் பின்னாக விற்கவேண்டுமென்றான், எதற்காக விற்கவேண்டுமென்றான், என்ற விஷயங்களை நன்றாய் அறிந்திருக்கவேண்டும்.

4. இவர்கள் விற்கப்போகும் சரக்குகள் எந்தெந்த விதமாய் ஜனங்களுக்கு உபயோகப்படு மென்பதை அறிந்திருக்கவேண்டும்.

5. இவர்கள் தாம் விற்கும் சரக்குக்கும் இன்னொருவன் போட்டி போட்டு விற்கும் சரக்குக்கும் வித்தியாஸங்கள் என்ன இருக்கின்றனவென்று நன்றாய் அறிந்திருக்க வேண்டும்.

6. இவர்கள் தாம் விற்கப்போகும் சரக்கில்வேறொருவன் விற்கும் சரக்கிலில்லாத விசேஷகுணங்கள் என்ன இருக்கின்றன வென்று அறிந்திருக்க வேண்டும்.

7. இவர்கள் ஒரு ஜில்லாவுக்குப் போய் ஆர்டர்கள் வாங்கப் புகுவதற்குமுன் அந்த ஜில்லாவில் தங்கள் முதலாளிகளுக்குள்ள அனுபோகங்களை அறிந்திருக்க வேண்டும்.

8. இவர்கள் ஒரு ஜில்லாவில் புகுவதற்கு முன்னால் அந்த ஜில்லாவில் முதலாளி வியாபாரம் செய்து கிடைத்த லாபநஷ்டம் முதலிய அனுபோகங்களை எதார்த்தப்படி முதலாளிகளிடத்திலிருந்து அறிந்து கொள்ளவேண்டும்.

9. இவர்கள் விற்கப்போகும் சரக்குகளின் விலை விகிதங்களை நன்றாய் அறிந்துகொள்ளவேண்டும். அதாவது, ஸமயத்திற்குத்தகுந்தபடி விற்கலாமா, பிசுகலாமா, அல்லது ஒரேவிலையா, என்ற விஷயங்களை நன்றாய் அறிந்து கொள்ளவேண்டும்.

10. இவர்கள் முதலாளியின் விப்பந்திகளோடு கலந்து பழகி அதன் மூலமாய் முதலாளியின் தாத்பரியங்களை அறியவும் வேண்டும்.

11. இவர்கள் ஸாமான்களை விற்கத் தொடங்கு முன்மேற்சொல்லிய விஷயங்களை யெல்லாம் அறிந்து கொள்ள வேண்டிய அவகாசம் பெறவேண்டும்.

12. இவர்கள் மேற்சொல்லியவைகளை யெல்லாம் அறிந்து கொண்டு விட்டார்களென்று நிச்சயப்படுத்திக்கொள்ள அவர்களை ஒரு தடவை பூராவாகபழக்கி விட வேண்டும். இப்படிச்செய்தால் இவர்கள் ஸாமான்களைகடையில் உட்கார்ந்து விற்கும்போதோ அல்லது வெளியூர்களுக்குப்போய் ஆர்டர் வாங்க முயற்சி செய்யும்போதோ யார் எதைக்கேட்டாலும் விழிக்காமல் பதிலை நறுக்கென்று சொல்லுவார்கள்.

Shopping by Post.

தபால்மூலமாய் ஸாமான் விற்றல்.—சென்னை ராஜதானியில் அநேக ஐரோப்பிய வியாபாரிகள் ஸாமான்களுக்குப் போட்டு விற்கும் விலையானது அதிகமாயிருக்கிறதாம். அதைவிட குறைந்த விலைக்கு அநேக ஸாமான்களை அமெரிக்கர்கள் விற்கக்கூடுமாம். ஆகையால் கான்ஸெல் என்று சென்னை ராஜதானியில் அமெரிக்கர்களுடைய வியாபாரத்தைப்பாத்துவர ஏற்பட்டிருக்கும் உத்தியோகஸ்தராகிய ஆலிவேரிஸ் என்பவர் ஒரு உபாயம் செய்திருக்கிறார். இவர் சென்னை ராஜதானியிலுள்ள முக்கியமானவர்களுடைய ஜாபிதாபுருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும்வெவ்வேறாக தயார் செய்திருக்கிறார் இந்த ஜாபிதாக்களை அமெரிக்கவர்த்தகர்களுக்கு அனுப்புவார். அந்த ஜாபிதாக்களைப் பார்த்து அவர்கள் யார்யாருக்கு என்ன என்ன சரக்குகள் பிடிக்குமென்று தோன்றுகிறதோ அந்தந்த சரக்குகள் அடங்கிய காட்லாக்குகளை அனுப்பி, அதனால் ஆர்டர்களைப் பெற்று, தபால் மூலமாய் ஸாமான்களை அனுப்பலாம்.

FRAUDS AND FAKES.

மோசங்களும் பித்தலாட்டங்களும்.

Adulterated food.

கலப்படஞ் செய்யப்பட்டஉணவுப் பொருள்கள். தற்காலத்தில் இங்கிலாந்தில் உணவுப் பொருள்களில் கலப்படஞ் செய்வதால் $1\frac{1}{4}$ அணு முதல் 2 அணு வரையில் அதிகவிலை கொடுக்கவேண்டியதாக இருக்கிறதாம். அதாவது, சாப்பாட்டிற்குச் செலவாகும் தொகையில் 100-க்கு ஸுமார் 8 முதல் $12\frac{1}{2}$ வரையில் வரிபோட்டது போலாகிறது. இந்த வரியை அடைவது கவர்ன்மெண்டாரல்ல. உணவுப்பொருள்களில் கலப்படஞ் செய்கிறவன் அடையும் லாபம்.

The High Cost of Living.

கஷ்ட ஜீவனம்.—தற்காலத்தில் விலை விகிதங்கள் அதிகமாகி ஜனங்கள் கஷ்டப்படுவதற்கு ஒரு முக்கிய காரணமென்னவென்முல் சில வியாபாரிகள் நிறையைக்குறைத்தும், அளவைக்குறைத்தும், இப்படிக்கெல்லாம் சூதுகள் செய்வதே விவஸாயிகள் தாங்கள் விளைவிக்கும் பொருள்களை விற்பதில் சூதுகள்செய்கிறார்களென்று சொல்ல இடமில்லை. ஏனென்முல் வியாபாரிகள் விவஸாயிகளிடத்திலிருந்து சரக்குகளை வாங்கும்போதெல்லாம் தங்கள்படியும் படிக்கல்லும் ஸரியானவை என்றுசொல்லி அவைகளாலேயே அளந்தும் நிறுத்தும் வாங்குகிறார்கள்.

Trade Misrepresentation.

வியாபார மோசம்.—சென்னப்பட்டணத்தில் அநேகம் பேர்கள் நெல்லூர் அரிசியை விரும்புகிறார்கள். கடையில் போய் கேட்டால் வியாபாரி நெல்லூர் அரிசிஇல்லாமற்போனலும்வியாபாரத்தைவிட இஷ்டமில்லாமல் வேறு எந்தவித அரிசி இருந்தபோதிலும் நெல்லூர் அரிசிதான் என்று சொல்லிவிடுகிறான். இப்படியே அநேக சரக்குகளில் மோசங்கள் நடக்கின்றன. இப்படிப்பட்ட மோசங்கள் இந்தியாவில் தான் நடக்கின்றன வென்று எண்ணிவிடக்கூடாது. இங்கிலாந்தில் லண்டனில் சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தக சங்கத்தார், வியாபாரத்தில் என்னென்ன மோசங்கள் செய்கிறார்களென்பதையும் அவைகளை எப்படித் தடுக்கலாமென்பதையும் யோஜித்துரிபோர்ட்டு செய்யும்படி ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அவர்களுடைய ரிபோர்ட்டைப் படித்துப் பார்த்தால் வியாபாரத்தில் வரவர உலக மெங்கும் பொய்யும் புரட்டும்அதிகமாகிக்கொண்டுவருகிறதாகத் தெரியவருகிறது. ஸாமான் எங்கே உத்பத்தியாயிற்று, அதன் குணகுணங்கள் என்ன, எவ்வளவு அகப்படும், என்ன விலையாகும், என்ற இப்படிப்பட்ட விஷயங்களிலே தான் பொய்யும் பித்தலாட்டங்களும் நடக்கின்றனவாம். இவைகளைத் தடுப்பதற்கு என்ன வழி பண்ணலாமென்று அந்தக் கமிட்டியார் ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் செய்திருக்கும் சிபார்சுகளெல்லாம் பின்வருமாறு:

1. இப்போதுள்ள சட்டங்களில் மேற்சொன்ன பொய் புரட்டுகளைத் தடுப்பதற்கு வேண்டிய ஆதாரங்களிருப்பதால் புரட்டு செய்கிறவர்களை கவனித்து, கண்டுபிடித்து கவர்ன்மெண்டார் சிக்ஷைக்குக் கொண்டு வரவேணும்.

2. ஸாமான்களை உற்பத்தி செய்கிறவனுயிருந்தாலும் ஸரி, இறக்குமதி செய்கிறவனுயிருந்தாலும் ஸரி, சில்லரையாய் விற்பவனுயிருந்தாலும் ஸரி, வாங்குகிறவன் வேண்டும் என்று கேட்கும் பக்ஷத்தில், ஸாமான்களைப்பற்றிய விவரங்களை எழுதிக்கொடுக்கும்படி கட்டாயப்படுத்த சட்டத்தை மாற்ற வேண்டும்.

Tinned Milk.

டப்பி பால்.—போன மீத்திய ஸஞ்சிகையில் 36-வது, பக்கத்தில் குழைந்தைகளுக்கும் இன்னும் பொது ஜனங்களுக்கும் டப்பிப்பால் சாப்பிடுவதாலுண்டாகும் தீமைகளை எடுத்துக்காட்டி டப்பிப்பால் வியாபாரத்தை சீர்ப்படுத்துவது அவசியம் என்று சொன்னேம். இதன் விஷயமாக ஆறு வருஷகாலமாய் கல்கத்தால் ஒரு உத்திரவு பிறந்து அமுலிருக்கிறது. வெண்ணெய் எடுத்து மிகுந்தபாலை டப்பிகளில் போட்டு கல்கத்தாவில் இறக்குமதி செய்வதாயிருந்தால் அந்த டப்பிகளின் மேலுள்ள லேபிள்களில் "வெண்ணெய் எடுத்த பாலிலிருந்து தயார் செய்யப்பட்டது" என்பதாக பெரிதாய் அச்சிட்டிருக்க வேண்டியது. இப்படி லேபிள் அச்சிட்டிராத பக்ஷத்தில் துறைமுக வரியாபீஸர்கள் அப்படிப்பட்ட லேபிள்களை ஒட்டிவிடுகிறார்கள். மற்ற துறைமுகங்களில் என்ன செய்கிறார்களோ தெரியவில்லை.

MACHINERY AND INVENTION.
யந்திரங்களும் நூதனகற்பிதமும்.

Honey Gathering Apparatus.

தேனெடுக்குங்கருவி:—தேனெடுப்பவர்கள், பொதுவாய்த் தீவர்த்தி முதலியவைகளைக்கொண்டு ஈக்களைத்துரத்திவிட்டு தேனை எடுப்பது வழக்கம். இலங்கைப்பிராந்தியத்தில் இப்போது ஒரு யந்திரங்கண்டுபிடிக்கப்பட்டு உபயோகப்படுகிறதாம். இதனால் ஈக்களுக்கு மரணம் நேரிடாதிருக்கிறதாம்.

A New Apparatus.

நவீன யந்திரம்.—அமெரிக்காவைச் சேர்ந்த சிக்காகோ நகரில், ஜெர்மன் நிபுணரொருவரால், ஒரு யந்திரம் நிருமாணிக்கப்பட்டுள்ளது. அது பிரக்ஞையற்றுப் போகும், ஆண், பெண், குழந்தை முதலிய எந்த வகுப்பாருக்கும், விரைவில் பலனைத் தருகிறதாம்.

Superior Nut Crackers.

உயர்ந்த பாக்கு வெட்டிகள்.—தஞ்சாவூர் ஜில்லாவில் நீடாமங்கலத்துக்கு ஸமீபத்தில் ஆலங்குடி என்பதாக ஒரு கிராமம் இருக்கிறது. அது பாக்குவெட்டிக்குப் பேர் போனது. அந்த ஊர் பாலசந்திர ட்ரேடிங்கஹால் ஸொந்தக்காரராகிய ஆப்த்ஸஹாய அய்யர் நமக்கு ஒரு பாக்குவெட்டி மாதிரிக்காக அனுப்பி இருக்கிறார். அது ரொம்பவும் கெட்டியாயும் வேலைப்பாடாயும் இருப்பதோடு இசைப் பூட்டுகள் தெரியாமல் அவ்வளவு நன்றாய் செய்யப்பட்டிருக்கிறது "வந்தேமாதரம் பாலசந்திரேடிங்ஹால் ஆலங்குடி" என்று இங்கிலீஷில் பாக்கு வெட்டியின் பேரிலேயே அச்சடிக்கப்பட்டிருக்கிறது. விலை 4 அணு முதல் ஒரு ரூபாய் வரையில் உண்டு.

Machinery Business.

யந்திர வியாபாரம்—அடியிற்கண்ட யந்திரங்களில் அக்கறையுள்ள வியாபாரிகள் 'பிழைக்கும் வழி' ப்பத்திரிகையைக் குறிப்பிட்டு கல்கத்தாவில் கௌன்ஸில் ஹவுஸ் தெருவில் "டைரெக்டர் ஜெனரல் ஆப் கம்மர்ஷியல் இன்டெலிஜன்ஸ்" என்னும் அதிகாரிக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

லண்டன் நகரத்தில் கத்தியை சுத்தம் செய்வதற்காக மலிவான ஆயுதம் ஒன்றைச்செய்யும் ஒரு வியாபாரக் கம்பெனியாருக்கு அவைகளை மதராஸ், ரெங்கூன் முதலிய இடங்களில் விற்க ஒரு ஏஜெண்டு வேண்டுமாம். (1296)

ஆயில் இன்ஜிகள் செய்யும் ஒரு இங்கிலீஷ் கம்பெனியாருக்கு மதராஸ், கல்கத்தா, பம்பாய், இவ்விடங்களில் விற்க ஒரு ஏஜெண்டு தேவையாம். (1300)

லண்டனில் மோட்டார்க்கார்கள் செய்யும் ஒரு கம்பெனியாருக்கு அவைகளை விற்பதற்கு அவைகளை மதராஸ், ரெங்கூன், கல்கத்தா, கராச்சி, இவ்விடங்களில் ஏஜெண்டுகள் தேவையாம். (1307)

Swadesi Razor.

சுதேசி க்ஷவரக் கத்தி—"காப்பிடல்" என்னும் ஆங்கிலேயப் பத்திரிகையில் 'க்ஷவரக்கத்தியைப் பற்றி ஒரு நிருபர் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். பொதுவாகப் பேசும் பொழுது, க்ஷவரக்கத்தி நெடுநாள் வேலைசெய்வதும், நன்றாய் வேலை செய்வதும், அதை ஸவதானமாக முனை மழுங்காமலும் பதனழியாமலும் தீட்டித் தக்கபடி வைத்திருப்பதையே பொறுத்தது. கத்தியின் வார்ப்பையும் தோய்ப்பையும் சேய்திறதையும் அவ்வளவு பொறுத்ததல்ல. இக்காலத்தில் எல்லா க்ஷவரக்கத்திகளும் அநேகமாய் ஒரு மாதிரியாய்ப் பாடம் செய்து உருவாக்கப்படுகின்றன. ஆகையால் கத்திகளைத் தக்கபடி கருத்தாய் வைத்திருந்தால் நாள் நின்று திருப்திகரமாய் வேலைசெய்யும். உதாரணமாக மேற்சொன்ன நிருபர் தாம் சுதேசி வேலைக்காரர்களால் இந்தியாவிற் செய்யப்பட்ட சுதேசிக் கத்தியொன்றை ஒன்பது வருஷமாய் இடைவிடாது உபயோகித்துவருகிறதாகவும், அது புத்தப் புதிதுபோல் நாளைக்கும் வேலை செய்வதாகவும் சொல்லுகிறார். நம் தொழிலாளிக்கு எஃகு வேலை தெரியாததல்ல. திருவண்ணாமலைக்கு ஸமீபத்திலுள்ள இரும்பேடு என்னும் ஊரிலும் செங்கற்பட்டுக்கு ஸமீபத்திலுள்ள பெரும்பேறு என்னும் ஊரிலும் நாட்டு க்ஷவரக்கத்திகள் செய்யப்படுகின்றனவென்றும் இவை மேனாட்டுக்கத்திகளை விட நாட்பட நின்று திருப்திகரமாய் வேலை செய்கின்றனவென்றும், அனுபவத்தில் தெரிந்தவர்கள் சொல்லக் கேட்டிருப்பதன்றி, அக்கத்திகளை நாமும் பார்வையிட்டுஉபயோகித்திருக்கிறோம். இவ்விதம் புத்தி நுட்பமுள்ள தொழிலாளிகளுக்குச் சிறுகச் சிறுகப் பணம் உதவி, உற்சாகமும் ஊதியமுமுண்டாக்கித் தேச முழுவதையும் தவிந்து பற்றக் கூடிய பெருந்தொழில் ஸ்தாபிக்கலாகுமென்று நமக்குத் தோற்றுகிறது. இந்தியன் இண்டஸ்ட்ரியல் கம்பெனியார் இதில் ஏன் கவனம் செலுத்தக் கூடாது?—சு. மி. நிருபர்.

LAW.

சட்டம்.

Power to Adopt a Son.

ஒரு புத்திரனை ஸ்வீகாரம் செய்துகொள்ள அனுமதி.—ஒரு ஹிந்து தனக்கு ஒரு ஸ்வீகாரப் புத்திரனிருக்கவேண்டுமென்று அபிப்பிராயம் கூறி, ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி தன்னுடைய மனைவிக்கு அதிகாரம் கொடுத்துவிட்டு இறந்துபோனான். இன்னாரைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இன்னும் மற்றபடி யாதொரு நிபந்தனையும் சொல்லவில்லை. இப்படியானால் விதவை ஒரு தடவை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டவுடன், ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுவதற்கு அவளுக்கு அவளுடைய புருஷனால் கொடுக்கப்பட்ட அதிகாரம் முடிந்துபோய் விட்டதென்று சொல்லமுடியாது. அவசியம் நேரிட்டபோது அவள் மறுபடியும் பலமுறை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுவதற்கு அவளுக்கு அதிகாரமிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இ. லா. ரி. 26. சென். 681.

Stamped Receipt.

ஸ்டாம்பு ஒட்டிய ரசீது.—அலஹாபாத்தில் பாலமுகுந்தன் என்ற ஒரு சாராய வியாபாரிக்கு ரூபா 34 மணியார்டர் வந்தது. அவன் வழக்கம்போல போஸ்டல் மணியார்டர் ரசீதில் கையெழுத்துச் செய்து பணம் பெற்றுக்கொண்டான். பணமனுப்பினவன் தனியாக ஒரு ஸ்டாம்பு ஒட்டிய ரசீது வேண்டுமென்று வற்புறுத்தினான். பாலமுகுந்தன் அது கொடுக்கமாட்டேனென்று மறுத்துவிட்டான். அதன் மேல் அவன்மேல் கேஸ் நடந்தது. ஸ்டாம்பு ஆக்டு 65-வது ஸெக்ஷன்படி அவனை கலெக்டர் ப்ராஸிகூட்செய்தார். அவன் குற்றவாளி என்று மாஜிஸ்ட்ரேட் தீர்மானித்து அவனுக்கு 50 ரூபாய் அபராதம் விதித்தார். ஸெஷன்ஸ் ஜட்ஜூம் அந்தத்தீர்மானத்தை உறுதி செய்துவிட்டார். ஆனால் அலஹாபாத் ஹைகோர்ட்டார் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்புகளை மாற்றி, பாலமுகுந்தன் போஸ்டல் ரசீதில் கையெழுத்துச்செய்து விட்டதால், அவன் வேறு ரசீது கொடுக்க கடமைப்பட்டவன் அல்லவென்று சொல்லி அவனை விடுவித்தார்கள்.

Trade Mark Case.

வியாபாரக் குறியைப்பற்றிய கேஸ்.—ஈரோட் மாஜிஸ்ட்ரேட் முன்பாக A. குலாம் மகமது என்ற வியாபாரி மற்றொரு வியாபாரியாகிய A. M. ரஸூல்கான் மேல் கிரிமினல் கேஸ் கொண்டுவந்தார். இருவரும் சிகரெட்டும் பீடியும் செய்து வியாபாரம் நடத்துகிறவர்கள். குலாம் மகமதுனுடைய வியாபாரக் குறிபோல் ஒரு வியாபாரக்குறியை ரஸூல்கான் தம் சரக்குகள் மேற்போட்டு வியாபாரம் செய்தார் என்பது பிராது. குலாம் மகமதின் வியாபாரக்குறி ஒரு சந்திரப்பிறையும் நக்ஷத்திரமும் அவற்றின் கீழ் A. G. M. என்னும் எழுத்துக்களும் கொண்டது. ரஸூல்கான் வியாபாரக்குறி, ஒரு சந்திரபிறையும் கிரீடமும் அவற்றின் கீழ் A. M. R. என்னும் எழுத்துக்களும் கொண்டது. இருவரும் ஒரே நிறமுள்ள ராப்பர்கள் (மேற்சுற்றும் தாள்கள்) உபயோகித்து வந்தார்கள். இந்தப் பிராதை விசாரித்த ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட், ரஸூல்கான் குற்றஞ்செய்தார் என்று தீர்மானித்து, அவர் அபராதமும் செலவும் கொடுக்கும்படியும், அவர் சரக்குகளை கவர்ன்மெண்ட் கைப்பற்றிக்கொள்ளும்படியும் உத்தரவிட்டார்.

இதற்குமேல் மதராஸ்ஹைகோர்ட்டில் மிஸ்டர்ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்முன் ரஸூல்கான் பக்கம் ரிவிஷன் மனுசெய்து கொள்ளப்பட்டது. இரண்டு வியாபாரக் குறிகளும் ஒரே மாதிரி யிருக்கவில்லை யென்றும், அப்படி ஒரு மாதிரியாய் யிருந்தன வென்பதற்கும் அதனால் சரக்குகள் வாங்கினோர்கள் மோசம்போய் குலாம் மகமதியன் சரக்குகளை வாங்காமையால் அவருக்கு நஷ்ட முண்டாயிற்றென்பதற்கும் சாட்சியம் கொடுக்கப்படவில்லை யென்றும், குலாம் மகமத் உபயோகித்து வந்த வியாபாரக்குறி தமக்குத்தான் சுதந்தரமென்பதற்கும், சிகரெட் வாங்குவோருள் இந்தக் குறி இன்னருடையது தான் என்று ஒரு நம்பிக்கையும் மதிப்பும் ஏற்பட்டிருக்கின்றன வென்பதற்கும், போதுமான ஆதாரம் காட்டப்படவில்லையென்றும், சந்திரப்பிறையை குலாம் மகமதையன்றி, வேறொருவரும் உபயோகிக்கக்கூடாதென்பது ஞாயமாகா தென்றும், வாதிக்கப்பட்டது. ஜட்ஜ், இந்தவாதம் ஸரியானதென்று ஏற்றுக்கொண்டு, ரஸூல்கான் குற்றம் செய்யவில்லையென்று தீர்மானித்து, அவரால் கொடுக்கப்பட்ட அபராதமும் செலவும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கவர்ன்மெண்ட் கைப்பற்றியிருக்கும் சரக்கனையும் அவரிடம் கொடுத்துவிடவேண்டுமென்றும் உத்தரவிட்டார்

MEDICINE.
வைத்தியம்.

Pimples.

பருக்கள்.—நவசாரத்தைப் பன்னீரில் கரைத்து புண்ணின் மேலிடவும். 2. மாவில் கள்ளுசேர்த்து வேகவைத்துக்கட்டவும். 3. வலியும் சிவப்புமிருந்தால் அட்டைவிடவும். லேசாய்பிராந்தி சாப்பிடவும். 4.மஞ்சள்சிற இங்கிலீஷ் சவுக்காரமும் சர்க்கரையும் பசு வெண்ணெயும் சேர்த்துப் புண்ணிலிடவும். துணியில் தடவிப்போடுவது நல்லது.

The Papaw.

பப்பாளிப்பழம்.—இந்தப்பழத்துக்கு ஜீரணசக்தி அதிகமாயுண்டு. வெகுகாலமாக ஐரோப்பியர்கள் பெப்வின் என்பதாக ஜீரணசக்திக்கு எடுத்த ஒருவித மருந்தை இதிலிருந்து செய்துவருகிறார்கள். வாஸ்தவத்தில் பெப்வின் என்னும் மருந்தானது அசைபோடும் மிருகங்களின் இரைப்பையிலிருந்து எடுக்கப்படுகிறது. அதற்குள்ள குணங்களெல்லாம் பப்பாளிப்பழங்களிலிருந்து எடுக்கும் பெப்வினுக்கு மிருக்கின்றன.

Preserving the Teeth.

பற்களைப் பாதுகாக்க வழி.—காலை போஜனத்திற்குப் பிற்பாடு சீமையிலந்தைப் பழமொன்றை தினந்தோறும் ஒருவர் புசித்துவந்தால் பற்களைப் பாதுகாத்துக் கொள்ளலாமென்று ஒரு வைத்திய சாஸ்திரி கூறுகிறார். சில வருஷங்களுக்கு முன் இங்கிலாண்டில் இது விஷயமாய் விசாரிக்க ஒரு கமிட்டி யேற்பட்டது. அதன் ரிப்போர்ட்டினால்தெரிவதென்னவெனில், குழந்தைகளை பலவந்தப்படுத்தி சாப்பிடச்செய்வது தப்பென்றும், அதனால் எகிறுகளுக்கு லோபம் விளைகிறதென்றும், ஸரியான தூக்கம், அனுவசியமான அலவாட்ட மில்லாதிருப்பது, ஆகிய இவ்விரண்டுமே குழந்தைகளின் பல் வளர்ச்சிக்கு ஸாதகமானவை என்று, மெதுவான ஆகாரத்தைக்கொடாமல் கெட்டி யாகாரங்களைக் கொடுப்பதனாலும் பற்கள் உறுதிப்படுமென்றும், தெரியவருகிறது.

Corpulence.

ஸ்தூலம்.—ஸ்தூலித்ததேகிகளைக்கண்டு சாஸ்திர உணர்ச்சியில்லாத அநேகர் அவர்கள் மிக்கபல சாலிகளென்று எண்ணுகிறார்கள். ஸ்தூலித்த தேகிகளில் அநேகர் வியாதியஸ்தர்களென்றே நாம் கூறவேண்டும். நம்முடைய தேகத்தின் அவயவங்கள் பலப்பட்டு தத்தம் தொழிலைச் செய்துக்கொண்டு வருவதற்கு வேண்டிய வரையில் நாம் ஆகாரம் உட்கொண்டு வருவதே ஸுகாதாரத்துக் கேற்றதாகும். நம்முடைய தேகத்தைச் சேர்ந்த பற்பல உறுப்புகளும் நன்றாய் இயங்குவதற்காக எவ்வளவு வரையில் ஆகாரம் வேண்டியதோ அதற்கு அதிகமாய் நாம் உட்கொள்ளுவோமாகில், ஆகாரத்திலே அனுவசியமாய்க்கொள்ளும் அதிகபாகமானது சரீரத்தில் அங்கங்கு தசை க்ஷீணம் ஆகிய இவற்றின் ரூபமாய்த் தங்கி விடுகிறது. வேண்டிய அளவுக்கு அதிகமாக நாம் உட்கொள்ளும் ஆகாரத்திற் கேற்ப பற்பல கருவி கரணங்களுக்கும் வேலை கொடுக்காமல் இருப்போமாகில், நாள்தோறும் அதிகமாய் ஏறிக்கொண்டே போகும் போஷணங்கள் மேன்மேலும் கொழுப்பை அபிவிருத்திசெய்து, நம்முடைய தேகம் நம்மால் தாங்கக்கூடாத அவ்வளவு பாரமானதாய் விடுகிறது. ஆகவே நம்முடைய தேகத்தில் அனுவசியமாய்ச் சேர்ந்துள்ள கொழுப்பு முதலியவைகள் எவ்விதத்திலாவது வெளிப்பட வேண்டியதாகும். பற்பல வியாதிகள் ரூபமாக அவை கரைவதுமன்றி, அப்படி கரையுங்காலத்தில் ஏனைய உறுப்புகளை யெல்லாம் பலஹீனப்படுத்தியும் விடுகின்றன. இது தான் மேற்படி அனுவசியமான போஷணையினாலுண்டான கொழுப்பின் பயன். ஸ்தூலித்த தேகிகள் சுருசுருப்பாய் வேலை செய்யவும், பரபரப்பாய் நடக்கவும், தாராளமாய்க் காற்றை உசுவாச நிசுவாசஞ் செய்யவும், அசக்தர்களாயிருக்கிறார்கள். பசியெடுக்கும்போது வயிறுரத்தின்னக் கூடாதென்று நாம் இங்கு சொல்ல வரவில்லை. உருசியுள்ளதும் பலத்தைத் தரத்தக்கதுமான பதார்த்தத்தை வயிறுகொள்ளும் வரையில் நாம் தின்றாலும் அதை முழுமையும் ஜீரணித்துக் கொள்வதற்காக நன்றாய் வேலைசெய்ய வேண்டும். ஐரோப்பியர்கள் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்து உடையவர்களாயிருந்தாலும் தம்முடைய தோட்டங்களிலே தினம் கொஞ்சநேரம் களை கொத்துவது, நீர் பாய்ச்சுவது முதலிய வேலைகளை மெய்வருந்திச் செய்துவருகிறார்கள். அவ்வாறு செய்து வருவது ஸுகாதாரத்துக் கேற்றதென்பதை ஒவ்வொருவரும் அநுபவவித்தமாகக் காணலாம். அப்படி செய்துகொண்டு வந்தால் நமக்கு சரீரம் வீணே ஊதி ஸ்தூலிக்காமல் வேண்டிய அளவுக்குத் திடம்பெற்று ஆரோக்கியமாயிருக்கும்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைககளும்

Ingeneous Question.

விநோதக் கேள்வி.—ஒருநாள் 5-வயது பிராயமுள்ள ஒருபையன் தன் தகப்பனோடு தமிழ் அக்ஷரங்களை அப்பியாசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் தன் தகப்பனைக் கேட்டதாவது க. ங. ச. ஞ. முதலிய அக்ஷரங்களின்மேல் புள்ளிவைத்தால் இக். இங். இச். இஞ். என்று சொல்லுகிறீர்களே. அதேபிரகாரம் அ. ஆ. இ. ஈ. என்ற எழுத்துகளின் மேல் புள்ளி வைத்தால் எப்படி உச்சரிக்கிறது. ஒரு மனுஷனின் தலைமேல் புள்ளி வைத்தால் எப்படி உச்சரிக்கிற தென்றும் ஆச்சரியமான கேள்வியை கேட்டானாம்.

Bayonetted a Dog.

நாயை துப்பாக்கியால் இடித்தான்.—ஒரு ஐரோப்பிய போர் வீரன், வேலையிலிருக்கும் ஸமயத்தில், ஒரு நாய் வந்து அவனை லேசாகக் கடித்தது. உடனே அவன் பெயனெட்டினால் அதைக் [illegible]த்தி விட்டான். நாயின் ஸொந்தக்காரன் கோர்ட்[illegible] பிரியாது செய்தான்.

நீதிபதி:—வீர! நாய் உன்னை அதிகமாகக் கடித்ததாக வெளிப்படவில்லையே.

வீரன்:—ஐயா! எப்படியும் காயம்பட்டது மெய் தானே?

நீதிபதி:—மெய்யே. ஆனால் நீ துப்பாக்கியின் பின் கட்டையினால் அடித்திருக்கலாமே?

வீரன்:—நாய், தன் வால்பக்கத்தில் கடித்திருந்தால் நானும் துப்பாக்கி வால் புறத்தாலடித்திருப்பேன். முன்புறம் கடித்தது. அதற்கு முன் புறமே இடித்தது என்றான். எல்லோரும் சிரித்து வழக்கை அவ்வளவோடு நிறுத்தி விட்டார்கள்.

The Cook Knows Me.

சமையல்காரனுக்கு என்னைத் தெரியும்.—ஒரு உத்தியோகஸ்தருடைய வீட்டில் புதிதாய் வேலைக்கமர்ந்த ஒரு மனிதன் யோக்கியதை முழுதும் அவர் வீட்டு சமையற் பிராமணனுக்குத் தெரியுமென்று விக்ஞாபித்துக்கொண்டான். அப்பொழுது அந்த உத்தியோகஸ்தர் சமையற்காரனைக் கூப்பிட்டு இந்த மனுஷியனை நீ அறிவாயா? இவன் நம்பத்தக்கவன் தானா? அவன் பேச்சை நம்பி நம்விவகாரங்களை நடத்திக்கொள்ளலாமா? என்று கேட்க, அவன் "நம்பிக்கையுள்ளவனே. அவன் நிஜம் சொல்லும் பொழுது அவன் வார்த்தை அத்தனையும் நம்புங்கள். பொய் சொல்லும் பொழுது நம்பாதேயுங்கள்" என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தான்.

Smoking Prohibited.

சுருட்டுப் பிடிக்கக்கூடாது.—ஒரு ராணுவத் தலைவர், மருந்துக் கோட்டத்துக்கு ஒருவரும், சுருட்டுப் பிடித்துக்கொண்டு வரக்கூடாதென்று கண்டிப்பாய் உத்தரவிட்டார். காவலாளி, வெகு ஜாக்கிரதையோடு நிற்கும்போது, அயலானொருவன், சுருட்டுப் பிடித்துக்கொண்டு வந்தான். உடனே அக்காவலாளி அவனைக்கோபிக்கவே, அவன் சுருட்டை எறிந்துவிட்டுத் திரும்பினான். அவன் 4 அடி தூரம் போனதும், காவலாளி அச்சுருட்டை தான் பிடித்துக்கொண்டு, தன் இருப்பிடத்திலிருந்தான். திரும்பினவன் இவனைப் பார்த்து என்காணும், என்னைச் சுருட்டுப்பிடியாதே என்றுசொல்லிவிட்டு நீ பிடிக்கலாமா? என்றான்.

காவலாளி:—ஆமாம். எங்களுக்குத் தலைவர் வந்ததும், உண்மைப் படுத்துவதற்கு நெருப்போடிருக்க வேண்டுமே, அதற்காக அணைக்காது வைத்திருக்கிறேன்.

A Dog's Act.

ஒருநாயின் செய்கை.—பாரன்ஸ்லே என்னும் ஊரில் ஒரு துரையினுடைய ஆறுவயதுள்ள குழந்தையொன்று பந்து விளையாடிக் கொண்டிருக்கையில் அப்பந்து அருகிலிருந்த தண்ணீர்த் தொட்டியில் விழுந்தது. அதையெடுக்கச்சென்ற அக்குழந்தையும் அதில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தது. அருகிலிருந்த ஒரு நாய் அதைப்பார்த்து அத்தொட்டியில் மூழ்கி அக்குழந்தையின் கையைத் தன் வாயில் கௌவிக்கொண்டு கரைக்கு இழுத்துக்கொண்டு வந்தது. நாய் தண்ணீரில் குதித்த சப்தத்தை அண்டைவீட்டுக் கூரையின்மேல் கொல்லத்துவேலை செய்துக்கொண்டிருந்தவன் கேட்டுக் கீழே இறங்கிவந்து பார்க்கையில், நாய் குழந்தையை இழுத்துக்கொண்டு வருவதைப்பார்த்தான். அவன் அந்தக் குழந்தையையும், நாயையும், துரையினுடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் நடந்த ஸங்கதிகளைச்சொல்ல அத்துரை அந்தநாயின் நற்செய்கைக்கு அறிகுறியாக அதற்கு ஒரு வெள்ளிக் கழுத்துப்பட்டை செய்து அதில் இந்த தீரமான செய்கையையும் பதித்தெழுதி அதன் கழுத்தில் கட்டிவைத்தார்.

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

CURIOSITIES.
விநோதங்கள்.

Help to Fish Buyers.

ஓலையுமெழுதிக்கூடவும் போதல்—ப்ராங்போர்ட் என்னும் நகரத்தில் ஒரு முனிஸிபல் மீன் சந்தை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அந்த முனிஸிபாலிடியார் மீன் வாங்குபவர்கட்கு மீன் சமைக்கும் விபரத்தோடு கூடிய புத்தகப்பிரதி ஒன்றும் வேலைக்காரி ஒருத்தியையும் இலவசமாய் அனுப்புகிறார்களாம்.

The Feet of American Women.

அமெரிக்கா ஸ்திரீகளின் கால்கள்.—அமெரிக்கா தேசத்துச் சக்கிலியர்கள் போஸ்டன் என்னுமிடத்தில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் போன தலைமுறை ஸ்திரீகளைவிட இந்தத்தலைமுறை ஸ்திரீகளுக்குபாதங்கள் பெரிதாக யிருக்கின்றனவென்று அபிப்பிராயப்பட்டார்கள். இப்படி ஸ்திரீகளுக்குப் பாதங்கள் பெரிதானதற்குக் காரணம் அவர்கள் செய்யும் வேலையும் தேகப்பயிற்சியுமாமென்று ஒருவர் சொன்னார்.

Fish Fight.

மீன் சண்டை.—சிங்கப்பூரிலுள்ள தோட்டங்களுள், ஒருவகையான மீன்கள் வளர்க்கப்படுகின்றன; அம்மீன்களுள், ஒரு மீனுக்கு நேராக மற்றொரு மீனை விட்டால் அவை போர் வீரர்களைப்போல சண்டை செய்கின்றன. சண்டை செய்யும்போது அவற்றின் நிறம் பலவாறாகக் காணப்படுகிறது. சண்டையின் காட்சி மிக விநோதமாக விருக்குமாம்.

Ceremony for a Snake.

பாம்பின் சிரார்த்தம் :—வங்காளத்திற்கருகேயுள்ள கயா என்னுமிடத்தில் வசித்த ஒரு தட்டான் வீட்டில் நெடுநாளாய் இரண்டு சர்ப்பங்கள் இருந்து வந்தனவாம். ஒரு நாள் அவ்வீட்டிலுள்ளவர்கள் ஒரு பாம்பை அடித்துக் கொன்று விட்டார்களாம். இதையறிந்த மற்றொரு பாம்பு தினந்தோறும் ஷை பாம்பு கொல்லப்பட்ட இடத்தில் வந்து தன் தலையால் அடித்துப் போவதைப்பார்த்து அதைக்கண்ட வீட்டுக்காரன் பயந்து, அதை பிராமணனொருவருக்குத் தெரிவித்து பரிகாரம் கேட்க, அவர் கொல்லப்பட்ட பாம்பிற்கு சிரார்த்தம் செய்து பிராமணர்களுக்கு சந்தர்ப்பணஞ் செய்யச் சொன்னாராம். அங்ஙனமே, அங்ஙன் செய்ய, உயிரோடிருந்த பாம்பு மறைந்து போயிற்றாம்.

A Prodigy in Calculating.

கணிதத்தில் மேதாவி.—திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த தமிழனாகிய 14 வயதுப் பையனொருவன் திருவாங்கூரில் வந்து கணிதத்தில் தனக்குள்ள அபாரமான சக்தியைக் காட்டி, எங்கும் பெருவியப்பை உண்டாக்கியிருக்கிறானென்று தெரிகிறது. பெருந் தொகைகளைக் கூட்டுவதும், வகுத்து மூலத் தொகை சொல்வதும், 6,7 டெஸிமல் ஸ்தானங்கள் வரையிலும் திட்டமாகக் கேள்விகளுக்குப் பதில் சொல்வதும், போன்ற சிக்கலும் சங்கடமுமான கணக்குகளையெல்லாம் ஒரு நிமிஷம் அல்லது இரண்டு நிமிஷத்துக்குள் செய்து விடுகிறானாம். காலேஜ் மாதமாடிக்ஸ் ப்ரொபெஸர்கள் அனேகர் இவனைப் பரீக்ஷித்து இவனுடைய அத்தியாச்சரியமான மூளைவலுவைப் புகழ்ந்து ஸர்டிபிகேட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். அ என்னும் அக்ஷரம் கூட இவன் எழுதத் தெரியாதவன் எனப்படுகிறது.

Treating Mountain Snake.

மலைப்பாம்புக்கு வைத்திய பரிகாரம்.—லண்டன் பட்டணத்தில் உயிர்ப்பிராணிகள் வைக்கப்பட்டிருக்கும் பெரிய காட்சிச்சாலையில் ஒரு பிரம்மாண்டமான மலைப்பாம்பு மிக்க ஆவலாய்த் தனக்குப்போடப்பட்ட இரையை விழுங்கினபடியால் அதன் தாள் வாய்க்கட்டை உடைந்து போயிற்று. உடைந்த தாடையுடன் தீனி உண்ணவும் உயிர் பெற்றிருக்கவும் அதற்குக் கூடாதபடியால், ராயல் பிராணி வைத்தியசாலை ஆசிரியராகிய புரொபெஸர் வூல்ட்ரிஜ் என்பவர் உடனே அதற்குப் பரிகாரஞ்செய்யத் தீர்மானித்தார். பாம்பு அசையாமலிருக்கும்படி பலர் அதைப்பிடித்து ஒரு கட்டையை வாயில் நுழைத்து அது திறந்த வண்ணம் இருக்கச்செய்து, பிறகு டாக்டர் உடைந்து போயிருந்த தாடையைக் கட்டிப் பாம்பை ஏழுவாரத்துக்கு அசையாமலிருக்கும்படியாக ஒழுங்கு செய்தார். பிறகு அந்தப்பாம்பு ஸௌக்கியமாய் விட்டது. மலைப்பாம்புகள் ஒரு தடவையில், பூரணமாக இரை விழுங்கிவிட்டால் இரண்டு மூன்று மாதம் வரையில், தீனியில்லாமலிருந்தபோதிலும் அவைகள் சாகமாட்டாவாம்.

HINTS AND RECIPES.
யுக்திகளும் முறைகளும்.

To Prevent Decay of Wood.

மரம் கெடாமலிருக்க.—ஒரு விவஸாயி அநேக வருஷங்களுக்கு முன் அமெரிக்கா தேசத்தில் மண்ணில் புதைக்கும் மரத்தூண் முதலாகிய ஸாமான்களை இரும்பு ஸாமான் நீடித்திருக்கும் காலம் வரையில் கெட்டுப்போகாமலிருக்கும்படி செய்யலாமென்று கண்டுபிடித்தார். எவ்வளவு காலம் சென்றாலும் காற்றுமழை முதலானவைகள் அதைக் கெடுக்கவில்லையாம். அது பின்சொல்லும் உபாயத்தால் நீடித்திருந்தது.

காய்ச்சின ஆழிவிதை எண்ணெயில் நன்றாய்த் தூளாக்கின சீமைக்கரிப் பொடியைத் தூவிக் கிளரிக்கொண்டிருந்து அந்த எண்ணெய் மிஸ்ரம் பூசும்படியான பதம் வரும்வரையில் கிண்டிக்கொடுத்து அதை மரங்களுக்குப் பூசி நட்டால் பூமியில் அவைகள் கெட்டுப் போகாமல் நெடுநாளிருப்பதாகப் பார்த்திருக்கிறார்கள்.

Exterminating Rats.

எலிகளைத் தொலைத்தல்.—ஹஸநல்லிப் பேட்டையிலிருக்கும் எம். சிங்காரவேலு முதலியார் எழுதுகிறார் :—

எலிகளைத் தொலைக்கவேண்டுமானால் நல்ல பழுத்த வாழைப் பழத்தை உரித்து அதில் சுமார் 20 பயர்பாக்ஸ் குச்சிகளை பழத்து முழுவதும் குத்தி சுமார் 20 நிமிஷம்வரையில் வெயிலில் ஒரு தட்டைக் கோப்பையில் வைத்து காய வைத்தால் ஷை தீக்குச்சிகளில் இருக்கப்பட்ட மருந்துகள் ஷை வாழைப் பழத்தில் இறங்கிவிடும். அப்பொழுது அந்தப் பழத்தை யெடுத்து ஜாக்கிரதையாய் வைத்திருந்து எலிகள் வாஸஞ் செய்யும் இடத்தில் ராத்திரி காலத்தில் வைத்துவிட்டால் ஷை பழத்தை எலிகள் சாப்பிட்டு சுமார் 2 நிமிஷத்துக்கு பிறகு பிராணனை விட்டு விடும். இந்த பயர்பாக்ஸ் குச்சிகளில் இருக்கப்பட்ட மருந்துகள் ஷை பழத்தில் ஊறி அதை எலிகளுக்கு வைத்து நான் பரீக்ஷை செய்திருக்கிறேன்.

To Prevent the Cracking of Chimneys.

கண்ணாடி சிமிணிகள் உடையாமலிருக்க.—இந்தியாவில் அன்னிய தேசங்களிலிருந்து ஏராளமாய் இறக்கு மதியாகும் ஸாமான்களில் கண்ணாடி ஸாமான்கள் ஒன்று. அதிலும் லைட்டுகளுக்கு வைக்கப் படுகிற சிமிணிகள் தான் அதிகமாய் வருகின்றன. ஏனென்றால் அவைகள் அதிகமாய் சேதமாகின்றன. சிமிணிகளை வாங்குகிறவர்கள் வாங்கினவுடன் லைட்டில் வைத்து விடுகிறார்கள். புது சிமிணிகள் சூடு தாங்காமல் உடனே வெடித்து விடுகின்றன. மறுநாள் வேறு சிமிணிகள் வாங்குகிறார்கள். இதைத் தடுப்பதற்கு ஓர் சிறு உபாயம் சொல்லுகிறோம். இது ஸாதாரணமாய் அநேகருக்கு தெரிந்தே இருக்கலாம். ஆனால் கையாள்பவர்கள் மட்டும் மிகவும் சொற்பம். அதாவது, சிமிணிகளை புதிதாய் வாங்கினவுடன் “சாணிப்பாலில்” ஒன்று அல்லது இரண்டு நாள் ஊறவைத்திருந்து, பிறகு தண்ணீரில் கழுவி விட்டு, லைட்டுகளில் வைத்தால் அவைகளுக்கு சூடு அதிகமாய்த் தாங்கும் சக்தி உண்டாகிறது. பிறகு வாரத்திற்கு ஒரு தடவையாவது சாணிப்பாலில் போட்டு அலம்பிவந்தால் அந்த சிமிணி கீழே போட்டாலொழிய உடையாது. எவ்வளவு அதிக சூடாயிருந்தாலும் வெடிக்காது. நாம் சுமார் 8 வருஷ காலமாக ஒரு சிமிணியை இந்த மாதிரி செய்து உபயோகப்படுத்தி வருகிறோம்—என். ஆப்த்ஸஹாய அய்யர்.

Raisins as Food.

திராட்சைப்பழம் ஆகாரமாவது.—திராட்சைக்கு மலத்தைத் தள்ளும் குணமுண்டு. திராட்சையைப் போட்டுக் கஷாயம் இறக்கி அதைச் சாப்பிட்டால் பலஹீனமான இரைப்பை கெட்டிப்படும். ஒரு ராத்தல் திராட்சை சாப்பிட்டால் அது, $1\frac{1}{3}$-ராத்தல் மாட்டு இறைச்சிக்கும், 6 ராத்தல் இலந்தைப் பழத்துக்கும், 5 ராத்தல் வாழைப்பழத்துக்கும், $4\frac{1}{4}$ ராத்தல் உருளைக்கிழங்குக்கும், 1 ராத்தல் ரொட்டிக்கும், 4 ராத்தல் பாலுக்கும், $4\frac{3}{4}$ ராத்தல் மீனுக்கும், 2 ராத்தல் முட்டைக்கும், ஸரியாம். இங்கிலீஷ்க்காரர்கள் வருஷமொன்றுக்கு ஸராஸரியில் தலைக்கு 6 ராத்தல் திராட்சை சாப்பிடுகிறார்கள். அமெரிக்கர்கள் ஒரு ராத்தல்தான் சாப்பிடுகிறார்கள். திராட்சையை ரொட்டியிலும், பணியாரங்களிலும் இன்னும் அநேக விதங்களிலும் உபயோகிக்கலாம். எப்படி உபயோகப் படுத்தினாலும் உடம்புக்கு ரொம்ப நல்ல வஸ்து.

ECONOMIC LITERATURE.

பொருளாதார ஸம்பந்தமான பிரசுரங்கள்.

Agricultural Literature.

விவஸாய புஸ்தகங்கள்.—தென் இந்தியா விவஸாயத்தின் பத்திராதிபரும், சென்னை விவஸாயஇலாக்காவில் விவஸாய இன்ஸ்பெக்டராயிருந்து பென்ஷன் பெற்ற வருமான ஜி. ராஜகோபால் நாயுடு அவர்களால் எழுதப்பட்ட அடியிற்கண்ட புஸ்தகங்கள் விவஸாயிகளுக்கு உபயோகமாயிருக்கும் :—

(1)	விவசாய விளக்கம்	விலை ரூ. 1—4—0
(2)	தென்னை	விலை ரூ. 1—0—0
(3)	கரும்பு	விலை ரூ. 1—0—0
(4)	மாம்பழம்	விலை ரூ. 0—7—0
(5)	நெல்	விலை ரூ. 1—0—0

Indian and Japanese Agriculture.

இந்தியா, ஜப்பான், இவைகளில் விவஸாயம். பிப்ரவரிமாஸத்து கிருஷிகளில் ஸர் ப்ரெடரிக் நிக்கல்ஸன் துரை அவர்களால் "நாம் ஜப்பான் தேச விவஸாயத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவைகள்" என்னும் விஷயமாகச் செய்யப்பட்ட பிரஸங்கத்தின் ஸாரம்சம் எடுத்தெழுதப்பட்டிருக்கிறது. அவைகளில் ஜப்பானுக்கும் நமக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் கவனிக்கத்தக்கன.

1. இவ்விராஜதானியில் ஒரு பட்டாதாருடைய கைப்பற்று விஸ்தீரணம் ஸராஸரியில் 7-ஏக்கராவாகிறது. ஜப்பானிலோ $2\frac{1}{2}$ ஏக்கர்தான். அங்கே குடியானவர்களில் பாதிப்பேர் ஒரு ஏக்கருக்கதிகமாய் வைத்துக்கொள்வதில்லை. இத்தேசத்திலுள்ள குடிகளில் ஒவ்வொருவருக்கும் பொதுவாக ஜப்பான் குடிகளைவிட மூன்று மடங்கு கைப்பற்று நிலங்கள் இருக்கின்றன. ஜப்பானில் இத்தேசத்தைவிட நிலத்தீர்வையும் அதிகம். மேலும் யுத்தகாலங்களில் நிலத்தீர்வையை இரட்டித்து வசூல் செய்கிறார்கள். புகையிலை வரி, சாராயவரி, வீட்டுவரி முதலிய பல வரிகளும் அதிகம்.

2. ஜப்பானில் நிலத்தை ஆழமாக உழுகிறார்கள். மேலும் அவர்கள் அதிகமான செய்நேர்த்திசெய்து பயிரிடுகிறார்கள். இத்தேசத்தில் புன்செய் சாகுபடியாகும் சாதாரண செம்மண் நிலங்களில் கிடைக்கும் மாசூல் மற்ற தேசங்களில் கிடைக்கும் அளவுக்கு மிகவும் குறைந்திருக்கிறது.

ஜப்பான் தேசத்திலோ புஞ்சை நிலங்கள் முழுவதும் தோட்டக்கால் போலிருக்கின்றன. எங்கும் ஒரே விதமாய் மண்ணை ஒரு அடி ஆழம் முதல் இரண்டடி ஆழம்வரை உழுது புழுதியாக்குகிறார்கள். நிலவளம் எங்கும் ஒரே விதமாயிருக்கிறது. பயிர்வளமும் மாசூல் அளவும் எங்கும் ஒரேவிதமாயிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் எல்லா நிலங்களும் சாகுபடியாகும். எந்த நிலமும் தரிசாய்க் கிடப்பதில்லை. ஜப்பானியர் இயற்கையில் வளங்குன்றியிருந்த நிலங்களைத் தங்கள் உழைப்பினாலும் எருவினாலும் கொழுமையுண்டாகும்படி செய்திருக்கிறார்கள். இத்தேசத்திலும் அப்படிச் செய்யலாம்.

3. இத்தேசத்தில் ஒரு ஏக்கராவில் கிடைக்கும் மாசூலுக்கு மூன்று அல்லது நான்கு மடங்கு ஜப்பானில் கிடைக்கிறது.

4. இத்தேசத்தைப் பார்க்கிலும் ஜப்பான் தேசத்தின் தென்பாகத்தில் அதிக அனுகூலமான மழை பெய்கிறதென்பது வாஸ்தவம். என்றாலும், நிலங்களை நன்றாய்ப் பண்படுத்தாமலும் எருவிடாமலுமிருந்தால் மழை பெய்வதில் என்ன பயனுண்டாகும் ? இத்தேசத்தில் அனேக விடங்களில் பயிர்களுக்கு வேண்டிய அளவுக்குக் குறையாமல் மழை பெய்கிறதாகவே சொல்லலாம். ஆழ உழுது ஸரியானபடி எருவிட்ட நிலத்திலிட்ட பயிருக்கு மழைக் குறைவு சம்பவித்தாலும் அதன் மாசூல் சுமாராய்க் கைக்கு வருமென்பது நிச்சயம்.

5. இந்த தேசத்தில் புஞ்சை நிலங்களில் பொதுவாய் இரண்டாம் போகம் பயிரிடுவது கிடையாது. ஜப்பானிலோ புஞ்சையில் இரண்டாம் போகம் பயிரிடுவது ஸாதாரணம். அங்கே பயிரை வரிசை வரிசையாக விதைக்கிறார்கள். ஒரு வரிசைக்கும் மற்றொரு வரிசைக்கும் இடையில் 20 அல்லது 22 அங்குலம் இடம்விட்டு வைக்கிறார்கள். முதல் போகம் பயிர் விளைவுக்கு வரும் தருணத்தில் இடையிலுள்ள நிலத்தில் இரண்டாம்போகப் பயிரை விதைக்கிறார்கள்.

6. ஜப்பானைவிட இத்தேசத்தில் வேலையாட்களும் எருவும் கிடைக்கும் விஷயத்தில் அதிக ஸௌகரியங்கள் இருக்கின்றன. ஜப்பானில் விவஸாய ஸம்பந்தமான ஸகல வேலைகளையும் கால்நடைகள் அதிகமாயில்லாததால் மனிதரே செய்கிறார்கள். இத்தேசத்தைப்போல் ஜப்பானுக்குக் கால்நடைகளிருக்குமாகில் அதன் பாக்கியத்துக்கு அளவிராது. என்றாலும் அவர்கள் தங்கள் நிலத்துக்குத் தக்கபடி வளமுண்டாக்கி விடுகிறார்கள்.

7. இத்தேசத்து விவஸாயிகளைப் போலவே ஜப்பானிலும் விவஸாயிகள் கடன் வாங்காமல் ஜீவிக்கமுடியவில்லை. அவர்களுக்கு எத்தேசத்திலும் கடன் வாங்கித் தீரவேண்டிய ஸந்தர்ப்பங்கள் அனேகமாய் நேரிடுகின்றன. கிராம நாணயச் சங்கங்களை ஸ்தாபித்துக் கூட்டுத்தொழில் முறையை அநுசரித்தால் மட்டும் இந்தக் குடிகள் முன்னுக்கு வருவார்கள். அப்படிச் செய்வதால் முன் யோசனை யில்லாமல் செலவழிப்பது நின்றுபோம். செட்டாய்ச் செலவிடும் பழக்கம் ஏற்படும். முன்யோசனையுடன் கடன்வாங்கக் கூடும்.

8. இத்தேசத்து விவஸாயிகளுக்குக் கல்வியும், பயிற்சியும், புத்திசாலித்தனமும் மெத்தவும் குறைவு. கிருஷிகர் பிறருடன் சேராமல் தனியாய் இருந்து காலங் கழிக்கிறார்கள். அதனால் அவர்கள் தாங்களாகவே ஒரு காரியத்தைச் செய்து முடிக்க சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். ஜப்பான் தேசத்திலோ சில வருஷங்களாக வியாபாரக் காரியத்துக்கும் கடன் வாங்குவதற்கும் அனேக சங்கங்களை ஸ்தாபித்து அவைகளால் விசேஷ அநுகூலங்கள் உண்டாயிருக்கின்றன.

ஜப்பானியர் தங்கள் நிலங்களைக் கூடியபோதெல்லாம் கொத்தி மேலுங் கீழுமாய்ப் புரட்டிக்கொண்டிருப்பார்கள். வரிசை வரிசையாகப் பயிர்களை விதைத்து வளர்த்து அவைகளுக்குக் கொஞ்சங் கொஞ்சமாக மண்ணணைத்து வருவார்கள். இப்படி இடையில் உண்டாகும் பள்ளக்கால்களில் மறுபயிர் விதைப்பார்கள். அதற்கும் முன்போலவே கொஞ்சங் கொஞ்சமாய் மண்ணணைப்பதால் மண் மாறி புரண்டுவரும். அவர்கள் மண்வெட்டிக்கு நீண்ட கைப்பிடியுண்டு. அந்த மண்வெட்டிகொண்டு நிலத்தை அதிக ஆழமாய்க் கொத்துவார்கள். பயிர்கள் வளர்ந்து வரும்போது இடைவிடால் நிலத்தின் மேல் பரப்பை 6 அல்லது 7 தடவை கொத்திக் கிளறிக்கொண்டிருப்பார்கள். மேலும் தழை யெருவைநிலத்தின் மேற்பரப்பிற் கொத்திவிடுவார்கள். இதனால் அடிமண்ணிலுள்ள ஈரம் உலர்ந்து போகாமல் காப்பாற்றப்படுகிறது. இப்படி பயிருக்கு இந்த தேசத்திலும் செய்துவரலாம்.

TAMIL LITERATURE.

தமிழ்க் கல்வி.

A Proverb.

ஒரு பழமொழி :—ஐயமிட்டார் கெட்டார் என்பது ஒரு பழமொழி. ஆராயாமல் இந்தப்பழமொழியை நிந்தித் தொதுக்குவாருமுளர். அது அறியாமை. ஐயமிட்டார் கெட்டார் என்பதனைப் பிச்சையிட்டவர்கள் கெட்டார்கள் என்று பொருள் பண்ணாது, ஐயமிட்டு ஆர் கெட்டார் எனக்கொள்ளுதலே தகுதி. நாமும் கேட்போம், ஐயமிட்டு ஆர் கெட்டார்? ஒருவருமில்லை. தனக்குள்ள பொருள் முழுவதையும் பிச்சையிட்டால் பொருளெல்லாமழிந்து அவர்களும் கெட்டு விடுவார்களே யென்று சொன்னால், கெட்டு விடுவதொரு புறமிருக்கட்டும், முழுவதையும் பிச்சையிடச் சொன்னவர் யார்? ஒருவருமில்லை. கையிலுள்ள பொருளை யெல்லாம் பிச்சையிட்டழிக்கும்படி ஒரு நூலிலும் சொல்லப்படவில்லை. அளவறிந்து செலவிடவேண்டுமென்பதே நீதி.

Good advice.

நற்போதனை.

கற்றவனாயினுந் துஷ்டனைத்தள்ளு
காலையில் விழித்து வேலையை நடத்து
கிட்டினபேரைக் கட்டியே காப்பாய்
கீழ்ப்படி உனக்கு மேற்பட்டோர்க்கு
குணத்திற் கொடியது கோட்சொலத்துணிதல்
கூச்சங்கொள்ளுதல் பேச்சுக் கிடைஞ்சல்
கெட்டபேச்சில் இஷ்டங்கொள்ளேல்
கேலிச்சொல்லை நாவில் நவிலேல்
கைப்பொருளாகுங் கல்விப்பொருளே
கொடுமையிற் கொடுமை குணத்தைப் பழித்தல்
கோபந்துடிக்கப் பாவந்தடிக்கும்
கௌரவத்தோடு சௌரியந்தேடு
சங்கடநோய்க்குச் சகிப்பௌஷதமாம்
சாக்ரதையுடையான் யோக்கியமடைவான்
சிற்றின்பத்திற் சித்தங்கொள்ளேல்
சீராய்ச் செலவிட்டாலுயப் பெருக்கு
சுத்தமுண்டாகிற் சுகமுண்டாகும்
சூதாட்டத்தாற் சொத்துச்சேதம்
செல்வச்செருக்குச் சிறியோர்போக்கு
சேர்க்கைக்கேற்ற மார்க்கம் கிட்டும்
சைகையறிந்து செய்வது சமர்த்து
சொன்னசொல்லைச் சோரவிடாதே
சோம்பலுடையான் சோற்றுக்கலைவான்.

MISCELLANEOUS NEWS.

நாநா ஸங்கதி.

The Governorship of Madras.

மதராஸ் கவர்னர் ஸ்தானம்.—மதராஸ் ராஜதானி கவர்னராகிய லார்ட் கார்மைகேல மகாராஜா சக்ரவர்த்தியவர்கள் வங்காள கவர்னராக மாற்றி அவருக்கு பதிலாக மதராஸ் ராஜதானிச்கு லார்டு பெண்ட்லெண்டை கவர்னராக நியமித்திருக்கிருர்.

Directors of Agriculture.

விவஸாய டைரேக்டர்கள்.—இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாகாணத்துக்கும் விவஸாய டைரெச்டர்கள் நியமிக்கப்பட்டபோது அவர்கள் 5-வருஷ காலத்துச்கு நியமிக்கப்பட்டார்கள். இப்போது அவர்கள் நிரந்தரமாய் என்றைக்கும் வேலைபார்க்கும் உத்தியோகஸ்தர்களாக்கப்பட்டுப் போய்விட்டார்கள். ஆனல் ஐக்கிய மாகாணங்களில் மட்டும் லாண்ட் ரெவினியூ வேலையும், விவஸாய டைரெக்டர் வேலையும் இதுவரையில் ஒரே டைரெக்டரால் பார்க்கப்பட்டு வந்ததுபோல இனியும் ஒரே டைரெக்டரால் பார்க்கப்பட்டு வரும்.

President of the Chittoor Taluk Board.

சித்தூர் தாலுகா போர்ட் ப்ரஸிடெண்டு.—கவர்ன்மெண்டார் சித்தூர் தாலூகாபோர்டு ப்ரெஸிடெண்டை அத்தாலூகா போர்டு மெம்பர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமென்று தற்கால உத்தரவாகப் பிறப்பித்திருக்கிருர்கள். இதற்கு முன் அம்மெம்பர்கள் தங்களுடைய வைஸ் ப்ரெஸிடெண்டைத் தேர்ந்தெடுத்து கொள்ளலாமென்று உத்தரவு பிறந்திருந்தது. இப்புதிய உத்தரவினுல் அது ரத்தாய் விட்டது.

இந்த போர்டில் உத்தியோகஸ்தராயுள்ள மெம்பர்கள் ப்ரெஸிடெண்டு ஸ்தானத்திற்கு அபேக்ஷகர்களாய் வரப்படாதென்று கருதி, ஸம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவு அனுப்பியிருக்கிருர்கள்.

Hon'ble Mr. P. S. Sivasami Aiyer.

கனம். பி. எஸ். சிவஸாமி அய்யர்.—காலஞ்சென்ற வி. கிருஷ்ணஸாமி அய்யருக்கு பதிலாக மதராஸ் எக்ஸெக்யூடிவ் கௌன்ஸிலில் கனம். பி. எஸ். சிவஸாமி அய்யரை மகாராஜா சக்ரவர்த்தி அவர்கள் மெம்பராக நியமித்திருக்கிருர். கனம் சிவஸாமி அய்யர் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்தவர். மதராஸ் கவர்ன்மெண்டுக்கு அட்வொகேட் ஜனரலா யிருந்தவர்.

Recent Benefactions.

ஸமீபத்து நன்கொடைகள்.—பம்பாயில் ஷாப்பூர்ஜி புரோச்சா என்பவர் அநாதைகளான பார்ஸி விதைவகளுக்கும், தாய் தகப்பனில்லாக் குழந்தைகளுக்கும் உதவுமாறு ரூபாய் 1,20,000 தானஞ்செய்திருக்கிருர். பரோடாவில் தேகவியோகமாயின டாக்டர் மானெக்ஷா என்பவர் 1,10,000 ரூபாய் மதிப்புள்ள ஸொத்தை உயில் மூலமாகப் பரோபகாரத்தின் பொருட்டு வைத்திருக்கிருர். இந்த ஸொத்திலிருந்து வரும் வட்டியைக்கொண்டு திறமையுள்ள பார்ஸிமாணவர்களை அந்நிய தேசங்களுக்கு அனுப்பி அவர்கள் தத்துவ சாஸ்திரமுதலியன பயின்று வருமாறு செய்யப்படுமாம்.

The Delhi Changes.

டில்லியில் செய்த மாறுதல்கள்.—டெல்லி தர்பாரில் சக்ரவர்த்தி ஆக்ஞையின்படி செய்யப்படப்போகும் நிர்வாக மாற்றங்களுக்குப் பார்லிமெண்டின் அனுமதி கிடைக்கும்படி, ஒரு மசோதா கொண்டு வரப்படும். அந்த மசோதாவில் மேற்படி நிர்வாக மாற்றங்கள் ஸ்திரப்படுத்தப்படுவதுமன்றி, சீப் கமிஷணர் ஆளும் மாகாணங்களில், சட்டசபை ஸ்தாபிக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் கொடுக்கப்படும். அஸாம் மாகாணத்தைக் கீழ் வங்காளத்திலிருந்து பிரித்த பிறகுங்கூட அதில் ஒரு சட்டசபை உண்டாக்கப்படும். மத்திய மாகாணங்களிலும் அப்படியே செய்யப்படும்.

The Kashmir Maharaja's Gift.

காஷ்மீர் மகாராஜாவின் காணிக்கை.—காஷ்மீர் மகாராஜா டில்லியில் மகுடாபிஷேக மகோற்சவ காலத்தில் தாம் போட்டுக்கொண்டிருந்த கூடாரத்தின் முகப்பில் வெகு அலங்காரமாய்ச் செதுக்குச் சித்திரவேலைகள் செய்யப்பட்டிருந்த கதவுநிலை யொன்றைச் செய்துகொண்டு வந்து தமது கூடாரத்துக்கு விசேஷப் பார்வை கொடுக்கும்படி வைத்திருந்தார். அந்த நிலையைப் பார்த்து ஆச்சரியப்படாதவர்களும், மோஹியாதவர்களும் இல்லை. காஷ்மீர் மகாராஜா அக்கதவு நிலையை ஜார்ஜ் சக்ரவர்த்தியாருக்கு காணிக்கையாகக் கொடுத்துவிட்டார், அப்பெருமானும் அதை

வேண்டாமென்று மறுத்துவிடாமல் ஏற்றுக்கொண்டார்.

The World's Newspapers.

உலகத்தில் பத்திரிகைகள்.—உலகத்தில் மற்றெல்லாத் தேசங்களிலும் அதிகமான பத்திரிகைகளையுடையது அமெரிக்கா யூனைடெட் ஸ்டேட்ஸ் தேசம். இதில் 21,435 பத்திரிகைகள் நடைபெறுகின்றன; இவற்றில் 2500-தினஸரிகள்; 700 ஜெர்மன் பாஷையிலும், 40-டச்சுப் பாஷையிலும் நடைபெறுகின்றன. ஐரோப்பாவில் ஜெர்மனி, பத்திரிகைகளில் முதன்மைப்பட்டிருக்கிறது. இதில் 10,000 பத்திரிகைகள்; 1500 தினஸரிகள்; பிரான்ஸ், ஆஸ்ட்ரியா இரண்டு தேசங்களில் தனித்தனி 5600 பத்திரிகைகள்; க்ரேட் ப்ரிட்டனில் 4400; இவற்றில் 230 தினஸரிகள். அடுத்தபடியில் பெல்ஜியம் நிற்கிறது. அப்புறம் ஸ்பெயின் ருஷியா, இரண்டும் தனித்தனி 2000 பத்திரிகைகளுடையவைகளா யிருக்கின்றன. ஏஷியாவில் ஜப்பான் தலைமையாயிருக்கிறது. இதில் 2000 பத்திரிகைகள், 400 தினஸரிகள். ஆஸ்ட்ரேலியா 1000, இந்தியா 1800 பத்திரிகைகளுடையது.

The Punjab Industrial Association.

பஞ்சாப் தொழிற்படிப்பு விருத்தி சங்கம்.—பஞ்சாப் மாகாணத்து ஹிந்துப் பிள்ளைகள் தொழிற்படிப்புப் படித்துத் தேர்ச்சியடைய அவர்களை ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான்போன்ற அந்நிய நாடுகளுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்து அனுப்பும் நோக்கத்தோடு தொழிற்படிப்பு விருத்தி சங்கமென்று ஒரு சங்கம் பஞ்சாப்பில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்த சங்கத்தார் அனுப்பும் ஹிந்துப் பிள்ளைகளுக்கு அவர்கள் அமெரிக்கா ஐரோப்பாசென்று வாசித்தால் மாதம் ரூபா 120 ஸ்காலர்ஷிப்பு கொடுக்கப்படும். ஜப்பான் சென்று வாசித்தால் மாதம் ரூ-60 ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படும். ஸ்காலர்ஷிப்பைத் தவிர ரெயில்வே சார்ஜும் கப்பற் கேள்வும் கொடுக்கப்படும். அந்தசங்கத்தில் பஞ்சாப் ஹிந்துக்கள் மெம்பர்களாய்ச் சேரவேண்டுமென்றும், அவர்கள் ஒரு ரூபாய் வருஷ சந்தாக்கொடுத்தால் போதுமானதென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த சங்கத்துக்கு பாரிஸ்டர் மிஸ்டர் துனிச்சந்த் கௌரவ காரியதரிசி.

The Emperor and a Eurasian.

சக்ரவர்த்தியும் ஒரு யூரேஷியனும்.—கல்கத்தாவில் ஒரு நாள் காலை 9 மணிக்கு நமது சக்ரவர்த்தியார் குதிரை ஸவாரி செய்து திரும்பி கவர்ன்மெண்ட் ஹவுஸுக்கு ஸுமார் 509 கஜம் தூரத்தில் வரும்போது கஸ்டம் ஹவுவில் உத்யோகமாயிருந்த யூரேஷியனொருவன் "தங்களிடம் ஒரு மனுவு, தயவு செய்ய வேண்டும்" என்று அவர் பின்னால் கூச்சலிட்டு ஓடிவந்தான். அப்போது குதிரையை நடத்திக் கொண்டுபோகும் ராஜாவானவர் திரும்பிப் பார்த்து புன்னகைகொண்டார். யூரேஷியன் மறுவார்த்தை பேசுவதற்குள் போலீஸார் அவனை அரெஸ்ட்செய்து கொண்டுபோய் விட்டார்கள். போலீஸ் கொட்டடிக்குள் போகமாட்டேன் என்று மறுத்தான். மேற்படி யூரேஷியன் கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்டிலுள்ள யூரேஷியர்களுக்கு அபிவிர்த்தியடைய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்ள வந்தவனென்று அரசரது செவிக்கெட்டியதும் அவன் பேரில் யாதொரு நடவடிக்கையும் நடத்தவேண்டாமென்று கட்டளை யிட்டார்.

The Condition of the Depressed Classes.

கீழ்ஜாதியாரின் நிலைமை.—இப்போது நம் தேசத்தில் தோன்றி யிருக்கும் தேசாபிமானமும் ஜாதீய உணர்ச்சியும் உண்மையானவை யென்பதற்கு, கீழ் ஜாதியாரை உயர்த்தவேண்டுமென்ற விருப்பம் எப்பாகங்களிலும் உண்டாயிருப்பதைவிட வேறு திருஷ்டாந்தம் வேண்டியதில்லை. ஐந்துகோடி எண்ணிக்கையுள்ள கீழ்ஜாதியார்படும் கஷ்டங்களும் துன்பங்களும் விவேகிகளாகிய அனைவருடைய கருணைக்கும் உரியனவாயிருப்பதுமன்றி, இவ்வளவு பெரும் வகுப்பார் கேவலம் இழிவான நிலைமையிலிருப்பது ஹிந்து ஜனஸமூகத்துக்கே நிந்தை யென்று உணர்ச்சி யுண்டாகி, தற்காலம் நம் தேசத்தில் நானுபக்கங்களிலும் இந்த ஜாதியாரை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டு மென்ற நோக்கத்துடன் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. பஞ்சாப்பில் ஆரிய ஸமாஜத்தாரும், வங்காளத்தில் ப்ரம்ம ஸமாஜத்தாரும், ஸர் குருதாஸ் பானர்ஜியைப்போன்ற பெரிய மனிதர்களும், பம்பாய்ப் பக்கத்தில் பரோடா மகாராஜா முதலான உத்தம புருஷர்களால் நடத்தப்பட்டு இதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூட்டத்தாரும், அவ்வாறே தென்னிந்தியாவில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரைத் தலைவராகப்பெற்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கூட்டத்தாரும், மங்களூரிலும் இம்மாதிரி ஒரு ஸொஸைடியும், பஞ்சமர் என்று சொல்லப்படும் இந்தக்கீழ் ஜாதியாரை அறிவும் நாகரிகமும் பெற்று மற்ற ஜனங்களைப்போல் ஜீவிக்கும்படி செய்ய முயன்று வருகிறார்கள். ஐக்கிய மாகாணங்கள் மட்டும் இந்தவிஷயத்தில் பிற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

OPENINGS FOR BUSINESS.

வியாபாரம் நடக்கக் கூடிய இடங்கள்

Copper.

தாமரம்.—ஜப்பானில் ஒரு வியாபாரிக்கு தாமரம் வேண்டுபவர்களுடைய விலாசம் வேண்டுமாம். (1293)

Indian Produce.

இந்தியாச்சரக்குகள்.—ஜப்பானிலுள்ள ஒருவியாரிக்கு இந்தியாவில் பனைநார், பன்றிமயிர், கோணிச் சாக்கு, எலும்புத்தூள் இவைகளை விற்கிற வியாபாரிகளின் விலாஸங்கள் தேவையாம். (1295)

Castor Oil.

ஆமணக்கு எண்ணெய் —ந்யூ ஸீலண்டென்னும் தீவில் முக்கிய பட்டணமாகிய டாஸ்மேனியா என்னும் நகரத்தில் ஒரு வியாபாரிக்கு ஆமணக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்கிறவர்களுடைய விலாஸங்கள் தேவையாம். (1297).

Hides, Skins, Oil Seeds, Myrabolans.

தோல், எண்ணெய் வித்து, கடுக்காய்.—ஆஸ்திரியாவின் துறைமுகப்பட்டணமாகிய ட்ரீஸ்ட் என்னும் பட்டணத்தில் ஒரு வியாபாரிக்கு மாட்டுத்தோல் ஆட்டுத்தோல், எள்ளு, மணிலாக்கொட்டை முதலிய எண்ணெய் வித்துக்கள், கடுக்காய், இவைகளை ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்களின் விலாஸம் தேவையாம். (1304).

Cork.

நெட்டி.—பாரிஸ் நகரத்தில் ஒரு வியாபாரிக்கு நெட்டி வாங்கக்கூடிய வர்த்தகர்களின் விலாஸங்கள் தேவையாம். (1306)

Bones.

எலும்புகள்.—ஒரு பம்பாய் வியாபாரிக்கு எலும்பு விற்கிறவர்களுடைய விலாஸங் தேவையாம். (1309.)

Saddle Felts.

ஜேணக் கம்பளிகள்.—லங்காஷையரிலுள்ளஒரு வியாபாரிக்கு ஜேணத்தின்மேல் போடும் கம்பளிகளை விற்க ஏஜெண்டுகள் தேவையாம். (1310)

Chrome Tanning.

க்ரோம் முறைப்படி பதனிடல்.—க்ரோம் முறைப்படி தோல் பதனிடுவதில் நிபுணர் ஒருவர் அதில் இறங்க உத்தேசிப்பவர்களோடு கலந்து கொள்ள இஷ்டப்படுகிறார். (1311)

Furniture Leather.

நாற்காலி முதலியவைகளுக்குப் போடும் தோல் இங்கிலாந்தில் லீட்ஸ் நகரத்திலுள்ள ஒரு வியாபாரிக்கு நாற்காலி ஸோபா முதலியவைகளுக்குப் போடும் தோல்களை விற்பதற்கு, கல்கத்தா, பம்பாய், மதராஸ் முதலிய இடங்களில் ஏஜெண்டுகள் தேவையாம். (1312)

Fish Guano and Fish Food.

மீன் எச்சமும், மீன் ஆகாரமும்.—ஆபர்டீனிலுள்ள ஒரு வியாபாரிக்கு மீன் எச்சம், மீன் ஆகாரங்கள் முதலியவைகளை இறக்குமதி செய்பவர்களுடைய விலாஸங்கள் தேவையாம். (1313)

Caustic Soda.

ஸோடாகாரம்.—ரெங்கூனிலுள்ள ஒரு வியாபாரிக்கு இந்தியாவில் ஸோடாகாரம் வாங்குபவர்களுடைய விலாஸந்தேவையாம். (1317)

Cotton Yarns.

பருத்தி நூல்.—ஸ்மர்னாவில ஒருவருக்கு பருத்தி நூல் செய்கிறவர்களுடைய விலாஸங் தேவையாம். (1318)

Toys, Hardware, Fancy Goods.

விளையாட்டு ஸாமான்கள், இரும்பு ஸாமான்கள் வேடிக்கை ஸாமான்கள்.—லண்டன் நகரத்தில் விளையாட்டு ஸாமான்கள், வீட்டுக்கு வேண்டிய இரும்பு ஸாமான்கள், பித்தளை செம்பு ஸாமான்கள், வேடிக்கை ஸாமான்கள் இவைகளெல்லாம் செய்யும் ஒரு வியாபாரிக்கு அப்படிப்பட்ட ஸாமான்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களுடைய விலாஸங்கள் தேவையாம். (1319)

Enamelled Ware.

எனமல்சாமான்கள்.—இட்டலி தேசத்தில் எனமல் ஸாமான்கள் செய்வதில் நிபுணரான ஒருவர் அவைகளை இந்தியாவில் செய்ய உத்தேசிப்பவர்களோடு கலந்துகொள்ள விரும்புகிறார். (1320)

Wild Pig Skins.

காட்டுப் பன்றித் தோல்.—ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தருக்கு காட்டுப்பன்றித்தோல் வாங்கக் கூடியவர்களுடைய விலாஸம் தேவையாம். (1321)

MADRAS MARKET REPORTS.

மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்றுசொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் பிப்ரவரிமாஸம் 14-ம் வ ரிப்போர்ட்டுப்படி.

Produce Market.--விளைபொருள்கள்.

	ரூ.
ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு...	22 முதல் 28
கொன்னைப்பட்டை ஷை ...	15 முதல் $15\frac{1}{2}$
கடப்பை கடுக்காய் ஷை ...	7 முதல் 8
சேலம் ஷை ஷை ...	20 முதல் 21
நல்லெண்ணெய் ஷை ...	100 முதல் 110
புங்கம் எண்ணெய் ஷை ...	60 முதல் 90
எட்டிக்கொட்டை ஷை ...	
விளக்கெண்ணெய் ஷை ...	77
கொட்டை முத்து 195 ராத்தல்	$9\frac{3}{4}$ முதல் 10
	ரூ. அ. பை.
பந்தர் பச்சை அரிசி 44 படி ...	8 0 0
நெல்லூர் அரிசி 31 படி ...	$6\frac{3}{4}$ முதல் 7
கோதுமை 4 படி ...	1 0 0
கொள்ளு 195 ராத்தல் ...	$5\frac{1}{2}$ முதல் $5\frac{3}{4}$
வெங்காயம் (தாட்பத்திரி) பாரம் ...	8 8 0
ஷை (பல்லாரி) ஷை ...	8 0 0
பங்களூர் உருளைக்கிழங்கு ...	15 0 0

Metals.—உலோகங்கள்.

	ரூ.
பித்தளைத் தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ-ும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் ...	210
செப்புத் தகடுகள் பாரம் ...	258
செப்புக்கட்டி ஷை ...	220
நாகம் ஷை ...	84
ஷை (உள்ளூர்) ஷை ...	80
ஈயம் ஷை ...	60
காரீயம் ஷை ...	70
வெள்ளீயம் ஷை ...	199 வராகன்.

Iron.—இரும்பு.

மருக்கி சட்டம் 2 ரெ. பாரம் ரூ.	23 முதல் 24
சீமை	39 முதல் 40
மருக்கி தகடு 6--9, 12—13,	24—40
பீப்பாய்க் கட்டு ...	27—28
8 பட்டை எஃகு ...	22
எஃகு வில்கட்டு ...	27—31
திரணைக் கம்பி மருக்கி 2 ரெ. ...	22—25
சீமை ...	40—46—49

SEASON.

காலஸ்திதி.

Rainfall.

மழை.—1911ஸூ எப்ரல்மீ 1உயிலிருந்து 1912 ஸூ மார்ச்சுமீ 1உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	36·50	46·86
வால்டேர்	22·00	43·22
காக்கினடா	31·48	39·38
மசூலிப்பட்டணம்	36·13	40·78
நெல்லூர்	37·71	30·65
மதராஸ்	39·36	50·18
கூடலூர்	47·70	52·28
நாகப்பட்டணம்	67·51	55·04
பாம்பன்	29·18	38·25
கொழும்பு	65·35	85·24
திருவநந்தபுரம்	61·50	60·96
கொச்சி	111·51	112·79
கள்ளிக்கோட்டை	99·69	114·55
மங்களூர்	100·98	123·87
மெர்க்காரா	138·34	124·14
ஐதராபாத்	24·98	31·09
ரெய்ச்சூர்	19·40	30·31
பல்லாரி	13·10	19·61
கர்நூல்	17·95	27·69
கடப்பை	23·30	32·66
ஹாஸ்ஸான்	32·87	34·61
பெங்களூர்	29·22	34·58
கொடைக்கானல்	65·11	57·49
உதகமண்டலம்	61·62	...
கோயம்புத்தூர்	25·04	20·34
வேலூர்	34·06	...
சேலம்	24·72	39·81
திருச்சினப்பள்ளி	33·09	32·13
புதுக்கோட்டை	36·69	...
மதுரை	28·33	32·88
திருநெல்வேலி	23·82	27·61

MADRAS: Printed by Thompson & Co. at the Minerva Press
and published by G. A. VAIDYARAMAN & Co., Sunkurama Chetty Street, George Town, Madras.

THE LATE HON. MR. V. KRISHNASWAMI IYER, C. S. I.

காலஞ்சென்ற வி. கிருஷ்ணஸாமி அய்யர்.